கோகுலம்

GOKULAM

ஜூலை '87 ரூ. 2.





கே. சந்தானம்

தோற்றம்: 14.7.1895
மறைவு: 28.2.1980



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.



புகைப்படம்: கே. சீதாராம்

கோகுலம்

1987 ஜூலை மாத இதழ்
மலர் 5 இதழ் 6
தனிப் பிரதி ரூ. 2/—
ஆண்டுச் சந்தா ரூ. 24/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்களுக்கான நல்ல நல்ல புத்தகங்களை அழகிய படங்களுடன் மலிவான விலையில் வெளியிட ஒரு புத்தக டிரஸ்ட் (Children's Book Trust) தமிழகத்தில் தோன்றப் போகிறது என்ற செய்தியைச் சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். அதைப் பார்த்து உங்களைப் போன்ற ஏராளமான சிறுவர் சிறுமியரும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். சிலர், அந்த டிரஸ்ட் எப்போது தொடங்கப் பெறும் என்று கேட்டும் எழுதியிருக்கிறார்கள். அதுபற்றிய விவரங்களை விரைவில் அறிவிப்போம்.

தெலுங்குச் சிறுவருக்குச் சேவை செய்து வரும்பாலலஅகாடமியைப் பாராட்டிப் பலர் எழுதியிருப்பதோடு, அதைப் போன்ற ஓர் அகாடமி நம் தமிழ்நாட்டிலும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற தங்கள் ஆசையையும் வெளியிட்டிருக்கிறார்கள். உங்களுக்கான புத்தக டிரஸ்ட் ஒன்றை நிறுவினாலே போதும்; அதன் மூலம் அந்த அகாடமி செய்யும் சேவைகள் அனைத்தும் உங்களுக்குக் கிடைக்க வழி பிறக்கும்.

கோடை விடுமுறைப் போட்டிகளுக்கு வந்துள்ள விடைகளைப் பார்க்கும்போது ஒரே மலைப்பாக இருக்கிறது! ஒவ்வொரு போட்டியிலும் மிகுந்த ஆர்வத்துடன் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருக்கிறீர்கள். அவை தற்போது நீதிபதிகளின் பரிசீலனையில் இருக்கின்றன. கூடிய விரைவில் முடிவுகளை அறிவிப்போம்.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்




இலந்தை க. இராமசாமி



ஜோசப் ஸ்டாலின்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



எஸ். கோகுலகிருஷ்ணன்



எஸ். வி. லாவண்யா தேவி

பிருந்தாவனக் கவிஞர்கள்




எஸ். சிவராஜ்

பி. முத்து வைரம்



பி. வி. இராஜேந்திர சேதுபதி





வ. செந்தில் குமார்



க. சந்தானம்

நம் நாடு விடுதலை பெறுவதற்காகப் பல வகையிலும் பாடுபட்டவர், தியாகம் செய்தவர் க. சந்தானம் சட்டக் கல்வி கற்றுப் பட்டம் பெற்ற இவர், ஓராண்டு கூடச் சரியாக வக்கீல் தொழில்புரியவில்லை. காந்தி மகாத்மா தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு வக்கீல் தொழிலைத் துறந்தார். பலமுறை சிறை சென்றார். ஒரு தடவை ஜவாஹர்லால் நேருவின் கையுடன் இவருடைய கையையும் சேர்த்து விலங்கு மாட்டி நாபா சமஸ்தான சிறையில் சில நாட்கள் வைத்திருந்தார்கள். இன்னொரு தடவை இவர் சிறையில் இருக்கும்போது, இவருடைய மனைவியும் இவருடைய ஒரே தம்பியும் மரணமடைந்தனர்!

ராஜாஜி திருச்செங்கோட்டிற்கு அருகில் அமைத்த காந்தி ஆசிரமத்தின் செயலாளராக விளங்கிப் பல ஆக்கப் பணிகளைச் செய்தார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியராகவும், தில்லியிலிருந்து வெளி வந்த 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையின் கூட்டாசிரியராகவும், பிறகு சென்னையிலிருந்து வந்த 'ஸ்வராஜ்யா' இதழின் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

நேருஜியின் அமைச்சரவையில் ரயில்வே போக்குவரத்து அமைச்சராகவும், விந்திய பிரதேச லெஃப்டினன்ட் கவர்னராகவும், லஞ்ச ஊழல் தடுப்புக் குழுவின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். அரசியல் சாஸன நிர்மாணத்தில் முக்கிய பங்கு பெற்றவர்.

சிறந்த அறிஞர். தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல எழுத்தாளர். நேர்மையும் வாய்மையும் தூய்மையும் உடைய காந்தி யுகத்தின் உதாரண புருஷர்.



பரிதிமாற் கலைஞர்

சூரியன் = பரிதி, நாராயணன் = மால், சாஸ்திரி = கலைஞன்.

இப்படித் தமது பெயராகிய சூரிய நாராயண சாஸ்திரியை, பரிதிமாற் கலைஞன் என்று முதல் முதலாகத் தனித் தமிழில் வைத்துக் கொண்ட இவர், தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லவர்.

பி.ஏ. தேர்வில் தமிழிலும் தத்துவத்திலும் சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேறினார். தமிழில் முதல்வராகத் தேறியதால், பாஸ்கர சேதுபதி அரசரின் தங்கப் பதக்கத்தைப் பெற்றார். உடனேயே, கிடைத்தது இவருக்கு கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் பதவி.

ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ஜி.யு. போப் இவரது கவிதைகளைப் பாராட்டியதோடு, அவற்றை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தார்.

ஆங்கிலத்தில் உள்ளவை போல தமிழிலும் நிறைய நாடகங்கள் வெளி வர வேண்டுமென்று இவர் ஆசைப் பட்டார். 'மான விசயம்' 'ரூபாவதி', 'கலாவதி' என்ற நாடக நூல்களை இவர் எழுதினார். நாடகக் கலை வளர்ச்சியடைவதற்காக 'நாடகவியல்' என்னும் ஓர் அரிய ஆராய்ச்சி நூலையும், 'மதிவாணன்' என்ற நாவலையும் இவர் எழுதியிருக்கிறார். 'செந்தமிழ் நடைக்கு ஒரு சீரிய எடுத்துக் காட்டு' என்று அந்நாவலைப் புகழ்கின்றனர். இவர் தமது 33—வது வயதிலே காலமாகாதிருந்தால், தமிழ் மொழிக்கு மேலும் பல நல்ல நூல்களை இயற்றித் தந்திருப்பார்.

மின்மினிக் கதைகள்



ஆடே, சொல்லி விடாதே!

ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன், பகல் முழுதும் காட்டிலே ஆடுகளை மேய்ப்பான். சூரியன் மறையும்போது, எல்லா ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு ஊருக்குள் வருவான். ஒவ்வொரு ஆட்டையும் அதன் சொந்தக்காரர் வீட்டிலே சேர்த்துவிட்டுத் தன் குடிசைக்குச் செல்வான்.

ஒருநாள் பொழுது சாயும் நேரத்தில் வழக்கம்போல், ஆடுகளை ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டான். 'பா... பா' என்று அவன் குரல் கொடுத்தவுடனே எல்லா ஆடுகளும் அவன் நின்ற இடத்திற்கு ஓடிவந்தன. ஆனால் ஒரே ஒரு ஆடு மட்டும் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்தது. எவ்வளவோ முயன்றும் அது வரவில்லை.

உடனே சிறுவன் அதைத் துரத்திக் கொண்டு சென்றான். அது அங்கிருந்த மலைச் சரிவில் ஏறி நின்று கொண்டு, இறங்க மறுத்தது.

பொறுமை இழந்த சிறுவன், ஒரு கல்லை எடுத்து, அதைக் குறிபார்த்து எறிந்தான். கல், அதன் கொம்பிலே பட்டு,கொம்பின் முன்பகுதி முறிந்துவிட்டது.

பிறகுதான் அது கீழே இறங்கி வந்தது. அந்த ஆட்டுக்குச் சொந்தக்காரர் மிகவும் பொல்லாதவர். முன்கோபக்காரர். அவரை நினைத்ததுமே அவன் உடல் நடுங்கியது. உடனே அந்த ஆட்டின் காலடியிலே அவன் விழுந்தான்.

"அன்புள்ள ஆடே, நான் உன் கொம்பை முறிக்க வேண்டுமென்று நினைத்துக் கல் எறியவில்லை. எதிர்பாராமல் நடந்துவிட்டது. கொம்பு முறிந்த செய்தியை உன் எஜமானரிடம் தயவு செய்து கூறிவிடாதே! உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்" என்றான்.

அதற்கு அந்த ஆடு, "என் கொம்பை நீ முறித்ததாக நான் அவரிடம்

சொல்லவேமாட்டேன். ஆனாலும், என்னைப் பார்த்ததும், அவர் கண்டுபிடித்து விடமாட்டாரா?'' என்று கேலியாகக் கேட்டது.

இதைக் கேட்டதும், 'மறைக்க முடியாத தவறைச் செய்துவிட்டு, மறைக்கப் பார்க்கிறேனே! நான் ஒரு முட்டாள்!' என்று மனம் வருந்தினான் சிறுவன்.

நன்றி கெட்ட மான்

காட்டிலே கலைமான் ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது, தூரத்தில் வேடர்கள் வரும் சப்தம் கேட்டது.

கலைமான் வேகமாக ஓடி ஒளிந்து கொள்வதற்காக ஓர் இடத்தைத் தேடியது. அதற்குள் வேடர்கள் நெருங்கி வந்துவிட்டனர்.

தலைதெறிக்க ஓடிய மான் திராட்சைக் கொடிகள் அடர்த்தியாக வளர்ந்திருந்த ஓரிடத்திற்குள் புகுந்து ஒளிந்து கொண்டது.

வேடர்கள் இங்குமங்கும் தேடிப் பார்த்தார்கள். மான் எந்த வழியாகச் சென்றது என்று தெரியவில்லை. 'இருந்தாலும் இன்னும் சிறிது தூரம் சென்று பார்க்கலாம்' என்று கூறி அவர்கள் மான் ஒளிந்திருந்த இடத்தை விட்டுச் சிறிது தூரம் சென்றுவிட்டார்கள்.

'அப்பாடா, தப்பித்தோம்!' என்று நினைத்த மான், அருகிலிருந்த திராட்சை இலைகளை நன்றாகக் கடித்துத் தின்னத் தொடங்கியது.



அப்போது, வேடர்கள் மானைக் காணாமல் அந்த வழியாகத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வருவதைப் பார்க்காமல், இலைகளையும் கொடிகளையும் கடித்துத் தின்பதிலே ஈடுபட்டிருந்தது அந்த மான். அதனால் கொடிகள் சரசர என்ற சத்தத்துடன் அசைந்து கொண்டிருந்தன. அதைக் கண்டுவிட்டனர் வேடர்கள்.

உடனே நாலு பக்கங்களிலும் சென்று அதை வளைத்துப் பிடித்தனர்.

அகப்பட்டுக் கொண்ட கலைமான், ''எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். நான் ஒளிந்து கொண்டு உயிர் தப்புவதற்கு உதவிய இலைகளையும் கொடிகளையும் நன்றி கெட்டுக் கடித்தேனே! இப்போது நன்றாக அகப்பட்டுக் கொண்டேனே! எத்தனை நாள் என்னை உயிரோடு விட்டு வைப்பார்களோ!'' என்று எண்ணிக் கண்ணீர் விட்டது.

எமனை அழைத்தது ஏன்?

வயதான ஒரு குடியானவன், காலையிலிருந்து மாலை வரை காட்டிலே மிகுந்த சிரமப்பட்டு விறகு வெட்டினான். வெட்டிய விறகை ஒரு கட்டாகக்



கட்டி வீட்டை நோக்கி எடுத்து வந்தான்.

விறகுக் கட்டை அவனால் தூக்க முடியவில்லை. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. அடிக்கடி நின்று நின்று வந்தான். அப்படியும் முடியவில்லை. ஓரிடத்தில் விறகுக் கட்டைக் கீழே போட்டுவிட்டு, அங்கிருந்த ஒரு கல்லில் அமர்ந்து, தன் தலைவிதியை நொந்து கொண்டான்.

'காலை முதல் மாலை வரை வேலை செய்கிறேன். கிடைக்கிற வருமானம் குடும்பம் நடத்தப் போதவில்லை. அரைவயிறும் கால்வயிறுமாகச் சாப்பிடுகிறோம். மனைவியோ எப்போதும் நோயாளி. பிள்ளைகளோ அடங்காத தறுதலைகள். இந்த நிலைமையில், நான் இன்னும் உயிரோடு இருக்க வேண்டுமா? ஏ, எமதர்மராஜனே, என்னை ஏன் இன்னும் இந்த உலகில் விட்டு வைக்கிறாய்? மேன்மேலும் துன்பப்படவா? தொல்லையை அனுபவிக்கவா? என் உயிரை இப்போதே நீ கொண்டு போனால், உனக்கு எவ்வளவோ புண்ணியமாயிருக்குமே! எமதர்மராஜா! எமதர்மராஜா!'' என்று புலம்பினான்.

அப்போது திடீரென்று அவன் முன்னே தோன்றினான் எருமைக்கடா மீது எமதர்மராஜன்.

''அன்பனே, என்னை நீ அழைத்த காரணம் என்ன?'' என்று கேட்டான்.

எமதர்மராஜனைக் கண்டு திடுக்கிட்டு எழுந்த விவசாயி, நடுநடுங்கி, ''ஒன்றுமில்லை எமதர்மராஜா, இதோ கீழே கிடக்கும் விறகுக் கட்டை என் தலையில் ஏற்றிவிடத்தான் உங்களை அழைத்தேன். தயவு செய்து உதவுங்கள்'' என்றான்.

எமதர்மராஜன் சிரித்தபடி, விறகுக் கட்டைத் தூக்க விவசாயிக்கு உதவிய பின் மறைந்தான்.

ஆசையும் அவதியும்

குரங்குக்கு வெகு நாட்களாக ஓர் ஆசை. அது என்ன ஆசை? நிறைய நிறையத் தேன் குடிக்க வேண்டுமென்பதுதான் அந்த ஆசை.

ஒருநாள், அது ஒரு மரத்தின் கிளையிலே தேன்கூட்டைக் கண்டது. கண்டதும் அதன் நாக்கில் எச்சில் வழியத் தொடங்கியது.

உடனே, மரத்தில் ஏறியது. தேன்கூட்டில் அது கைவைத்ததுதான் தாமதம்; ஏராளமான தேனீக்கள் அதற்குள்ளிருந்து புறப்பட்டு வந்து குரங்கின் முகத்திலும், தலையிலும், உடலிலும், கால்களிலும், நன்றாகக் கொட்டிவிட்டன. வலி தாங்காமல் குரங்கு அலறியது.

''ஐயோ! என்ன இது! தித்திக்கும் தேனைச் சாப்பிட வந்த என்னை இப்படித் துடிதுடிக்கும்படி கொட்டுகின்றனவே! இனிய தேனைச் சேர்க்கும்



இவைகளுக்கு இவ்வளவு பொல்லாத கொடுக்குகளா?'' என்று கேட்டது.

''ஆமாம். எவ்வளவுக்கு எவ்வளவு தேனிலே இனிமை இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு எங்கள் கொடுக்கிலும், விஷம் உண்டு. இதைத் தெரிந்து கொண்டு எங்களிடம் குறும்பு செய்யாமல் ஓடிப் போ, உம்...'' என்றது ஒரு தேனீ.

'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று தலைதெறிக்க ஓடியது குரங்கு.

கருத்து : ஈசாப்

உயர்ந்து நிற்போம்



ஒற்றுமையாய் வாழ்ந்து நாளும்
உயர்ந்து நிற்போமே — நாம்
உலகையெலாம் ஒருங்கிணைக்கும்
கல்வி கற்போமே!


வேற்றுமையில் ஒற்றுமையை
விளைத்திடுவோமே — அதற்கு
விரிந்தமனம் கொண்டு நாளும்
உழைத்திடுவோமே!


காக்கைகுருவி போலநாமும்
கலந்திருப்போமே — நாளும்
கனிவுடைய மொழிகள்பேசிக்
களித்திருப்போமே!

ஆக்கம்தரும் அறிவியலை
ஆழ்ந்து கற்போமே — இந்த
அவனியெலாம் தழைத்துயர
வாழ்ந்து நிற்போமே!

—ஆ. ஜோசப்ஸ்டாலின்

பழமொழிப் புதிர்





இங்குள்ள படங்கள் ஒவ்வொன்றும் ஒரு பழமொழியைக் குறிக்கிறது. கண்டு பிடியுங்கள்.

(விடை 14 ஆம் பக்கம்)

என் குழந்தைப் பருவம்





டாக்டர் லலிதா காமேஸ்வரன்

டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் 3½ வயதுச் சிறுமியாக இருந்தபோதே மகாத்மா காந்தியை நேரில் பார்த்தவர். அவர் திரட்டிய ஹரிஜன நலநிதிக்குத் தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும், கை வளையல்களையும், கழற்றிக் கொடுத்தவர். சின்னஞ்சிறு குழந்தையாக இருந்த இவரை அப்போது அன்போடு வாரி அணைத்து ஆசி வழங்கினார் மகாத்மா காந்தி. அதன் பிறகு, இவர் பலருடைய ஆசிகளையும் பாராட்டுக்களையும் தொடர்ந்து பெற்றுக் கொண்டேயிருக்கிறார்.

தற்போது இவர், தமிழக மருத்துவத்துறை இயக்குநராகப் பணியாற்றுகிறார். இதற்கு முன்பு சென்னை பொது மருத்துவமனைக்கும், சென்னை மருத்துவக் கல்லூரிக்கும் 'டீனாக' விளங்கினார்.


இவர் பல விருதுகளைப் பெற்றிருக்கிறார். மருத்துவத்துறையில் இவர் செய்த சாதனைகளுக்காக இந்திய மருத்துவக் கவுன்சில் வழங்கியது, ஹரிஓம் ஆசிரமம் அலெம்பிக் விருது. நாகேந்திர நாத் விருது, மூக்கர்ஜி விருது, பி. சி. ராய் தேசிய விருது எனப் பல விருதுகளையும் இவர் பெற்றிருக்கிறார்.

தமிழகப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் செனேட், சிண்டிகேட் உறுப்பினராகவும், மருத்துவத்துறையைச் சார்ந்த பல்வேறு குழுக்களுக்குத் தலைவராகவும், உறுப்பினராகவும் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார். பல்கலைக்கழகக் கமிஷன்களின் தலைவராகவும் தொண்டு புரிந்துள்ளார்.

நான் பிறந்தது மதுரையில். ஆங்கில நாள் கணக்கின்படி என்னுடைய பிறந்த நாளும் ஜூலை 27. என் தந்தையார் நாவலர் சோம சுந்தர பாரதியார் அவர்களின் பிறந்த நாளும் ஜூலை 27. என் பெற்றோருக்கு நான்தான் கடைசிக் குழந்தை.

நான், மதுரையில் 1930—ஆம் ஆண்டில் பிறந்தாலும் எனக்கு முதல் முதலில் என் வாழ்க்கையில் நிகழ்ந்ததாக நினைவுக்கு வரும் நிகழ்ச்சிகள் அனைத்தும் அண்ணாமலை நகருடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளே!

எனக்கு அப்போது மூன்று வயது.



சுமார் ஒன்றரை ஆண்டு காலம் அண்ணுமலை நகரில் இருந்தேன். ஆனல், பல ஆண்டுகள் தங்கியிருந்ததைப்போன்ற ஓர் உணர்வு. ஏனென்ருல், பசுமையாக மனத்தில் பதிந்த பல நிகழ்ச்சிகள் இடம் பெற்ற காலம் அது!

விடுதலை இயக்கம், தமிழ் மறுமலர்ச்சி இயக்கம், சமுதாய சீர்திருத்த இயக்கங்கள் ஆகிய பல ஆற்று ஒழுக்குகளின் அலைகள் சதா வீட்டில் வந்து மோதிக் கொண்டிருந்த சூழ்நிலையில் பிறந்து வளர்ந்து வந்தவள் நான்.

நான், என் தமக்கை மீனு, என் தந்தையாரின் முதல் மனைவி வழிப் பேரன்கள் — சோமசுந்தரம், ஜவாகர் எல்லோரும் ஒன்ருக வளர்ந்தோம். எங்களைத் தவிர, வீட்டில் அநேகமாக, எப்போதும் பல துறை மாணவர்களும் இருப்பார்கள். மதுரையில் இருந்து ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த மாணவர் திரு நடராஜன் இசைக் கல்லூரியில் படிக்க விரும்பியதால் அவரை அண்ணுமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியில் சேர்த்து, எங்கள் வீட்டிலேயே தங்கிப் படிக்கச் சொல்லியிருந்தார் தந்தை.

என் தாயார் திருமதி வசுமதி அம்மையாரின் சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருவட்டாறு. என் தாயார் சிபாரிசில் பவானி என்ற நாயர் வகுப்பைச் சேர்ந்த அம்மையாரும், பாலாம்பாள் என்ற பிராமண வகுப்பைச் சேர்ந்த அம்மையாரும் எங்களுடன் வீட்டிலேயே தங்கி இசைக் கல்லூரியில் பயின்ருர்கள். தமிழ்த் துறை மாணவர்களில் பலர் அநேகமாக காலை முதல் இரவு படுக்கப் போகும் வரை எங்களுடன் வீட்டிலேயேதான் இருப்பார்கள். பேராசிரியர்கள் திரு வெள்ளை வாரணனர், திரு ஏ.சி. செட்டியார், திரு ஆலால சுந்தரஞ் செட்டியார், ராஜரத்தினம் அம்மையார், ராஜாமணி அம்மையார் எல்லோரும் எங்கள் வீட்டிலேயே பெரும் பொழுதைக் கழிப்பார்கள். முதலில் தந்தையார் உணவருந்தி விட்டுப் போய் விடுவார்கள். பிறகு நாங்கள் அனைவரும் ஒன்ருகப் பந்தியில் சாப்பிடுவோம். நாள்தோறும் பண்டிகை போல்தான், இல்லச் சூழ்நிலை இருந்தது. என் தந்தையார் கொஞ்சம் நடக்கலாம் என்று மாலையில் வெளியில் சென்ருலும் சரி, அல்லது என் தாயார் கோவிலுக்கோ, மகளிர் மன்றத்துக்கோ போனலும் சரி, ஒரு கூட்டமே உடன் செல்லும். அந்தக் கூட்டத்தில் எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து கொள்வோம். யாராவது ஒருவர் எங்க்ள் கையைப் பிடித்துக் கொண்டு நடப்பார்கள். அவர்கள் எல்லோரும் வயதில் பெரியவர்களாக இருந்ததால், எங்களுக்கு அவர்கள் பேசுவதை எல்லாம் கேட்டு பலப் பலச் செய்திகளை மிகச் சிறிய வயதிலேயே தெரிந்துகொண்டு கேள்வி ஞானத்தைப் பெற வாய்ப்பிருந்தது.

நாள்தோறும் மாலையில் தந்தையார் காற்று வாங்கும் எண்ணத்துடன் நடப்பார்கள். நாங்களும் உடன் செல்வோம். வீட்டிலிருந்து புறப்படும் போது ஐந்து அல்லது ஆறு பேர்களாகப் புறப்படுவோம். கொஞ்சதூரம் போவதற்குள் வேறு மாணவர்களும், சக ஆசிரியர்களும்கூட வந்து சேர்வார்கள். அன்றைய செய்தித் தாள்களில் வந்த அரசியல் செய்திகளைப் பற்றி முதலில் பேச்சுத் துவங்கும். காந்தியடிகள், சுபாஷ் சந்திர போஸ், வல்லபாய்பட்டேல், ராஜாஜி போன்றவர்களின் கூற்றுக்களைப் பற்றிப் பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்வார்கள். தீவிரமான வாதங்களும் சர்ச்சைகளும் நடக்கும். பேசிக் கொண்டே ஒரு

மைல் தூரம் நடந்து போய்விடுவோம். திரும்ப வருவதற்குள் இருபது, முப்பது பேரைக் கொண்ட ஒரு பெருங் கூட்டமாகவே மாறி விடும் — எங்கள் காற்று வாங்கும் படலம்! சுமார் ஆறு மணி அளவில் நாங்கள் வீட்டிற்கு வந்தாலும் மாணவர்கள் உடனே போக மாட்டார்கள். தந்தையாரைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு பல பொருட்களைப் பற்றி விளக்கங்கள் கேட்பார்கள்.

மாணவர்கள் விருப்பத்திற்கிணங்கி தந்தையார் சில மாதங்கள் மாலை ஆறு மணி முதல் எட்டு மணி வரை ஒவ்வொரு நாளும் ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் ஒவ்வொன்றை எடுத்து, அதன் பொருள் நயம், இலக்கிய நயம் பற்றிப் பேசுவார்கள். இதைப் போலவே தமிழ் இலக்கியங்களிலும் பல நூல்களைப் பற்றிக் கேட்போர் வேட்கையறிந்து எடுத்துச் சொல்வார்கள். இப்படிப்பட்ட விளக்க நிகழ்ச்சிகளின்போது, என் தாயாரும் ஒரு மாணவியைப்போல்வந்து கதவோரத்தில் உட்கார்ந்து கேட்பார்கள். அதனால், நாங்களும் அங்கேயே இருந்து கேட்டுக் கொண்டிருப்போம். இப்படிக் கேள்வி ஞானத்தில் நான் தெரிந்து கொண்ட செய்திகள் பல.

காந்தியடிகளைத் தமிழ்நாட்டுக்கு வரவழைத்து ஹரிஜன நலநிதி சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைத் தந்தையார் முன்னின்று நடத்தினார்கள். சிதம்பரத்தில் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 3½ வயதும் 4½ வயதும் ஆகிய என்னையும், என் மூத்த சகோதரி மீனாவையும், என் தாயாரையும் தந்தையார் நல்ல கனமான தங்கச் சங்கிலிகள் அணிவித்து கூட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். போவதற்கு முன்னாலேயே எங்களிடம், "இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதில் நான் முக்கிய பங்கேற்றிருக்கிறேன். என் குடும்பத்தினரின் செயல்பாடு மற்ற எல்லோருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். முதலில் உங்கள் இருவரையும் மேடை மேல் ஏற்றி விடுவேன். உங்கள் தங்கச் சங்கிலிகளைக் கழற்றிக் காந்தித்தாத்தாவிடம் கொடுத்துவிட வேண்டும்" என்று சொல்லியிருந்தார்கள். என்னையும் என் சகோதரி மீனாவையும் மேடை மேல் ஏற்றிவிட்டார்கள். கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது. இருவரும் சங்கிலிகளைக் கழற்றிக் காந்தியடிகளிடம் கொடுத்தோம். மேடை மேலேயே நின்று கொண்டிருந்தோம். "என்ன?" என்று தந்தையார் கேட்டார்கள். என் சகோதரி மீனா, "எங்கள் வளையல்களையும் கொடுத்து விடுகிறோம்" என்றாள். தந்தையார் மிகுந்த மகிழ்ச்சியுடன், "கொடுத்து விடுங்கள்" என்றார்கள். இருவரும் வளையல்களையும் கொடுத்துவிட்டோம். காந்தியடிகள் மிகுந்த உற்சாகத்துடன் தன் கழுத்தில் இருந்த கதர் மாலையைக் கழற்றி மீனாவின் கழுத்தில் அணிவித்தார். எங்கள் இருவரையும் இரு கைகளிலும் வாரி அணைத்து, "இந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு இருக்கும் அன்புணர்ச்சியும் கொடை உள்ளமும் நம் நாட்டில் பெரியவர்கள் அனைவருக்கும் வந்துவிட்டால், இந்த நாட்டில் எந்தப் பிரச்னையும் இருக்காது." என்று சொல்லிப் பாராட்டி ஆசி கூறினார். பின்னர் என் தாயாரும் மேடை மேல் ஏறி எல்லா நகைகளையும் கழற்றிக் கொடுத்தார்கள். பிறகு இரவு வீட்டிற்குப் போகும்போது என் தாயார் எங்களை அணைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள்.

தந்தையாரும் இன்னும் சிலரும் சேர்ந்து அண்ணாமலை நகரில் ஹரி



ஜனக் குடியிருப்பில் துவக்கப் பள்ளி ஒன்றைத் துவக்கினார்கள். எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்று சொல்லி, எங்களையும் அந்தப் பள்ளியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். தலைமை ஆசிரியர் எங்களிடம், "உங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்றால் என்னுடைய அறையில் உள்ள பானையில் எடுத்துக் குடித்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார். இந்தச் செய்தியைக் கேட்டவுடன் தந்தையார் மிகவும் வெகுண்டார். "சாதி வேற்றுமை உணர்ச்சிகள் ஒழிய வேண்டும் என்பதற்காகத்தானே இவ்வளவு முயற்சி எடுக்கிறோம். தலைமை ஆசிரியரே இப்படிச் செய்தால் எப்படி?" என்றார். எங்களிடம் கண்டிப்பாக, "தண்ணீர் குடிக்க வேண்டும் என்றால் எல்லாக் குழந்தைகளும் எங்கே குடிக்கிறார்களோ அங்கேதான் நீங்களும் குடிக்க வேண்டும். தனியாகத் தலைமை ஆசிரியர் அறையில் சென்று நீங்கள் மட்டும் எந்தச் சலுகைகளும் பெறக் கூடாது" என்று சொல்லி விட்டார்.

குறுகிய காலம்தான் அண்ணாமலை நகரில் இருந்தோம். என் சகோதரிக்கு ஐந்து வயதும் எனக்கு நான்கு வயதும் ஆனவுடன் கான்வென்ட் பள்ளியில் படிப்பதற்காகப் பாட்டியுடன் மதுரைக்கு அனுப்பப்பட்டோம். எனினும், அந்தக் குறுகிய காலம் மிகவும் முக்கியமான, மனத்தில் ஆழமாகப் பதிந்த ஒரு காலமாக அமைந்துவிட்டது.


எங்களுடன் உட்கார்ந்து எங்களைச் சாப்பிட வைக்கும்போதே பவானி அம்மாளும், பாலாம்பாள் அம்மாளும் பல நாட்டுப்புறச் சிறு கதைகளை உரைப்பார்கள். எங்கள் தொல்லை சகிக்காமல் திரு வெள்ளை வாரணனார், தினமும் ஒரு கதையாக அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாற்றையும் பெரிய புராணக் கதைகள் அனைத்தையும் எங்களுக்குச் சொல்வார்.

இசைக் கல்லூரி மாணவர் நடராஜன் எங்களை அழைத்துக்கொண்டு போய் தோட்டத்தில் உட்கார வைத்து சிறு சிறு பாடல்களைச் சொல்லித் தருவார். அவ்வப்போது உடனுக்குடன் சமயத்திற்கேற்ற சிறு பாடல்களை உருவாக்கி உடனே அதற்கு ஒரு மெட்டுச் சேர்த்துப் பயிற்றுவிப்பார். அபூர்வமான ஓர் அடுக்கு ரோஜா மலர்ச் செடி ஒன்றை தந்தை பெங்களூரில் இருந்து வாங்கி வந்தார்கள். தொட்டியில் இருந்தபடியே அந்தச் செடி அரும்பு விட்டது. தினமும், காலையிலும் மாலையிலும் போய் அந்த அரும்பைப் பார்த்துவிட்டு வருவோம். ஒருநாள் அது அழகாக மலர்ந்துவிட்டது. அன்று மாலை, நடராஜன் அவர்கள் எங்களை உட்கார வைத்து நான் பாடுவதைப் போல் கற்பனையாக, "ஒய்யாரப் புஷ்பம், ஓடி வா மீனா" என்று ஒரு பாட்டைக் கற்றுத் தந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் மதுரையில் மருத்துவக் கல்லூரிப் பேராசிரியையாக இருந்த போது ஒரு மகளிர் பள்ளி விழாவுக்கு என்னை அழைத்திருந்தார்கள். காரில் இருந்து இறங்கித் தலைமை ஆசிரியையுடன் பள்ளிக்குள் நுழைந்தேன். "முதல் பகுதி துவக்கப்பள்ளிப் பகுதி. இங்கே இப்போது இசை வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது" என்று சொல்லி, என்னை அழைத்துக்கொண்டு போனார்கள். வகுப்பில் இருந்த மாணவிகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து "ஒய்யாரப் புஷ்பம், ஓடி வா மீனா" என்று பாடிக் கொண்டிருந்தார்கள். அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றேன்.



இசை ஆசிரியையிடம், "உங்களுக்கு இந்தப் பாட்டு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன். "இதுவா? இது, பசுமலைப் பள்ளி இசை ஆசிரியர், நடராஜ பாகவதர் இயற்றிய பாடல். அவர் குழந்தைகளுக்கென பல சிறு பாடல்கள் இயற்றி, இசை கூட்டி, புத்தகம் ஆக அச்சிட்டிருக்கிறார்," என்றார்கள். வாழ்க்கையின் விநோதங்களையும், இறைவனின் வேடிக்கை விளையாட்டுக்களையும் எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.



என் தந்தை, எப்போதும், நியாயத்திற்காகப் போராடுபவர் என்றால், என் தாயார் கருணையே வடிவானவர்கள். என் தந்தையாரின் உறவினர்கள் கூட, ஏதாவது உதவி வேண்டுமென்றால், தந்தையிடம் போக மாட்டார்கள். என் தாயிடம்தான் வந்து கேட்பார்கள். யாராவது வந்து "அல்லல் படுகிறேன்!" என்று அழுதால் என் தாயார் மனம் கேட்காது. உடனே உருகி விடுவார்கள். தன் செலவைக் குறைத்துக் கொண்டும், தன் பொருள்களைத் தியாகம் செய்தும், சில சமயங்களில் தந்தைக்குச் சொல்லாமல் தன் நகைகளை விற்றுக் கூட உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உதவுவார்கள். "ஏனம்மா, இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டால், "இறைவனருளால் நாம் நன்றாக வாழும் போது, நம்மைச் சார்ந்தவர்கள் கஷ்டப்படுவதைச் சும்மா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது" என்று சொல்வார்கள்.

நாங்கள் பசுமலையில் காசி — கன்னியாகுமரி நெடுஞ்சாலையின் மேல் வீடு கட்டி வாழ்ந்தோம். மதுரையில் இருந்து திருப்பரங்குன்றத்துக்குப் போவதற்கு அதுதான் வழி. ஆண்டுதோறும்,திருப்பரங்குன்றத்தில்சுப்பிரமணியர் திருக்கல்யாண விழா சிறப்பாக நடைபெறும். திருக்கல்யாண மண்டபம் எங்கள் வீட்டில் இருந்து ஒரு பர்லாங் தூரம்தான் இருந்தது. விழாவுக்குப் பெற்றோர்களாகிய மீனாட்சி— சொக்கநாதர் ஆண்டுதோறும் மதுரைக் கோவிலில் இருந்து வர வேண்டும். உற்சவ மூர்த்திகளை மதுரையில் இருந்து பல்லக்கில் வைத்து கல்யாண மண்டபத்திற்குக் கொண்டு வருவார்கள். மீனாட்சி — சொக்கநாதருக்கு மரியாதை செய்ய என் தாயார் முதல் நாளிலிருந்தே தயார் செய்யத் தொடங்கி விடுவார்கள். வீட்டு வாசலில் மீனாட்சி சொக்கநாதரை நிறுத்திக் கற்பூர ஆரத்தி எடுத்து மற்ற மரியாதைகள் எல்லாம் செய்து வழி அனுப்புவார்கள். பக்கத்துக் கிராமத்து மக்கள் எல்லோரும் "வக்கீலம்மா வீட்டுக்குப் போனா மீனாட்சி சொக்கநாதரை நன்றாகப் பார்க்கலாம்" என்று சொல்லிக் கொண்டு எங்கள் வீட்டில் கூடுவர். தந்தையார் புராதனமான பெரிய கோவில்களுக்கு அழைத்துக் கொண்டு போவார்கள். நுழையும் போதே அந்தக் கோவிலைப் பற்றி இலக்கியத்தில், புராணங்களில் வரும் செய்திகளை எங்களுக்குச் சொல்லிக் கொண்டே வருவார்கள். கோவிலுக்குள் பாதி தூரம் போவதற்குள் எங்களைச் சுற்றிக் கதை கேட்பதற்காக ஒரு கூட்டமே கூடிவிடும்.

ஒவ்வோர் ஆண்டும், கோடை விடுமுறையில் முழுமையாக மூன்று மாதத்திற்கு, பெரிய வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொடைக்கானலில் தங்குவோம். மார்ச் 20 ஆம் தேதி முதல் அநேகமாக ஜூன் 4, 5 தேதி வரை தங்கியிருப்போம். அப்போது மூத்த சகோதரர் இராஜாராம் பாரதி, இளைய சகோதரர் இலக்குமிதரன் பாரதி, மூத்த சகோதரி லக்ஷ்மி பாரதி இவர்களுடைய குழந்தைகள், முடிந்த வரை பெரியவர்களுடன் வசதிப்படும் போதெல்லாம் கொடைக்கான



லுக்கு வருவார்கள். வீடு முழுவதும் ஆட்களாகத்தான் இருக்கும். ஒரே கும்மாளமாக இருக்கும். நிறையக் குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்தவுடன் வேடிக்கையும் விளையாட்டும் சத்தமும் ஓயாமல் இருக்கும். மதிய உணவு முடிந்தவுடன் பெரியவர்கள் எல்லோரும் ஓய்வெடுக்க எண்ணுவார்கள். ஆனால், நாங்கள் எல்லோரும் சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருப்போம்.

"கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கலாம் என்றால் இப்படித் தொல்லைப்படுத்துகிறீர்களே? கொடைக்கானலில் வெயிலில் விளையாடினால் பாதகமில்லை. எல்லோரும் வெளியில் போய் விளையாடுங்கள் என்று எங்களைத் தோட்டத்திற்குள் விரட்டி அடிப்பார்கள். ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு புதுமையான விளையாட்டு வேண்டும் என்று ஆலோசனை செய்வோம்.

ஒருநாள் என் மூத்த தமக்கை லக்ஷ்மி பாரதியின் மகன் லக்ஷ்மிகாந்தன் பாரதி (முன்னாள் செயலர்) "நாம் வீர பகத்சிங் வரலாற்றை நாடகமாக நடிப்போம்" என்றார். எல்லோரும் சரி என்றோம். லக்ஷ்மி காந்தன் பாரதியின் தமக்கை மஹாலக்ஷ்மி, என்னை விட ஆறேழு வயது மூத்தவர்கள். அப்போது உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள். நான்தான் பகத்சிங் ஆக இருப்பேன் என்றார்கள். "சரி" என்று எல்லோரும் விட்டுக் கொடுத்தோம். வெள்ளைக்கார நீதிபதி, சிப்பாய், காவலாளி என்று மற்றவர் ஒவ்வொருவருக்கும் ஒரு பாத்திரம் வழங்கப்பட்டது.

"பகத்சிங்கிற்குத் தூக்கு தண்டனை விதிக்கிறேன்" என்று வெள்ளைக்கார நீதிபதி சொன்ன உடன் மஹாலட்சுமி கழுத்தில் ஒரு கயிற்றைச் சுற்றிச் சாம்பிராணி மரக்கிளையில் கட்டி, மேஜை மேல் நிறுத்தி, 'வீரசுதந்திரம்! வந்தே மாதரம்!' என்றெல்லாம் கோஷங்கள் போட்டு, மேஜையை எல்லோருமாக இழுத்தோம். மஹாலட்சுமியின் கழுத்தில் கயிறு நிஜமாகவே சுருங்க ஆரம்பித்துவிட்டது. மஹாலட்சுமி மயக்கமடைந்து விட்டார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் எல்லோரும் உரத்த குரலில் பெரியவர்களை எல்லாம் "உடனே வாங்க! வாங்க!" என்று கூக்குரலிட்டோம். அடித்துப் புடைத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் ஓடி வந்தார்கள். உடனே கயிற்றை அவிழ்த்து, மஹாலட்சுமியைப் படுக்க வைத்து, தண்ணீர் தெளித்து, மயக்கம் தெளிய வைத்தார்கள். "விளையாட்டு விளையாகி விட்டதே! இனிமேல் நீங்கள் யாரும் வெளியில் விளையாட வேண்டாம்! எங்களுக்குத் தூக்கம் கெட்டாலும் பரவாயில்லை. வீட்டிற்குள் எங்கள் கண் முன்னாலேயே விளையாடுங்கள்" என்று சொல்லி விட்டார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

பழமொழிப் புதிர் விடை:

புதிர் 15: பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது.

புதிர் 16: முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல்


(அ) சித்திரச் செய்திகள்

தேனீ மனிதர்



ஐக்கிய அமெரிக்காவில் மாக்ஸ் பெக் என்னும் 21 வயது மாணவர் தன் உடலில் 10 கிலோ எடையுள்ள சுமார் 70,000 தேனீக்களைத் தங்க வைத்துக் கொண்டு உலக சாதனை புரிந்தார். இவ்வளவு தேனீக்கள் உடலில் ஒட்டிக் கொண்டிருக்க அவர் உடலின் பல இடங்களில் ராணித் தேனீக்களை வைத்துக் கொண்டிருந்தார். இதற்கு முன் உலக சாதனை 35,000 தேனீக்கள்தாம்!

உயிர் தப்பிய குழந்தை



ரஷ்யாவில் துபிலிசி நகரில் 8 வது மாடியில் உள்ள ஜன்னல் வழியாக 3 வயதுக் குழந்தை ஒன்று தவறி விழுந்தது. அது தலைகுப்புறக் கீழே விழுந்த போது துணிகள் உலர்த்துவதற்காகக் கட்டப்பட்டிருந்த கம்பியில் அதன் சட்டை மாட்டிக் கொண்டது. குழந்தை அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. உடனே அங்கே இருந்தவர்கள் குழந்தையைக் காப்பாற்றி விட்டனர்!

சவப் பெட்டியில் 3 தடவை



கென்யாவில் 60 வயதான முஸ்யோகா முடாடா என்பவர் இறந்துவிட்டார் என்று இறுதிச் சடங்குக்காகச் சவப்பெட்டிக்குள் வைத்து மூடினார்கள். ஆனால், இறந்தவர் கண் விழித்துப் பார்த்துத் தமக்குச் சாப்பாடு வேண்டும் என்று கேட்டார். இது முதல் தடவை அல்ல; இதற்கு முன்பு இரண்டு தடவைகள் இறுதிச் சடங்கின் போது சவப்பெட்டியிலிருந்து கண் விழித்துச் சாப்பாடு கேட்டார்!

சிங்கங்களுடன் 50 நாள்



தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 28 வயதான மைக்கேல் டர்லாக் என்பவர் பிரிட்டோரியா அருகில் உள்ள ஒரு மிருகக்காட்சி சாலைக்கு நிதி திரட்ட புதிதாக ஒரு சாதனை புரிந்தார். ஒரே கூண்டில் 7 சிங்கங்களுடன் 50 நாட்கள் தங்கியிருந்தார் அவர்!

தங்கப் பல் நாய்




யூகோஸ்லாவியாவில் போலீஸ் துறையில் இருந்த 18 மாத வயது கொண்ட ஒரு நாய், கூண்டுக் கம்பியில் மோதியதில் அதன் ஒருபல் உடைந்துவிட்டது. உடனே, அந்த நாய்க்குத் தங்கத்தால் பல் தயாரித்துப் பொருத்திவிட்டார்கள்! தங்கப்பல் திருடு போகாமல் இருக்க வேண்டும்!

மூக்குப் பொடி சாம்பியன்



பிரிட்டனில் இந்த ஆண்டு மூக்குப்பொடி போட்டி நடந்தது. அதில் ஸ்வீடன் கோட்ஸே என்னும் வாலிபர் கலந்து கொண்டு மூக்குப் பொடி சாம்பியனாக வெற்றி பெற்றிருக்கிறார். அவர் தொடர்ச்சியாக 50 சிட்டிகை மூக்குப்பொடி உறிஞ்சி சாதனை புரிந்தார்., ஒரு தும்மல் கூட இல்லையாம்!


சமர்த்து ஓவியர்




பிரிட்டனில் ஸ்டீபன் பாக்ஸ் என்னும் ஓவியர் கரன்ஸி நோட்டுக்களை ஓவியங்களாகத் தீட்டுகிறார். நோட்டின் அசல் மதிப்பை விடப் பல மடங்கு அதிக விலைக்கு அந்த ஓவியங்களைப் பலரும் வாங்கிச் செல்லு கின்றனர். அவர் நடத்திய ஒரு கண் காட்சியில் 5 பவுண்டு நோட்டின் படத்துக்கு 500 பவுண்டு விலை கிடைத்தது! ஆனால் பிரிட்டிஷ் மத்திய வங்கி, இந்த ஓவியரின் செய்கை சட்டவிரோதமானது என்று வழக்குத் தொடர்ந் திருக்கிறது!

உங்களுக்குத் தெரியுமா? முதல் ஒலிம் பிக் பந்தயம் ஒரே ஒரு நாள் மட்டும் நடை பெற்றது. நிகழ்ச்சியில் 186 கெஜம் ஓட்டப் பந்தயம் மட்டுமே இடம் பெற்றது. கி.மு. 1370 இல் கிரேக்க நாட்டில் முதன் முத லில் ஒலிம்பிக் பந்தயம் ஆரம்பமானது.

— ஆர். எஸ். சுப்பிர மணியன்.





டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் பெட்டியி லுள்ள ஒரே லைன் மூலம் அதிகபட்சம் 2700 டெலிபோன் கால்களைத்தான் இப் பொழுது கேட்க முடியும். சமீபத்தில் ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு டெலிபோன் கருவி மூலம் 10,800 டெலிபோன் கால்களை ஒரே சமயத்தில் கேட்க முடியுமாம்!

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

அபூர்வ நண்பர்கள்



கிரேக்க நாட்டுக் கதை

அவன் ஒரு கைதி!

ஆம், கைதிதான்! ஆனால் அவன் எதற்காகக் கைது செய்யப்பட்டான்?

கொள்ளை அடித்ததற்காகவா?

இல்லை.

கொலை செய்ததற்காகவா?

அதுவும் இல்லை.

அப்படியானால், அவன் யாரை யாவது கொலை செய்ய முயன்றானோ?

அதெல்லாம் ஒன்றுமில்லை.

அப்படியானால், எதற்காக அவனைக் கைது செய்தார்கள்?

அவனுக்கு அரசரின் போக்கு பிடிக்கவில்லை. அரசன் செய்து வரும் கொடுமைகளை அவன் பகிரங்கமாகப் பேசினான். கொடுங்கோல் ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்று மக்களிடம் கூறினான்.

இதனால்தான் அவன் இப்போது கைதியாக நிற்கிறான். 'ராஜத்துரோகி' என்று அவன் மீது குற்றம் சாட்டப் பட்டிருக்கிறது.

அரசன் முன் அவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அரசன் அவனைப் பார்த்தான்.

"ஏ ராஜத் துரோகி! நீ எம்மைப் பற்றிக் கேவலமாகப் பேசினாயாமே! உண்மையா?"

"உங்களைப் பற்றி நான் கேவலமாகப் பேசவில்லை. உங்களுடைய அரசாட்சியைப் பற்றித்தான் கேவலமாகப் பேசினேன்!"

"என்ன! எம்மைப் பற்றிப் பேசினால் என்ன? எம்முடைய ஆட்சியைப் பற்றிப் பேசினால் என்ன? இது ஒரு பெருங் குற்றம் என்பது உனக்குத் தெரியுமா?"

"கொடுங்கோல் ஆட்சியை நான் எதிர்த்தேன். அதைக் குற்றம் என்று நீங்கள் கூறுகிறீர்கள்! நாட்டுக்காக நான் பாடுபட்டேன். அதை நாச வேலை என்று நீங்கள் கருதுகிறீர்கள். தேசத்திற்காக நான் உழைத்தேன். அது மிகவும் தீமையானது என்று நீங்கள் தீர்மானம் செய்கிறீர்கள்..."

"சட்.... நிறுத்து! உனக்கு என்ன திமிர்! நீ செய்த குற்றத்திற்கு என்ன தண்டனை தெரியுமா? தூக்குத் தண்டனைதான்!"

"அதைப் பற்றி நான் கவலைப்பட

வில்லை. சாவதற்குத் தயாராகவே வந்திருக்கிறேன்.''

''உனக்கு என்ன துணிச்சல்.....! சரி, உன்னுடன் நாம் பேச விரும்பவில்லை. உனக்குத் தூக்குத் தண்டனை விதித்து இருக்கிறோம்'' என்று அரசன் ஆத்திரத்துடன் கூறிவிட்டு, ''இவனைக் கொண்டு செல்லுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அதேசமயம் ஒரு காவற்காரன் அங்கு வந்து, ''அரசே, வணக்கம். யாரோ ஒருவர் வாயிலில் காத்திருக்கிறார். தங்களைக் காண வேண்டுமாம்'' என்று கூறினான்.

''யாரது....? சரி, உள்ளே வரச் சொல்'' என்று உத்தரவிட்டான் அரசன்.

உள்ளே வந்தான், ஒரு வாலிபன். அவனைக் கண்டதும், கைதியாக இருந்தவன், ''நண்பா!'' என்று ஆனந்தத்துடன் வரவேற்றான்.

''ஆ! உன்னைத் தேடி....'' சரியாக வாக்கியத்தை முடிக்கவில்லை வந்தவன்.

அதற்குள், அரசன் வந்தவனைப் பார்த்து, ''நீ யார்? எதற்காக இங்கே வந்தாய்? என்ன விஷயம்? உடனே, சொல். உம்....!'' என்று மட மட வென்று கேட்டான்.

''அரசே, இதோ கைதியாக நிற்பவன் என்னுடைய நண்பன்; மிகவும் உத்தமன். உங்களை மிகவும் வேண்டிக் கொள்கிறேன். தயவு செய்து இவனை விடுதலை செய்யுங்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து....''

''போதும் நிறுத்து. இது அரச சபை, தயவு தாட்சண்யத்திற்கெல்லாம் இங்கு இடமே கிடையாது. அவனை விடுதலை செய்ய முடியாது. அவனுக்குத் தூக்குத் தண்டனை விதித்தாயிற்று.''

''என்ன! தூக்குத் தண்டனையா? என் அருமை நண்பனுக்கா! ஐயோ! அவனைப் போன்ற ஓர் உத்தமனை இந்த உலகத்தில் பார்க்கவே முடியாதே! அரசே, அவனுக்குத் தூக்குத்தண்டனை வேண்டாம். கருணை காட்டுங்கள்.''

''தண்டனை விதித்தது விதித்தது தான்! கடவுளே நேரில் வந்தாலும் மாற்ற முடியாது. ஆனால் ஒன்று மட்டும் செய்யலாம். இறப்பதற்கு முன்னால் உன் நண்பனுக்கு விருப்பமானதைக் கேட்கச் சொல். முடியுமானால் தருகிறேன்.''

இதைக் கேட்டதும் கைதி அரசனைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான்.

''எனக்கு இப்போது ஒரே ஓர் ஆசை தான் இருக்கிறது. சாவதற்கு நான் பயப்படவில்லை. ஆனால், அதற்கு முன்னால் ஊருக்குச் சென்று ஒரு தடவையாவது என் அருமைத் தாயையும், அன்புத் தந்தையையும் பார்த்து விட்டு வர வேண்டும்.''

இதைக் கேட்டதும் அரசன் உரக்கச் சிரிக்க ஆரம்பித்தான்.

''வீட்டுக்குப் போகிறானும்! அப்புறம் திரும்பி வந்து உயிரைக் கொடுக்கிறானும்! என்னை ஏமாளி என்று நினைத்து விட்டாயா? உன்னை இவ்வளவு கஷ்டப்பட்டுப் பிடித்து வந்தது எதற்காக? திரும்பவும் உன் இஷ்டம் போல் விடுவதற்காகவா?''

''இல்லை, இல்லை. என் பேச்சை நம்புங்கள் அரசே. நிச்சயம் வந்து விடுவேன்.''

''என்ன! எதிரியை நம்புவதா! ஒரு நாளும் முடியாது.''

அரசன் இப்படிக் கூறியதும் கைதியின் நண்பன், ''அரசே அவனை நம்புங்கள். இந்த வேண்டுகோளையாவது பூர்த்தி செய்யுங்கள். என் நண்பன் பொய் சொல்ல மாட்டான். சொன்ன சொல்லை நிச்சயம் காப்பாற்றுவான்.''

''காப்பாற்றுவானு! எப்படிக் காப்பாற்ற முடியும்? அவன் ஊர் என்ன சமீபத்திலா இருக்கிறது! ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டும்; கடலைக் கடந்து செல்ல வேண்டும். பெரிய காடுகளை எல்லாம் கடந்து செல்ல வேண்டும். இவற்றை எல்லாம் கடந்து செல்லுகிறவன் திரும்பி வரவா போகிறான்?''

''அரசே! என் நண்பனை நீங்கள் நம்பலாம். நிச்சயம் திரும்பி வந்து விடுவான்.''

''வந்து விடுவான். வந்து விடுவான் என்று சொல்லிவிட்டால் போதுமா? அவன் திரும்பி வராவிட்டால்....? அவனுக்குப் பதிலாக நீ

உயிரைக் கொடுக்கத் தயாரா?''

''ஓ! நான் தயார்! என்னைத் தூக்கி விடுங்கள். அருமை நண்பனுக்காக இந்த அற்ப உயிரை விட நான் என்றும் தயாராயிருக்கிறேன்.''

''சும்மா சொல்லிவிட்டால் போதுமா? நான் உன் நண்பனுக்கு 21 நாள் தவணை கொடுக்கிறேன். அந்த 21 நாட்களும் அவனுக்குப் பதிலாக நீ சிறையில் இருக்க வேண்டும். இருபத்து ஓராவது நாள் காலை சூரிய உதயத்திற்குள் உன் நண்பன் திரும்பி வராவிட்டால், நீ தூக்கு மேடையில் தொங்க வேண்டியதுதான். சம்மதமா?''

இதைக் கேட்டதும், வந்தவன் முகத்தில் மகிழ்ச்சிக் குறி தோன்றியது.

''அரசே, சம்மதம். என்னைக் கைது செய்யுங்கள். என் நண்பனுக்கு அனுமதி கொடுங்கள்.''

இதைக் கேட்டதும் அரசன் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். சிறிது நேரம் அப்படியே அசையாமல் இருந்தான்.

பிறகு, ''உம்.... சரி, அப்படியே ஆகட்டும்'' என்று உத்தரவிட்டான்.

அப்போது கைதி தன் நண்பனை நன்றியுடன் பார்த்தான்.

''நண்பா, நல்ல சமயத்தில் வந்து





உதவினாய். உனக்கு எந்தவித ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என் கடமை. எவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி வர முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி வந்து விடுவேன். போய் வரட்டுமா?''

''சரி, போய் வா. என்னைப் பற்றிக் கவலைப்படாதே!'' என்று கூறி விடை கொடுத்தான் நண்பன். கைதி ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

''ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் — இப்படியே பத்தொன்பது நாட்களும் ஓடிவிட்டன. இருபதாம் நாள் இரவு நேரம். அரசன் படுக்கைக்குப் போவதற்கு முன்னால் சிறைச் சாலைக்கு வந்தான்.

''என்ன அவன் வந்துவிட்டானா?'' என்று காவற்காரர்களைப் பார்த்துக் கேட்டான் அரசன்.

''இல்லை அரசே. இன்னும் வரவில்லை'' என்றனர் காவற்காரர்கள்.

''சரி'' என்று கூறிவிட்டு, சிறைக்குள்ளே இருக்கும் கைதியின் நண்பனிடம் சென்றான், அரசன். அவனைப் பார்த்துக் கேலியாக ஒரு சிரிப்புச் சிரித்தான். பிறகு பேச ஆரம்பித்தான்.

''என்னப்பா, 'என் நண்பன் பெரிய உத்தமன்; சொன்ன சொல் தவற மாட்டான்; சத்திய வந்தன்; கட்டாயம் வந்து விடுவான்' என்றெல்லாம் சொன்னாயே! பார்த்தாயா, காலை வாரி விட்டு விட்டான்.''

''அரசே! அவனைப் பற்றி அப்படியொன்றும் தவறாக நினைக்காதீர்கள் ஏதேனும் எதிர்பாராமல் நேர்ந்திருக்கலாம். அதனால்தான் இன்னும் வரவில்லை. நிச்சயம் அவன் வந்து விடுவான்.''

''இன்னுமா உனக்கு அவன் மேல் நம்பிக்கை? எவனாவது உயிரைக் கொடுப்பதற்குத் திரும்பி வருவானா? அவன் திரும்பி வருவான் என்று நான் நம்பவே இல்லை. சரி, எனக்கென்ன? அவன் வந்தால் நீ பிழைத்தாய்! இல்லாவிட்டால் நாளை உன் உடல் தூக்கு மரத்தில் தொங்கும்; உயிர் எமலோகம் போகும். இது நிச்சயம்.''

''அதற்காக நான் கலங்கவில்லை!''

மறுநாள் காலை. சூரியன் உதய

மாக இன்னும் அரை மணி நேரமே இருக்கிறது.

இன்னும் ஊர் சென்றவன் திரும்பி வரவில்லை!

அவனுக்குப் பதிலாகச் சிறையில் இருப்பவனை அழைத்துக் கொண்டு வரும்படி, அரசன் உத்தரவிட்டான்.

உடனே சேவகர்கள் அவனைக் கொண்டு வந்து அரசன் முன் நிறுத்தினார்கள்.

''இன்னும் அரை மணி நேரமே இருக்கிறது. மனத்தைத் தைரியப் படுத்திக் கொள். தூக்கு மேடைக்கு நீ பலியாகப் போகிறாய். உன் நண்பன் உயிர் பிழைக்கப் போகிறான்.''

''அரசே, என் நண்பன் பிழைக்கட்டும். அவனுக்காக நான் உயிர் விடுவதைப் பெருமையாகவே நினைக்கிறேன். அவன் உத்தமன்; உண்மையே உரைப்பவன்; வீரன்; தேச பக்தன். இந்த அற்பனின் உயிரைக் காட்டிலும் அவனுடைய உயிர் ஆயிரம் மடங்கு மேலானது. மகிழ்ச்சியோடு நான் தூக்கு மேடைக்குச் செல்கிறேன்.''

''செல்ல வேண்டியதுதான்! இனி மேல் அவன் வரப் போவதே இல்லை.''

''இல்லை, வந்துவிட்டேன்!'' என்று அப்போது ஒரு குரல் கேட்டது.

அரசன் நிமிர்ந்து பார்த்தான். நண்பன் திரும்பிப் பார்த்தான். ஊருக்குச் சென்ற கைதி திரும்பி வந்துவிட்டான்! அவனைக் கண்டதும் அரசன் ஆச்சரியப்பட்டான்.

வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்த அவன், நண்பனை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டான்.

''நண்பா, நல்லவேளை! கடவுள் கருணை வைத்தார்; சமயத்திற்கு வந்து விட்டேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

''இப்பொழுது நீ ஏன் வந்தாய்? இன்னும் அரை மணி நேரம் கழித்து வரக் கூடாதா? ஐயோ! உன்னைத் தூக்கில் போட்டுவிடுவார்களே! அருமை நண்பா! ஏன் வந்தாய்?''

''ஏன் வந்தேனா? என் சொல்லைக் காப்பாற்ற வந்தேன்; உன் உயிரைக் காப்பாற்ற வந்தேன். நண்பா, எனக்குப் பதிலாக நீ சிறையிலே இருபத்தோரு நாட்கள் இருந்தாயே! எவ்வளவு துன்பப்பட்டாயோ! உனக்கு வீண் சிரமம் கொடுத்துவிட்டேன். எனக்குப் பதிலாக உன்னை வைத்து விட்டுப் போனதே பெரிய தவறு. இதை ஊருக்குப் போன பிறகுதான் உணர்ந்தேன்.''

''நண்பா...'' அதற்கு மேல் பேச முடியவில்லை, அந்த நண்பனுல்!

''நண்பா, நான் வரும்போது பெரிய புயல் அடித்தது. நான் வந்த படகு புயலில் சிக்கிக் கொண்டு கவிழ்ந்தது. கடவுள் அருள் புரிந்தார். எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு கட்டையின் உதவியால் கரை சேர்ந்துவிட்டேன். அதனால்தான் தாமதம். நல்ல வேளை. கடலிலே நான் மூழ்கி இறக்க வேண்டியவன். தப்பி விட்டேன். இல்லாவிட்டால் அங்கு நான் இறந்திருப்பேன். எனக்குப் பதிலாக இங்கு நீயும் இறந்திருப்பாய்....''

அவர்களுடைய நட்பின் பெருமையை அப்போதுதான் உணர்ந்தான் அரசன். உடனே, அவன் மனம் இளகி விட்டது! இருந்தாற் போலிருந்து திடீரென்று எழுந்தான்.

நண்பர்கள் இருவரிடமும் ஓடி வந்தான். அவர்களை அப்படியே அணைத்துக் கொண்டான்.

''ஆஹா! உங்களைப் போன்ற நண்பர்களை நான் பார்த்ததே இல்லை! சரித்திரத்திலே படித்தது கூட இல்லை! யாரும் சொல்லக் கேட்டது கூடக் கிடையாது! உங்களுடைய நட்புக்கு மரியாதை செலுத்துகிறேன். இனி மேல் நீங்கள் இருவரும் கைதிகளல்ல; நானும் முன்போல் கொடுங்கோல் அரசனல்ல. நீங்கள் போய் வரலாம்'' என்றான்.

''என்ன, உண்மையாகவா?'' என்று இருவரும் அரசனைப் பார்த்துக் கேட்டார்கள்.

''ஆம், உண்மைதான்!'' என்றான் அரசன்.

உடனே, இருவரும் அரசனுக்கு வணக்கம் செலுத்தினர். ஒருவர் தோள் மேல் ஒருவர் கை போட்டுக் கொண்டு வெளியேறினர்.


அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் அரசன். ''ஆகா! இவர்கள் இருவரும் அபூர்வ நண்பர்களே!'' என்று அப்போது அவன் வாய் முணுமுணுத்தது.



அடிப்படைப் பயிற்சி

தெரு கிரிக்கெட். ராமு அடித்த பந்து எதிர்த்த வீட்டுக் கண்ணாடி ஜன்னலைப் பதம்பார்த்துவிட்டது. எதிர்த்த வீட்டுக்காரர் பிரம்புடன் ராமுவை அடிக்க ஓடி வந்தார். ராமு பயந்து ஓடி போய்த் தன் தாத்தாவின் பின்னால் ஒளிந்து கொண்டான். அன்று தாத்தா எடுத்த முடிவு தம் பேரனைக் கிரிக்கெட் 'கோச்'சிங் முகாமில் கொண்டு சேர்த்தார்., பன்னிரண்டு வயதுக்குட்பட்ட நியூட்ரின் தெற்கத்திய கிரிக்கெட் போட்டியில் தமிழகக் கிரிக்கெட் காப்டனாக ஆடினான் ராமு. சென்னையில் எம். எல். ஜெயசிம்மா அளித்த 'கோச்'சிங் முகாமிலும் அவன் திறமைக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டான். தாத்தாவோ தம் பேரனை அதிகாலை ஆறு மணிக்கு அக்கறையுடன் சேப்பாக்கம் சிதம்பரம் ஸ்டேடியத்திலுள்ள பயிற்சிக் களத்துக்கு அழைத்து வந்திருந்தார். தம் பேரன் நாளை ஒரு பெரிய கிரிக்கெட் வீரனாகத்திகழ வேண்டும் என்ற ஆசை அவருக்கு! இப்படி கேரளம், ஆந்திரா, கர்நாடகம், தமிழகம் பகுதிகளிலுள்ள இருபது சிறந்த இளம் ஆட்டக்காரர்களுக்குப் பதினைந்து நாட்கள் முன்னாள் டெஸ்ட் ஆட்டக்காரர் எம். எல்., ஜெயசிம்மா அடிப்படை கிரிக்கெட் ஞானத்தைப் போதித்தார். இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்குப் பயிற்சி தரும் திட்டத்துக்கு வித்திட்டிருப்பவர்கள் நியூட்ரின் நிர்வாகத்தினர். ஹைதராபாத்தில் முதலில் இந்தப் பயிற்சி, முகாம் தொடங்கியது. இரண்டாவது கிரிக்கெட் பயிற்சி முகாமை சென்னை சிதம்பரம் ஸ்டேடியத்தில் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு தலைவர் ஸ்ரீராமன் தொடங்கி வைத்தார். இளம் கிரிக்கெட் வித்துக்களைச் சேகரித்து, சிறப்

குண்டுமணி



பான பயிற்சி தரும் திட்டத்தைச் சிலாகித்தார் ஸ்ரீராமன். உலக ஆஃப்ஸ்பின்னர் வேங்கடராகவன், "தமிழக கிரிக்கெட் சங்கம் இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரும். இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை இளம் சிட்டுக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!" என்றார்.

பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கிரிக்கெட்டில் நன்கு பயிற்சி பெற்று 15 வயது, 17 வயது போட்டிகளில் கலந்து கொள்ள வைக்க வேண்டும் என்பது நியூட்ரின் ஸ்தாபனத்தின் குறிக்கோள்.

இளம் சிட்டுக்களுக்குக் கிரிக்கெட் உடைகளும், தொப்பிகளும் வழங்கப்பட்டு, வருங்காலக் கிரிக்கெட் வீரர்கள் உருவாவதற்கான பயிற்சிகள் தொடங்கப்பட்டன. பாட்டிங், பௌலிங், ஃபீல்டிங் ஆகிய அனைத்துக் கிரிக்கெட் பயிற்சிகளிலும் இளம் சிறார்கள் மிகுந்த ஆர்வம் காட்டியதை ஜெயசிம்மாவே மெச்சினார்!

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? இளம் சிறுவர்களுக்குரிய திறமையை வெளிக் கொணருவது தான் எனது முயற்சி. இவர்களுக்குள் வருங்காலத்தில் கபில், காவஸ்கர் உருவாவதற்கான ஆர்வத்தைக் காண்கிறேன்!"

நியூட்ரின் நிறுவனம் நிர்வாக டைரக்டர் திரு வாசு ரெட்டி சிறுவர்களுக்கு 9, 10 வயதிலேயே கிரிக்கெட் பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம் என்று தெரிவித்தார். விளையும் பயிருக்கு யோகம் தான்!

பிருந்தாவனக்

நூல் நிலையம்

சரித்திர நிகழ்ச்சிகள் கேட்டிடவும்,
சத்திய சோதனை படித்திடவும்,
பாங்காய் அறிவை வளர்த்திடவும்,
பள்ளியை நோக்கிச் செல்கின்றோம்

மேலும் அறிவை வளர்த்திடவே,
மேன்மை நாமும் பெற்றிடவே,
நேரம் வீணாய்ப் போக்காமல்
நேரே செல்வோம் நூல்நிலையம்.



பெறுதற் கரிய இலக்கியமும்
பெரியோர் பலரது கூற்றுகளும்
கற் காலத்துச் செய்திகளும்
கண்டிட நாமும் சென்றிடுவோம்.

முன்னோர் பலரது வரலாறும்,
முதல் தரமான பாடல்களும்,
இங்கே நாமும் கண்டிடலாம்
இனிதாய்ப் படித்து உயர்ந்திடலாம்.

— எஸ். சிவராஜ் (22), மன்னார்குடி

காட்சியும் சாட்சியும்

குட்டிக் கூண்டு ஒன்றிலே
குருவி இரண்டு பாடுது!
எட்டும் மட்டும் பழங்களைக்
கொத்திக் கொத்தி உண்ணுது!

மட்டி போன்ற கொம்புடன்
மழலை போன்ற முகத்துடன்
எட்டிப் பார்க்கும் மான் இது
இதற்கு இங்கு இணை எது?

தட்டுப் போன்ற காதுடன்
தனது நீண்ட துதிக்கையை



எட்டும் வரையில் நீட்டுது
யானை எங்கள் அருகிலே!

குட்டி யோடு குரங்குமே
குதித்துத் தாவி ஓடுது
நெட்டைக் கழுத்துச் சிவிங்கியும்
நின்றே எம்மைப் பார்க்குது

சிங்க ராஜன் எங்களைச்
சீற்றத் தோடு நோக்குது
எங்க ளுக்குப் பயமில்லை
எதனால் என்று தெரியுதா?

எட்டுத் திக்கும் பார்த்திடில்
எங்கும் மிருகக் காட்சியாம்!
சுற்றிப் பார்த்த எங்களின்
சொல்லே இதற்குச் சாட்சியாம்!

— பி.வி. இராஜேந்திர சேதுபதி, (14272), மேலூர்.

பாரதத்தில் பாரதி



கவியரங்கம்

விடுதலைக்குப் பாடுபட்ட
வீரக் கவிஞன் பாரதி

அடிமைத் தளையை அறுத்தெறிந்த
அறிவுக் கவிஞன் பாரதி.

சிறுவருக்குப் பாடல்அளித்த
சிறந்த கவிஞன் பாரதி

உறுதி கொண்ட நெஞ்சினிலே
உயர்ந்த கவிஞன் பாரதி.

சமயம், சாதி ஒழிக்கச்சொன்ன
சக்திக் கவிஞன் பாரதி.

பார தத்தை பாரினிலே
உயர்த்த வந்த பாரதி!

— பி. முத்து வைரம் (13375),
சென்னை — 81.

புலி கடித்தது!



புலியொன்று வீட்டினிலே
புகுந்து விட்டது!
துளிக்கூடப் பயமின்றித்
தொட்டான் தம்பியே!

பயமின்றிப் பாப்பாவும்
பல்லை இளித்தது!
தயங்கியே நானும்அதைத்
தடவிப் பார்த்தேனே!

பொறுத்திருந்த புலியதுவும்
பொங்கி எழுந்தது!
நறுக்கென்று என்கையை
நன்கு கடித்தது!

'ஐயோ' என்று நானும்உடன்
அலறி எழுந்தேன்
கையைப்பார்த்தேன்: காயமில்லை
கனவு யாவுமே!

— என். செல்வக்குமரன் (4858),
பண்ருட்டி.

புத்தகச் சுமை



பாலுப் பையன் பிறந்தான் — அவன்
பாங்காய் நன்கு வளர்ந்தான் — பின்
பள்ளிக் கூடம் சேர்ந்தான்.

முதல் வகுப்பில் படித்தான் — புத்தக
மூட்டை தினம் சுமந்தான் — ஐயோ!
முதுகு வளைந்து போச்சு!

இரண்டாம் வகுப்பு வந்தான் — தோள்
இரண்டில் புத்தகம் சுமந்தான் — அந்தோ!
இறங்கிப் போச்சு தோள்கள்!

மூன்றும் வகுப்பு வந்தான் — கூடை
முழுதும் புத்தகம் சுமந்தான் — கைகள்
மிகவும் வலிக்கத் துடித்தான்!

° ° ° ° °

உடலால் பாரம் சுமந்தானே — அவன்
உளத்தில் பாடம் சுமந்தானா?


— வ. செந்தில்குமார் (9626),
மதுரை — 3.

சித்திரப் புதிர்! 21


ஆழி



1 டிராகன் என்னும் இந்தக் கற்பனை வடிவத்தை உருவாக்கிய நாடு எது?




2 அமெரிக்காவில் திரைப்படத் தொடர்பாக ஆண்டுதோறும் இந்தப் பரிசு வழங்கப் படுகிறது. என்ன பரிசு இது?



3 தேசப்படத்தில் இந்த அடையாளம் இருந்தால் அங்கே என்ன உலோகம் கிடைக்கும்?

4 எந்நாட்டு விமானப் போக்குவரத்தின் சின்னம் இது?





5 கேரளத்தில் ஆடப்படும் இந்த நடனத்தின் பெயர் என்ன?

விடை வேறு பக்கம்



இந்திய மண்ணின் பெருமை

பொழுது புலர்ந்தது. கதிரவன் இன்னும் தன் பொற்கிரணங்களை வாரியிறைத்துக் கொண்டு பவனிவர விரும்பவில்லை.

ஆம்! கடந்த நான்கைந்து நாட்களாக விடாமல் பொழிந்து கொண்டிருந்த வானம் அன்றும் தொடர்ந்து மழைத்துளிகளை வாரியிறைத்துக் கொண்டிருந்தது.

குடிசையிலிருந்து மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தாள் பதினொரு வயதுச் சிறுமி கண்ணம்மா. தண்ணீர் வேகமாகப் பள்ளத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

நல்ல காலம்! அவள் வீடு மேடான பகுதியில் இருந்ததால், அவள் வீட்டை வெள்ளம் சூழ்ந்து கொள்ளவில்லை.

பசி வயிற்றில் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தது. பள்ளிக்கூடம் இருந்திருந்தால், அவளும் அவள் தம்பியும் சத்துணவைச் சாப்பிட்டிருப்பார்கள். பெருமழையினால் பள்ளிக்கூடத்தையும் மூடிவிட்டார்கள்.

குடிசைக்குள் எட்டிப் பார்த்தாள். அவள் அம்மா கிழிந்த பாயில் படுத்துக் கொண்டிருந்தாள். கடந்த ஒரு வாரமாக அவளுக்குக் குளிர்க் காய்ச்சல். ஏதோ மாத்திரை வாங்கிச் சாப்பிட்டாள். இன்னும்பூரண குணம் கிடைக்கவில்லை., நேற்று மத்தியானம் தம்பி பசிக்கிறது என்று அழுதபோது பக்கத்துக் கடையில் கடன் சொல்லி டீயும் பன்னும் வாங்கி அவனுக்கும், அம்மாவுக்கும் கொடுத்தாள்.

''நீ சாப்பிட்டாயா?'' என்று அம்மா ஈனஸ்வரத்தில் முனகிய போது, ''ஓ! நான் சாப்பிட்டேனே!'' என்று பொய் சொல்லிப் பசிக்கும் வயிற்றிற்குப் பானையிலிருந்து இரண்டு டம்ளர் நீரை எடுத்துக் குடித்தாள்.

இன்று என்ன செய்வது? இன்றும் அம்மாவால் வேலைக்குப் போக முடியாது. தூங்கிக் கொண்டிருக்கும் தம்பி எழுந்ததும், ''பசிக்குது'' என்பான். என்ன பதில் சொல்வது?

பெரிய மனுஷி போல் கவலைப் பட்டாள். கவலை தோய்ந்த கண்களோடு வாயிற்படியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது...

அடுத்த வீட்டு ராஜாத்தி வேகமாக கண்ணம்மாவின் குடிசைக்குள் நுழைந்தாள். மழைக்காக அவள் தலையில் போட்டுக் கொண்டிருந்த சாக்கிலிருந்து லேசாக நீர் தரையில் சொட்டிக் கொண்டிருந்தது. பூப்போட்ட பாவாடையின் ஓரங்களில் ஈரம் கசிந்து கொண்டிருந்தது. அவள் கையில் ஓர் அலுமினிய அடுக்கு.

''கண்ணம்மா! காந்தி மண்டபத்திலே சாப்பாட்டுப் பொட்டலம் தர்றாங்களாம். எங்க சின்னம்மா சொல்லிச்சு. நான் போய்வாங்கப்போறேன். நீயும் வரயா?'' என்றாள்.

கண்ணம்மாவிற்குத் தேனாக, கரும்பாக, கற்கண்டாக இனித்தது இந்தச் செய்தி.

''இரு ராஜாத்தி. உன்கூட நானும் வர்றேன்'' சொல்லியபடியே தாயின் அருகில் சென்றாள். தம்பி எழுந்து விடப் போகிறானே என்று மெதுவான

டி.ஜானகி

குரலில் அன்னையிடம் செய்தியைத் தெரிவித்தாள். தானும் கையில் ஓர் அலுமினியத் தட்டை எடுத்துக் கொண்டாள். மழையில் நனைந்து விடாத வண்ணம் பிளாஸ்டிக் தாளை எடுத்து முதுகையும் தலையையும் போர்த்தியவாறு ராஜாத்தியுடன் கிளம்பினுள்.

காந்தி மண்டபத்திற்குள் நுழையக் கூட முடியவில்லை. நல்லகும்பல்., அப்படியே திகைத்து நின்று விட்டாள் கண்ணம்மா.

சேவைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அன்பு வழியில் நடக்கும் அன்னை தெரசா அவர்கள் தான் இந்தச்சாப்பாட்டுப்பொட்டலம் போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

ஆம்! மழையினுல் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் படும் அவதியைக் கண்டு மதர் தெரசாவின் கருணை உள்ளம் வருந்தியது. அதனுல், ஆளுக்கு இரண்டிரண்டு பொட்டலங்கள்—புளி சாதம் ஒன்று, தயிர் சாதம் ஒன்று — கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்.

மழையினுல் கூலி வேலைக்கும் செல்ல முடியவில்லை. வயிருரச் சாப்பிடவும் வசதி இல்லை., எனவே, பசியினுல் உந்தப்பட்டு நிறையப் பேர் வந்திருந்தனர். தொண்டர்கள் உணவுப் பொட்டலங்களை வழங்கிக் கொண்டிருந்தனர். காந்தி மண்டபத்தின் இடது பக்கம் மதர் தெரசா நின்று கொண்டிருந்தார். அவருக்கு அருகில் டாக்டர் ஜான்சன் — அமெரிக்காவிலிருந்து இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வந்தவர் — நின்று கொண்டு, மக்கள் உணவுப் பொட்டலங்களை வாங்கும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

கும்பலுக்குள் எப்படியோ முண்டியடித்துக் கொண்டு உள்ளே சென்ற ராஜாத்தி இரண்டு பொட்டலங்களோடு முகத்தில் வெற்றிபெற்ற பெருமிதத்தோடு வெளியே வந்தாள்., கண்ணம்மா இன்னும் வெளியிலேயே நிற்பதைக் கண்டு, "நீ மெள்ள வாங்கிக்கிட்டு வா. நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று கூறியபடியே சென்று விட்டாள்.

கண்ணம்மா பொறுமையோடு காத்திருந்தாள். மனம் வீட்டைச் சுற்றி வண்டு போல் சுற்றிச் சுற்றி வந்தது. ஒவ்வொருவரும் கையில் இரண்டு பொட்டலங்களோடு வரும் காட்சியைக் கண்டாள். உணவுப் பொட்டலத்தைப் பார்த்த அவள் வாயில் உமிழ் நீர் ஊறியது. ஒரு பொட்டலத்தைத் தம்பிக்குக் கொடுத்துவிட வேண்டும். பாவம்! அவன் வயிருரச் சாப்பிட்டு எத்தனை நாள் ஆகிவிட்டது. இன்னெரு பொட்டலத்தைப் பிரித்து அம்மாவுக்குப் பாதி — எனக்குப் பாதி— ஊஹூம் அம்மாவிற்கு முக்கால் பங்கு. அம்மா சாப்பிட்டால் தான் நாளைக்கு வேலைக்குப் போய்ச் சம்பாதித்துக் கொண்டு வர முடியும்'' என்று திட்டமிட்டாள். உமிழ்



நீரை உள்ளே விழுங்கிக்கொண்டாள்.

நீரில் சோப்புக் கட்டி கரைவது போல் கும்பல் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து கொண்டிருந்தது. கடைசியாக நின்று கொண்டிருந்தவர்கள் கண்ணம்மாவும் அவளுடன் நான்கு பெண்களுமே.

பாத்திரத்திலிருந்த உணவை எவரும்ஏமாந்துபோகாதபடி இரண்டு இரண்டு பொட்டலங்களாகக் கட்டி அந்த ஐவருக்கும் தந்தார்கள். அத்துடன் பாத்திரங்கள் காலி!

உணவுப் பொட்டலத்தைப் பார்த்ததும் இதுவரை கால் கடுக்க நின்றதோ... பசியினால்,... வயிறு இரைச்சல் போட்டதோ... ஒன்றும் தெரியவில்லை அவளுக்கு. பொட்டலத்தைப் பிரித்து ஒரு வாய் போட்டுக் கொள் என்று ஒட்டிய வயிறு ஓலமிட்டது. அவள் எண்ணம் எல்லாம் தம்பிக்கு. அம்மாவுக்கு...

தேங்கியிருந்த தண்ணீரைத் தாண்டியவாறே தட்டைக் கையில் ஜாக்கிரதையாகப் பிடித்தபடி காந்தி மண்டபம் உள்ள சாலையைக் கடந்தாள். சிறிது தூரம் கூடப் போயிருக்க மாட்டாள். இடது பக்கமுள்ள மரத்தடியைக் கடக்க முயன்றபோது...

''பாப்பா... பாப்பா...'' என்று யாரோ அழைக்கும் குரல் கேட்கவே திரும்பினாள்.

மரத்தடியில் ஒரு வயோதிகர்...

''பாப்பா! காந்தி மண்டபத்திலே



சாப்பாடு போட்டுக்கிட்டிருக்காங் களா?''

''இல்லே தாத்தா, போட்டு முடிச் சுட்டாங்க.''

''அப்படியா! காந்தி மண்டபத் துக்கு என்னாலே வேகமா நடந்து வர முடியல்லே... அதனாலே, அப்படியே இங்கே உட்கார்ந்துட்டேன்.''

கண்ணம்மாவின் கண்கள் அவரைக் கூர்ந்து கவனித்தன. மெலிந்த உடல். மழையில் பாதி நனைந்த உடை. ஒட்டிய வயிறு. குழி விழுந்த கண்கள்.

கண்ணம்மாவுக்குத் தன் பசி மறந்து விட்டது. அவள் பிஞ்சு மனத்தில் கருணை கசிந்தது. ஒரு பொட்டலத்தை எடுத்து முதியவரின் குவளையில் போட் டாள்.

''பாப்பா! நீ நல்லா இருக்கணும். ஆண்டவன் உனக்கு நல்ல வழி விடு வாரு...''

கிழவரின் ஆசிகளைக் காதில் வாங் கியபடியே நடக்க ஆரம்பித்தாள். இது வரை தான் செய்த செய்கையை இரண்டு ஜோடிக் கண்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றன என்பதை உணராமலேயே நடந்து கொண்டிருந் தாள்.

ஆம்! மதர் தெரசாவும், டாக்டர் ஜான்சனும்தான் தங்கள் இருப்பிடத் திற்குச் செல்லக் காரில் வந்து கொண் டிருந்த பொழுது இக்காட்சியைக் கண்டனர். சாலை விதிகளின்படி அவர் களின் கார் அங்கு சிறிதுநேரம் நிற்க நேர்ந்தது.

''மதர்! தான் பசியினால் வாடிய போதும் தனக்கு என்று கொடுக்கப் பட்ட உணவில் பாதியைத் தானம் செய்துவிட்டுப் போகும் இச்சிறுமி யின் பெருந்தன்மையான செயல் என் நெஞ்சைத் தொடுகிறது'' என்று டாக்டர் ஆங்கிலத்தில் அன்னையிடம் கூறினார்.

''டாக்டர் ஜான்சன்! இதுதான் இந்த இந்திய மண்ணின் பெருமை. தாயின் வயிற்றிலிருந்து இந்த மண் ணில் பிறக்கும் பொழுதே... இந்த மண், இந்தப் பண்பை... அவள் உட லோடு... உள்ளத்தோடு... உதிரத் தோடு.... இணைத்துவிட்டது. இதை அவளிடமிருந்து என்றுமே மாற்ற முடி யாது'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார் அருள் உள்ளம் கொண்ட அன்னை தெரசா.

''மதர்... காரில் கொஞ்சம் பழங் கள், பிஸ்கெட்டுகள், ரொட்டிகள் எல்லாம் இருக்கின்றன. இச்சிறுமிக்கு இவைகளைக் கொடுத்து நூறு ரூபாய் பணமும் கொடுக்கப் போகிறேன்.''

''தாராளமாகச் செய்யுங்கள் டாக் டர். எனக்கும் இதில் மகிழ்ச்சியே. ஏனெனில் நீங்கள் கொடுக்கப் போகும் எல்லாவற்றையுமே அவள் தனக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ள மாட்டாள். மற்றவர்களுக் கும் கொடுப்பாள்.''

''Oh! How great she is!'' (ஆ! இவள் எவ்வளவு உயர்ந்தவள்) என்று பாராட் டிய டாக்டர் ஜான்சன் டிரைவரிடம் கண்ணம்மாவின் அருகில் வண்டியை நிறுத்தும்படி சொன்னார்.

திடுக்கிட்ட கண்ணம்மா தன் கைகளில் திணிக்கப்பட்டவைகளைக் கண்டு திகைத்தாள். டாக்டர் ஆங்கி லத்தில் பேசியது அவளுக்குப் புரியா விட்டாலும், தன்னைப் பற்றித்தான் உயர்வாகப் பேசுகிறார் என்பதை உணர்ந்து கொண்ட அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது.

அன்னை தெரசாவை, பள்ளிப் புத்த கங்களில் பார்த்திருக்கிறாள். அந்த அன்னையை நேரில் பார்த்ததும் அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஒரு வினாடிதான்.

மறு வினாடி தன் கைகளில் உள்ள வற்றை அன்னையின் காலடியில் வைத் தாள். அந்தக் கருணைக் கடலின் முன்பு... அன்பு உருவத்தின் முன்பு... சேவைக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த அன்னையின் முன்பு வணங்கினாள்.

''குழந்தாய்! என்னைக் கருணையுடை யவள் என்கிறார்கள். நீ என்னையும் மிஞ்சி விட்டாய். **May God bless you** ('கடவுள் உனக்கு அருள் புரிவா ராக').''

என்று தன் அருள் கரத்தை அவள் தலையின் மீது வைத்து ஆசீர்வதித்தார்.

கண்ணம்மாவின் மேனி சிலிர்த் தது!


டேய்! உன் கோழிக்கும் என்னோட கோழிக்கும் சண்டைவிடலாமா?
உன்னோட கோழி பெரிய இதுவோ வெறும் சொத்தை!
உன் கோழி என்ன நொண்டிச்சப்பாணி! இதுக்கு இவ்வளவு ராங்கியா? உனக்கு
டேய் பார்த்துப் பேசு! பல்லைத் தட்டிடுவேன்
பல்லையா? தட்டிடுவே பார்த்துடலாம்!
என்ன தம்பி பாக்கப்போறே
கோழிச்சண்டையைவிட இந்த சண்டை டக்கர்டா! ஜோடக்கர்டா!!
ம்ம்
ம்ம்
மாலா-

அன்பின் பெருமை

லந்தை இராமசாமி



அழகு நாடு கோசலம்
  அதனை மன்னன் தசரதன்
பிழைகள் ஏதும் இன்றியே,
  பெருமை யாக ஆண்டனன்.

மன்ன னுக்குப் புதல்வராய்
  வாய்த்த செல்வர் நால்வராம்
முன்ன வன்பேர் இராமனும்
  முந்தும் மக்கள் நேயனும்.

சின்ன வயதில் இராமனும்
  தெருவில் தேரில் வருகையில்
அன்பு கொண்டு மக்களும்
  அவனின் முன்னே சூழுவார்

எதிரில் நிற்கும் மக்களை
  இராமன் அன்பாய் நோக்கியே,
புதிய நிலவு போலவே
  புன்ன கைத்துச் சொல்லுவான்

''எங்கு வேலை செய்கிறீர்?
  இன்னல் ஏதும் இல்லையே?
உங்கள் மனைவி பிள்ளைகள்
  உறவு நலங்கள் எப்படி?''

உள்ளம் தோய்ந்த அன்பினால்
  ஒருவர் ஒருவர் ஆகவே
பிள்ளை இராமன் கேட்கவே
  பெரிதும் மகிழும் குடிபடை

எங்கள் இராமன் போலவே
  எவரும் இல்லை என்னவே
பொங்கு கின்ற அன்பினால்
  போற்றி செய்வார் மக்களே

அன்பிற் கில்லை ஒப்புமை
  அன்பிற் கில்லை எல்லைகள்
அன்பை நெஞ்சில் பற்றியே
  அடைக என்றும் வெற்றியே!

உறுப்பினர் வரைந்த சித்திரங்கள்




வெ. சந்திர சேகர் (5930)

ஆர். குருநாதன் (8407)



கோ. இராமச்சந்திரன் (7122)






ஆர். குருராஜ் (1444)


தொட்டுப் பார்க்க ஒரு மியூசியம்!



* மியூசியம் கட்டடம்.



* ஸ்ட்ரோபோஸ்கோப்



திருவனந்தபுரத்திற்கு வருபவர்கள் — அதிலும் குறிப்பாக மாணவ, மாணவிகள் — காண வேண்டிய அவசியமான இடங்களில் ஒன்று, 'கேரள ஸ்டேட் சயன்ஸ் அண்ட் டெக்னலஜி மியூசியம்.'

உள்ளூர் ஆசாமிகளிடம் இந்த மியூசியத்தைப் பற்றி விசாரித்தால், 'அப்படி ஒன்று இருக்கிறதா?' என்று உங்களிடமே திருப்பிக் கேட்டால், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஏனென்றால் 1984 ஆம் வருடத்திலேயே ஏற்படுத்தப்பட்ட இந்த மியூசியத்தைப் பற்றி இன்னும் பலர் அறிந்திருக்கவில்லை.

இந்த மியூசியம் திருவனந்தபுரத்தில் மிகவும் பிரபலமான ஜி. வி. ராஜா ஸ்டேடியத்தை அடுத்து, பி. எம். ஜி. ஜங்ஷனில் உள்ளது. மியூசியத்தின் நுழை வாயிலில் ஒரு போர்டு உண்டு. அதைத் தாண்டி ஏறக்குறைய ஒரு பர்லாங் உள்ளே போக வேண்டும். மியூசியம் இருக்கும் கட்டிடத்தின் அருகே ஒரு 'விண்ட்மில்' உண்டு. அது தான் அடையாளம். அதைத் தவிர வேறு போர்டு கிடையாது.

எப்படியோ தட்டுத் தடுமாறி இந்த மியூசியத்திற்குள் வந்துவிட்டால் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து தரும் எத்தனையோ பொருட்கள் இதில் உள்ளன.

மியூசியத்தின் உள்ளே நுழைந்ததும்

அழகான 'நீரூற்று' ஒன்று கண்களில் தென்படுகிறது. வண்ண வண்ண விளக்குகளின் ஒளியில் பார்ப்பதற்கு மிகவும் ரம்யமாக இருக்கிறது. அருகே வண்ணப்பூக்கள் நிறைந்த தொட்டிகள்.

இதனைத் தாண்டி உள்ளே நுழைந்ததும் செல்ஸ்களும், பாட்டரிகளும் உள்ள அறை.

இடியும்மின்னலும்எப்படி உண்டாகின்றன என்பதைச் செய்து காண்பிக்கிறார்கள். மின்னலை நாம் முதலில் காண்பதற்கும், இடியின் ஒலியை நாம் பிறகு கேட்பதற்கும் காரணங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. அடுத்து, பல வகை மின்சாரக் கலங்கள்.

'தெர்மோ கப்புள்' என்ற சாதனம் தெர்மா மீட்டர் உபயோகப்படுத்த முடியாத இடங்களில் உபயோகமாகிறது. அதனைப் பற்றிய விளக்கங்கள். இதையெல்லாம் பார்த்துவிட்டு, காந்தம் உள்ள அறைக்குச் செல்லுகிறோம்.

விதவிதமாகப் பலவித வடிவங்களில் உள்ள காந்தங்கள் நம்மைக் காந்தமாகக் கவர்கின்றன.

ஒரு நீண்ட சதுர வடிவத்தில் உள்ள காந்தம் ஒன்றை, இரும்புத் தூள்கள் பரவிய இடத்தின் மேல் வைத்தால், அந்த இரும்புத் தூள்கள் அந்தக் காந்தத்தின் மேல் எவ்வாறு சென்று ஒட்டிக் கொள்கின்றன என்பதை நாமேசெய்து பார்ப்பது மிகவும்சுவையான அனுபவம். 'மேக்னடிக் லைன்ஸ் ஆஃப் ஃபோர்ஸஸ்' என்ற தியரியை விளக்கச் செய்யப்படும் சோதனை இது.

இந்த மியூசியத்தைப் பொறுத்த வரை, 'தொடாதே' என்ற பயமுறுத்தல் கிடையவே கிடையாது. (சிறுமிகளே, பூக்களை மட்டும் பறித்துத் தலையில் வைத்துக் கொள்ளாதீர்கள்!) எதையுமே நம்முடைய கையால் தொட்டுப் பார்த்து நாமே பரிசோதனை செய்யலாம்.

அடுத்து, இரண்டு வட்ட வடிவத் தட்டுக்கள் — இரண்டு உருளைகளில் தனித்தனியாகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. இரண்டு தட்டுக்களுக்கும் இடையில் இடைவெளி உண்டு. ஒரு தட்டில் சதுர வடிவத்தில் சிறிய காந்




* கைரேகை ஜோஸ்யக்காரர்.

* தொட்டால் அழும் குழந்தை



* தொட்டால் அகவும் மயில்.





* மாக்ஸ்வெல்லின் சக்கரம்

தம் ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. ஒரு தட்டைச் சுற்றினல், மற்ருெரு தட்டும் சுழலுவதை நாமே செய்து பார்க்கலாம்.

அடுத்து ஏ. ஸி., டி. ஸி. ஜெனரேட்டர்கள். ஹைட்ரோ எலெக்ட்ரிக் பவர் ஸ்டேஷன் எப்படி இயங்குகிறது என்பதை நாம் பார்த்துவிட்டு, நாம் அடுத்துப் பார்க்கச் செல்லுவது 'ஸ்ட்ரோபோஸ் கோப்' என்ற கருவி.

இதில் மூன்று சுழலும் தட்டுக்கள் உள்ளன. மூன்றிலும் ஒரே மாதிரி டிசைன்கள் வரையப்பட்டுள்ளன. அதன் மேல் வெளிச்சம் விட்டுவிட்டு விழும்படி செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தட்டுக்கள் சுழலும் வேகத்தையும், அதன்மேல் வெளிச்சம் படும் இடைவெளி நேரத்தையும் அனுசரித்து அந்தத் தட்டுக்கள் சுழலாமல் நிற்பது போலவோ, எதிர்த் திசையில் சுழலுவது போலவோ அல்லது அவற்றில் உள்ள டிசைன்கள் மாறுவது போலவோ தோன்றுகிறது. இந்த இடத்தை விட்டு நகரவே மனம் வருவதில்லை.

அடுத்து 'எல். டி. ஆர்.' என்ற தத்துவத்தின் அடிப்படையில் அதாவது வெளிச்சத்தினுல் மாறுபடும் மின் தடையின் குணத்தை உபயோகப்படுத்தி இயங்கச் செய்யும் உபகரணங்கள்...

அங்கே உள்ள உபகரணத்தின் மேல் இருக்கும் ஒரு துளையை நாம் கையை வைத்து மூடினுல் நம்முடைய கைக்குக் கீழே இருக்கும் தட்டு மேலே எம்புகிறது. கையை எடுத்தவுடன் கீழே விழுகிறது.


அடுத்து நீங்கள் கறுப்பா, சிவப்பா என்பதை அறிய, உதவும் 'நிறம் மானி' ஒன்று உண்டு. பெட்டி போல்-இருக்கும் இந்த உபகரணத்தினுள் உங்கள் கையை நுழைத்தால் உங்கள் சருமத்தின் நிறத்திற்குத் தகுந்தாற்போல ஒரு முள் அசைந்து உங்கள் நிறத்தின் தன்மையைக் காட்டுகிறது!

இதைப் போலவே அன்பின் அளவைக் காண்பிக்கவும் உபகரணம் உண்டு. அடுத்துள்ளதை நீங்கள், காணப் போகும்போது அலாரம் சப்தம் கேட்கும். பயந்து போய் விடாதீர்கள்!

அதுதான் 'இண்ட்ருடர் அலாரம்.' அத்துமீறி நுழைபவர்களைக் காட்டிக் கொடுப்பது. நீங்கள் இந்த இடத்தைத் தாண்டிச் செல்லும் போது உங்கள் மேல் விழும் வெளிச்சமே இந்த அலாரம் இயங்கக் காரணமாக இருக்கிறது.

இந்த மியூசியத்தினுள் நுழைந்ததில் இருந்து எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்தே பழகிவிட்ட நீங்கள், அடுத்துள்ள ஒரு பொருளைத் தொட்டால் ஓர் அலாரம் அடிக்கிறது. அது தான் 'திருடனைக் காட்டிக் கொடுக்

* டீசல், பெட்ரோல் என்ஜின் மாடல்கள்.



கும் அலாரம்! (நீங்கள் நல்லவர்தாம் என்பது மியூசியம் பொறுப்பாள ருக்குத் தெரியும்.)

எலெக்டிரிகல், எலெக்ட்ரானிக்ஸ் சம்பந்தப்பட்ட 'க்விஸ் போர்டு.'

பத்துக் கேள்விகளுக்குப் பத்து விடைகள். நீங்களே அதை இயக்கி, சரியான விடையைத் தெரிந்து கொள் ளலாம்.


இதனைக் கடந்து சென்றால், விதவிதமான பம்பு செட்டுகள். பழைய புதிய டிரான்சிஸ்டர், டி. வி. மாடல் கள்.

இதைத் தாண்டி வந்தால் —

தொட்டால் அகவும் மயில் — தூங் கும் குழந்தையின் கைகளைத் தொட் டால் கண்களைத் திறந்து அழும் குழந்தை — கையை வைத்தால் உங்கள் எதிர்காலத்தைச் சொல்லும் கைரேகை ஜோஸ்யக்காரர்.

இவற்றை எல்லாம் பார்த்துவிட்டு வந்தால் 'ஆட்டோமாடிக் சிகரெட் செல்லர்' என்ற போர்டும் அதன் கீழ் நாலணா காசு போட்டால் ஒரு சிகரெட் உங்கள் கையில் வந்து விழும் என்கிற அறிவிப்பும் நம் கண்ணில் தென்படு கிறது.

ஆனால், அந்த உபகரணம் அங்கு இல்லை. 'ஏன்' என்று கேட்டதற்கு ''சிகரெட்பிடிப்பது தீயபழக்கம் என்ப தால் அதை எடுத்துவிட்டோம். அதே சமயத்தில் அதுபோன்ற பொருட்களை விற்பனை செய்யத் தேவையான தானாக இயங்கும் இயந்திரத்தைச் செய்ய முடி யும் என்பதைத் தெரியப்படுத்தவே



* சுழலும் விசிறி


அறிவிப்புப் பலகையை வைத்துள் ளோம்'' என்றார். அங்கு உள்ளவர் பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

இவ்வளவையும் பார்த்து விட்டு வரும் போது உங்களுக்குத் தண்ணீர்த் தாகம் ஏற்படலாம். குழாயைத் திறந்து மூட வேண்டிய அவசியமில்லாமல் அங்கே உள்ள குழாய்க்கடியில் தம்ளரை வைத்தால் குளிர்ந்த நீர் சொட்டுகிறது. தம்ளரை எடுத்தால் குழாயில் நீர் நின்று விடுகிறது!

அடுத்து நீங்கள் கால் வலியால் இளைப்பாற விரும்பினால், சோபா செட்டுகள் உண்டு. டாய்லெட் போக விரும்பினால் மிகவும் சுத்தமான டாய் லெட் உண்டு. பொது இடங்களில் இதுபோன்ற சுத்தமான டாய்லெட்டு களைப் பார்ப்பது மிகவும் அரிது.

உங்களை நீங்கள் ஆசுவாசப்படுத் திக் கொண்டு, அடுத்து நீங்கள் காணப் போவது — தானாக இயங்கும் தொட்டில். தொட்டிலில் இருக்கும் குழந்தை விழித்து அழுதால் பாட்டு சப்தம் கேட்கிறது. தொட்டில் ஆடு கிறது. சற்று நேரத்தில் குழந்தை உறங்க ஆரம்பித்தால், தொட்டியின் ஆட்டமும், பாட்டுச் சத்தமும் நின்று விடுகின்றன. தொட்டிலில் உள்ளது அசல் குழந்தையல்ல. பொம்மை தான்! ('வேலைக்குச் செல்லும் பெண் களுக்கு மிகவும் உபயோகப்படும்'

* தானாக இயங்கும் தொட்டில்.



என்றுதான் அதைப் பார்ப்பவர்கள் சொல்லிவிட்டுச் செல்கிறார்கள்.)

தானாகவே இயங்கும் தொட்டிலுக்கு எதிரே, தானாகவே இயங்கும் தெரு விளக்கு. சாயந்திர வேளையில் சூரிய ஒளி மறையும் போது எப்படித் தானாகவே அத்தெரு விளக்கு இயங்க ஆரம்பித்து, காலையில் சூரியன் தோன்ற ஆரம்பித்ததும் தானாகவே அணைந்து விடுகிறது என்பதை இயக்கிப் பார்க்கலாம்.

அடுத்து உங்களுடைய 'ரியாக்ஷன் டைம்' எவ்வளவு நேரம் என்பதைத் தெரிந்து கொண்டு, எலெக்ட்ரானிக் காலண்டரில் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால தேதியின் கிழமைகளை



• ஹோட்டலை — 3 கிலோமீட்டர் தொலைவில் பார்க்க.

அறிந்துகொண்டு, டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் எப்படி இயங்குகிறது என்பதைத் தெரிந்து கொண்டு, எலெக்ட்ரானிக் முறையில் நீங்களே ஓட்டுப் பதிவு செய்து, வெற்றி பெற்றவரைத் தேர்ந்தெடுத்துவிட்டு, எல்லாவற்றையும் பார்த்து முடித்தாகி விட்டது என்ற முழுத்திருப்தியுடன் வெளியே வந்தால், மாடிக்குப் போகச் சொல்லுவார்கள்.

மாடிக்குப் போகிறோம்...

மாடிப் படிகளின் அமைப்பும், அதன் மேல் விரிக்கப்பட்டுள்ள கம்பளத்தின் சிவந்த நிறமும், கைப்பிடிகளின் வனப்பும், வழியில் காணப்படும் சோபா செட்டின் அழகும் நமக்கு ஒரு பழங்கால அரண்மனையை நினைவுபடுத்துகின்றன.

வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை வீட்டு வாசலில் உள்ள கோலம் வரவேற்பது போல, மாடிக்கு உள்ள கண்காட்சிப் பொருட்களைக் காண வருபவர்களை மண்ணால் அழகழகாகக் கோலமிட்டு வரவேற்பது 'டபுள் ஹார் மோனிக் பெண்டுலம்.'

பலவிதமான கட்டடங்களின் மாடல்கள், ஐந்து நட்சத்திர ஓட்டல்களின் மாடல்கள், தியேட்டர்களின் மாடல்கள், தோட்டங்கள், காப்பி, டீ எஸ்டேட்டுகளின் மாடல்கள் — இவையெல்லாம் மனிதர்களின் கற்பனைக்கு எல்லையே இல்லை என்பதை எடுத்துக் காண்பிக்கின்றன.

எதிர்காலத்தில் இந்த மியூசியம் எப்படி இருக்கப் போகிறது என்பதையும் மாடலாகச் செய்து வைத்திருக்கிறார்கள். பிளானடோரியம், ஆர்க்கிடெக்சர், விண்வெளி மியூசியம், டெக்னலஜி என்று பல பிரிவுகளில் விரிவாகப் போகும் இந்த மியூசியத்தின் எதிர்காலத் திட்ட அமைப்பு நம்மைப் பிரமிக்கச் செய்கிறது. இவற்றை எல்லாம் பார்த்து விட்டு உள்ளே செல்கிறோம்...

முதலில் மாக்ஸி வில்லி சக்கரம். இரண்டு கயிறுகளுக்கிடையில் இணைத்துத் தொங்கவிடப்பட்டுள்ள சக்கரம், மேலே சுருட்டிக் கீழே விடப் பட்டதும் அந்தச் சக்கரம் மேலேயும் கீழேயும் போய் வருவது ஏன்? சாதாரணமாக எதுவும் மேட்டில் இருந்துதான் பள்ளத்தை நோக்கி உருண்டு போகும். இங்கே பள்ளத்தில் இருந்து மேட்டை நோக்கி, உருண்டு செல்லும் 'டபுள் கோன்' அவ்வாறு இயங்க எப்படிச் சாத்தியமாகிறது?

சுழலும் விசையின் தன்மையை விளக்க, வளைந்த பாதையினுள் போடப்படும் இரும்புக் குண்டு.

அடுத்து சினிமாவின் தத்துவத்தை விளக்கும் சக்கரம். சைக்கிள் சக்கரத்தை ஒட்டி ஒரு வளையம். அந்த வளையத்தில் நீண்ட சதுர வடிவத்தில் ஓட்டைகள். வளையத்தின் உட்புறத்தில் ஓர் ஆடும் பெண்ணின் பலவிதமான அபிநயங்கள் வரையப்பட்டிருக்கின்

றன. சக்கரத்தைச் சுழலவிட்டு வளையத்தின் வெளிப்புறத்தில் காணப்படும் ஓட்டை வழியாகக் கண் வைத்துப் பார்த்தால் அந்த ஓவியம் உயிர் பெற்று வந்து நடனமாடுவதைப் போலத் தெரிகிறதே, இது ஏன்? நமக்கு விளக்கப்படுகிறது.

நியூட்டனின் மூன்றாவது விதியை விளக்கும் இரும்புப் பந்துகள். ஒரு முனையில் இரண்டு பந்துகளை ஒன்றாகச் சேர்த்து இழுத்து விட்டால், மறுமுனையில் இரண்டு பந்துகள் இணைந்து அதே அளவு சென்று திரும்புகின்றன. எவ்வளவு சுலபமாக நியூட்டனின் விதி நமக்குப் புரிகிறது!

'ஏன்?' என்ற எல்லாக் கேள்விகளுக்கும் விடை அந்த உபகரணத்தின் அருகிலேயே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் விளக்கிச் சொல்ல அங்கே உதவியாளர்கள் உண்டு.

அடுத்து நம்மைப் பரவசப்படுத்துவது முகத்தில் விழும் ஒளியின் அளவையும் திசையையும் பொறுத்து மாறுபட்ட உணர்ச்சிகளைக் காட்டும் சிலை. சந்தோஷம், துக்கம், சிடுசிடுப்பு எல்லாம் இந்த முகத்தில் தெரியும்.

அதைத் தாண்டி நாம் சென்றால், நம் கண்களில் தெரிவது சர்வே உபகரணங்கள். தூரத்தில் தெரியும் தென்னை மரங்களின் பசுமை நம்மை வியக்க வைக்கிறது.

இங்கே இருக்கும் ஒரு 'தியோடலைட்' என்னும் கருவியின் வழியாகப் பார்த்தால் ஏறக்குறைய சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் மகாத்மா காந்தி கல்லூரியில் உள்ள மணிக்கூண்டு காட்டும் நேரத்தை அறிய முடிகிறது.

இதைப் பார்க்கும் போது நமக்கு பிரமிப்பாகவும், அதே சமயத்தில் பயமாகவும் இருக்கிறது.

ஏனென்றால், தேவைப்பட்டால் நம்முடைய நடவடிக்கைகளை நமக்குத் தெரியாமலே தொலைதூரத்தில் இருந்து கவனிக்க முடியும் என்பதை அறியும்போது மர்மக் கதைகள் ஏற்படுத்தும் 'கிலி' உண்டாகிறது.

இதனையடுத்து மார்த்தாண்டவர்மா பாலத்தின் மாடல், மூவாட்டுப்புழா பாலத்தின் மாடல், ஃப்ளை ஓவர் — சூரிய ஒளி அடுப்பு முதலியனவற்றைக் கண்டுவிட்டு, பாய்லர் மாடல்களும், டீஸல் என்ஜின், பெட்ரோல் என்ஜின் மாடல்களும் அது சம்பந்தப்பட்ட உறுப்புக்களையும் பார்த்துவிட்டு, நம்முடைய விஞ்ஞான அறிவு அதிகமாகி விட்ட உணர்வுடன் அந்த மியூசியத்தின் படிக்கட்டுகளில் இறங்கிக் கீழே வருகிறோம்...

இந்த மியூசியத்தைப் பார்க்க வருகிறவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த மியூசியத்தில் உள்ள பொருட்களை, நீங்களே தொட்டுப் பார்க்காமலோ அல்லது அங்கு உள்ள உதவியாளர்களை இயக்கிக் காட்டச் சொல்லாமலோ வெறுமனே பார்த்துவிட்டு வந்துவிடாதீர்கள்! அப்படிச் செய்



• உணர்ச்சிகள் மாறுபடும் சிலை.

தால், நீங்கள் விஞ்ஞானத் தத்துவங்களைப் புரிந்து கொள்ள உங்களுக்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பினை வீணைகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விட்டீர்கள் என்று அர்த்தம்.

இதைப் போன்ற மியூசியங்கள் தமிழ்நாட்டிலும் பல இடங்களிலும் தோன்றி, சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டு வந்தால், எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்தும் எத்தனை எத்தனையோ சர் சி. வி. ராமன்களும், ராஜா ராமண்ணாக்களும், விக்ரம் சாராபாய்களும் தோன்றி இந்திய மண்ணுக்குப் புகழ் தேடித் தருவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை!

படங்களும் கட்டுரையும்: கமலநாதன்



விளையும் பயிர்

பலதுறை வல்லவன்!

எஸ். கோவிந்தராஜன், திருச்சி பி.எச்.இ.எல். கைலாசபுரத்தில் பாய்லர் பிளாண்ட் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு படித்து வருகிறான். இம்மாணவன் சாரண இயக்கத்தைச் சேர்ந்தவன். நம் நாட்டு சாரண மாணவர்களின் உயரிய விருதான ஜனாதிபதி சாரணன் விருதை (President's Scout Award) 1986 ஆம் ஆண்டிற்காக டிசம்பர் மாதம் பெற்றான்.


இந்நிகழ்ச்சியை அடுத்த சில நாட்களுக்குப் பின் இச்சிறுவன், ஹைதராபாத்தில் துவங்கிய 10 வது ஆசிய பசிபிக் ஜாம்பூரி மற்றும் திருச்சியில் நடைபெற்ற கேம்பூரி (Camporee) போன்ற முகாம்களிலும் கலந்து கொண்டான். இவ்வாறு இவ்வாண்டில் திருச்சி மாவட்டத்தின் சார்பாக இம்மூன்று முகாம்களிலும் கலந்து கொள்ளும் தகுதியைப் பெற்ற இரு சாரணர்களில் இம்மாணவனும் ஒருவன். மேலும் தமிழ் நாட்டின் சார்பில் சுமார் ஒன்றரை மாதத்திற்குள் இத்தொடர் முகாம்களில் கலந்து கொண்ட விரல் விட்டு எண்ணக் கூடிய சாரண மாணவர்களில் இந்தச் சிறுவர் சங்க உறுப்பினனும் ஒருவன். இத்தகுதியைப் பெற்றவர்கள் இந்தியாவிலும் ஒரு சிலரே.


இவ்வாண்டிலே 6 சாரண முகாம்களில் கலந்து கொண்டு இச்சிறப்புப் பெற்ற சாரண மாணவன், படிப்புத் துறையிலும் சென்ற ஆண்டு (S.S.L.C.) 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 448 பெற்று பள்ளியில் இரண்டாம் இடம் பெற்றவன், இவ்வாண்டு 11 ஆம் வகுப்பு மாணவர்களிலும் முதலிடம் பெற்றான்.

இதற்கிடையிலே சென்ற ஆண்டு ஹிந்தித் தேர்வுகள் எழுதி பிராத்மிக்கில் சிறப்புத் தகுதியையும்; மத்யமாவில் முதல் வகுப்புத் தகுதியையும் பெற்றிருக்கிறான். மேலும் இம்மாணவன் தட்டெழுத்துப் பயிற்சி பெற்றிருக்கிறான்.


கலைத்துறையிலே 'புல்லாங்குழல்' என்ற இசைக் கருவியை வாசிக்கும் தகுதியை வளர்த்துக் கொண்டிருப்பவன் இம்மாணவன். மற்றும் கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளை வென்று பள்ளிக்கு நற்பெருமை சேர்த்தவன்.

இதுபோல, நமது சிறுவர் சங்க உறுப்பினர்களும், மற்றவர்களும் கோடை விடுமுறை நாட்கள் மற்றும் அதைத் தொடர்ந்த நாட்களில் படிப்பு மற்றும் பல்வேறு துறைகளிலே பயிற்சி பெற்றுப் பள்ளிக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதே நம் ஆசை.



பாக்தாத் நகரில் சோர் வடைந்த ஒரு இளம் வியாபாரி...
அப்பா! என்ன வெய்யில்.... சற்று இளைப் பாறுகிறேன்... வியாபாரமும் சரியில்லை... கடவுளே...!
மாளிகையிலிருந்து ஒரு முதியவன் வியாபாரியைப் பார்த்துக் கொண் டிருந்தான்...
யாரங்கே! அந்த மரத்தடியில் இளைப் பாறும் இளைஞனை அழைத்து வா...
மாளிகைக்குள் நுழைந்த ஏழை வியாபாரி, வியப்பில் திக்குமுக்காடிப் போனான்...
ஐயா! சொர்க்கம் என்பது இதுதானோ!
நண்பனே! உன் பெயர்?
கதை: ஆனந்தி
படம்: வினு
அதிசயப் பயணங்கள் செய்த
சிந்துபாது
சிந்துபாது ஹாமல்!
என்ன அதிசயம்! என் பெயரும் சிந்து பாதுதான்! ஆனால் உன்னைப் போல் சோர்வடையும் சிந்து பாது அல்ல!
நீ அலுப்புடன் கடவுளிடம் முறையிடுவதைக் கேட்டேன். உன் சோர்வை நீக்கவே அழைத்தேன். என்னுடன் உணவருந்திச் செல்!


முதிய சிந்துபாது தன் கதையைக் கூறினான்...
உணவு, உன் உடல் சோர்வை நீக்கும். என் அனுபவங்களைக் கேட்டால் உன் மனச் சோர்வும் நீங்கும். நானும் உன்னைப் போல் வாலிபப் பருவத்தில் ஏழை யாகத்தான் இருந்தேன்...
செல்வம் ஏதும் சேர்த்து வைக்காமல் சிந்துபாதின் தந்தை இறந்து விட்டார்.
வீட்டிலிருக்கும் தட்டு முட்டுச் சாமான்களை யெல்லாம் விற்றுக் கிடைக்கும் பணத்தில் ஏதாவது வியாபாரத் தை ஆரம்பிப்போம்.
சில வியாபாரப் பொருள்களுடன் கப்பலேறினான் சிந்துபாது.
எந்த ஊருக்குப் போகிறாய்?
பஸோராவுக்கு. வழியில் உள்ள துறை முகங்களில் வியாபாரம் செய்வேன்.
கப்பல் பயணம் ஆனந்தமாயிருந்தது... வியாபாரமும் நன்கு நடந்தது...
ஒருநாள் ஒரு தீவில் கப்பல் கரைதட்டி நின்றது.


அதிலிறங்கி உணவு சமைத்தார்கள்....
ஆபத்து! இது தீவு இல்லை! ராட்சதத் திமிங்கிலம்! நெருப்பின் சூடு தாங்காமல் அசைகிறது!
எல்லாரும் அவசரம் அவசரமாகக் கப்பல் ஏறினார்கள்.
சிந்துபாது அந்தப் போட்டியில் பின்னடைய...
ஆ!
ஐயோ!
நீர்மட்டத்துக்குமேல் சிந்துபாது எழும்பிப் பார்த்தபோது கப்பல் வெகுதூரம் சென்றுவிட்டது. ஆனால்...
அல்லாவின் அருள்! உணவுப் பொருள்களை வைத்து இறக்கிய மரத்தொட்டி மிதக்கிறது!
மரத்தொட்டியில் மிதந்து ஒரு தீவில் கரை சேர்ந்தான் சிந்துபாது...
கட்டப்பட்ட நிலையில் அழகான குதிரைகள்! இது மனிதர்கள் வாழும் தீவாகத்தான் இருக்கும்!



சிந்துபாதின் ஊகம் பொய்க்கவில்லை...
குதிரைகளைக் கடற்கரையில் கட்டி விட்டு மறைந்திருந்தீர்களே, எதற்கு?
இந்தப் பெண் குதிரைகளைப் பார்த்து விட்டுக் கடல் குதிரைகள் கரைக்கு வரும். அவற்றுக்குப் பிறக்கும் குட்டிகள் தெய்வப் புரவிகள் போல் இருக்கும்!
அந்த வனவாசிகள் சிந்துபாதைத் தங்கள் தலைவனிடம் அழைத்துப் போனார்கள்.
உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. நீ எங்களுடன் வசிக்கலாம்...
அந்த வனவாசிகளிடம் குதிரைகள் வாங்கப் பல வியாபாரிகள் வந்து போனார்கள். ஒரு நாள்...
அட, அந்தக் கப்பல் தலைவனை எங்கோ பார்த்த மாதிரி இருக்கே...
அருகில் நெருங்கவும்...
நீ... நீ... சிந்து பாது இல்லே! நீ திமிங்கிலத்துக்கு இரையாகி விட்டதாய் நினைத்தோமே?
அல்லா காப்பாற்றினார், ஐயா!



சிந்துபாதின் உடைமைகளைப் பத்திரமாக வைத்திருந்தான் கப்பல் தலைவன். சிந்துபாது விடை பெற்றான்...
வனவாசிகளின் தலைவரே! இந்தப்பட்டுத் துணியை, முத்துக்களை என் பரிசாக ஏற்க வேண்டும். நான் சென்று வருகிறேன்...
முதிய சிந்துபாது கதை கூறி முடித்தான்.
அங்கிருந்து பஸ்ஸோரா சென்று வாணிபத்தை மேலும் பெருக்கிப் பெரும் செல்வந்தனைகப் பார்த்தாத் திரும்பினேன்!
பிறகு நிம்மதியாக வாழ்ந்தீர்களாக்கும்?
ஆமாம்; ஆனால் எதிர் பாராத ஆபத்துக்களுக்கு என் மனம் ஏங்க ஆரம்பித்தது. மீண்டும் பயணம் கிளம்பினேன்... நாளைக்கு வா, அந்தக் கதையைக் கூறுகிறேன்!
மறுநாளும் இளம் சிந்துபாது வந்தான். விருந்துபசாரம் நடந்தது.
ஐயா! உங்கள் கதைகள் எனக்குப் புத்துணர்ச்சி அளிக்கின்றன.
இதைக்கேள்! கடல் வாணிபத்துக்குப் பல பொருள்களைச் சேகரித்துக் கொண்டு துறைமுகம் சென்றேன். கப்பல் ஏறினேன்.
முதிய சிந்துபாதின் கதை தொடர்ந்தது...
புதிய கப்பல், புதிய கடல் மார்க்கம், அதோ, புதிய அழகான தீவு!




அத்தீவில் இறங்கினார்கள்...
மனித சஞ்சாரமே இல்லை!
சுவையான பழங்கள்.
குளிக்கத் தெளிந்த, நீரோடை.
உணவருந்தியபின் ஒரு மரத்தடியில் களைப்புடன் அமர்ந்தான் சிந்துபாது.
வெய்யிலுக்கு ஏற்ற நிழல். குளிர் காற்று... சுகமாகத் தூக்கம் வருகிறது...
சிந்துபாது கண் விழித்தபோது...
அடடா! யாரையும் காணோமே! கப்பல் அதோ போய் விட்டதே! நான் தூங்குவதைக் கவனியாமல் என்னை மறந்து போய் விட்டார்கள்!
தூங்கிவிட்டதற்காகத் தன்னைத்தானே நொந்து கொண்ட சிந்துபாது, ஒரு மரத்தின் மீது ஏறி சுற்றுமுற்றும் பார்த்தான்...
அதோ தூரத்தில் வெண்மையாக... ஒரு சலவைக்கல் மாளிகையாக இருக்கலாம்...
அந்த திக்கு நோக்கிச் சென்றான் சிந்துபாது...
பிரம்மாண்ட உருண்டை வடிவ மாளிகை! மழ மழவென்று... ஆனால் கதவு ஒன்றையும் காணோமே?



திடீரென்று கரு நிழல் விழுந்ததும் இருள் கவியத் தலை நிமிர்ந்த சிந்துபாது, திடுக்கிட்டான்...
ஒரு பிரும்மாண்ட மான பறவை சூரியனை மறைத் துக்கொண்டு கீழிறங்கியது...
அதிசயப் பறவை, பளிங்கு மாளிகை மீது அமர்ந்தது...
ஐயோ! இது என்ன?
என்னை அல்லாதான் காப்பாற்றவேண்டும்!
ஓ! இது மாளிகை இல்லை! இந்தப் பறவையின் முட்டை! அடை காக்க அமர்ந் திருக்கிறது!
இந்த ராட்சசப் பறவைதான் 'ருக்' போலும்! இங்கிருந்து தப்ப வழி என்ன?
பறவையின் காலில் தன் முண்டாசை அவிழ்த்துக் கட்டிய சிந்துபாது, பின்னர் அதனைத் தன் உடலிலும் சுற்றி முடிந்து கொண்டான்.
திடீரென்று 'ருக்' பறக்க ஆரம்பித்தது.
மேக மண்டலத்தைத் தாண்டி விட்டோம்! கீழே தரையே தெரியலே!



உடலைச் சுற்றி யிருந்த கட்டு அவிழ்ந்துவிட்டது என்றாலும் முண்டாசு நுனியைக் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டான் சிந்துபாது.
இனி ரொம்ப நேரம் தாங்காது... கை நழுவுகிறது...
நல்லவேளையாக ரூக் கீழிறங்கி வந்தது...
கைகளே காப்பாற்று... மனமே உறுதியாக இரு!
மெத்தென்று எதன் மீதோ விழுந்தான் சிந்துபாது... முண்டாசு நுனியை விட்டு விட்டு ஓடினான்...
தப்பினோம், பிழைத்தோம்...!
வெகுதூரம் சென்று திரும்பிப் பார்த்தால்... ரூக் மேலே செல்ல மறுபடி எழும்ப...
அதன் கால்களில் பெரிய மலைப் பாம்பு! பாம்புமேல் விழுந்ததால்தான் எனக்கு அடி படவில்லை...!
பயம் மனத்தைக் கவ்வ, சுற்று முற்றும் பார்த்தான் சிந்துபாது...
நாலு பக்கமும் அரண்மாதிரி மலைகள்! ஆங்காங்கே குகைகள்! பழமரமா, நீரா ஒன்றுமில்லையே? ஐயோ! பட்டினி கிடந்து, நாவரண்டு சாகப்போகிறேனா?



படபடப்பு சற்று அடங்கியபோது...
ஆ! இதென்ன அதிசயம்? என் கண் எதிரே பளபளக்கும் அது என்ன?
அத்தகைய கற்கள் நிறையவே தென்பட்டன!
ஆகா! ரத்தினம்! இது வைரம்! ஓ! இது வைடூரியம்!
தான் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்த வைரப் பள்ளத்தாக்கு தான் அது என்று ஊகித்தான் சிந்துபாது. ஆனால்...
ஆ! ஐயோ! இதென்ன பயங்கரம்!
உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிய சிந்துபாது...
இரவு முழுதும் இந்தக் குகையில் ஒளிந்திருக்க வேண்டியது தான்; இந்தப் பாறையால் குகைவாசலை மூடி வைக்கிறேன்...
பொழுது விடிந்ததை இடுக்கு வழியே உணர்ந்த சிந்துபாது, வெளியே வந்தான்...
மாலையில் வெளியே வரும் மலைப் பாம்புகள், காலையில் குகைகளில் பதுங்குகின்றன. நான் பயப்படாமல் நவமணிகளைச் சேகரிக்கலாம்....


ஆனால் சற்று நேரத்தில் சிந்துபாதைச் சோர்வு ஆட்கொண்டது....
இத்தனை வைர, வைடூரியங்களைச் சேகரித்து என்ன பயன்? இங்கிருந்து எப்படி வெளியேறுவது?
அப்போது...
இதென்ன பெரிய பெரிய மாமிசத் துண்டங்கள் வந்து விழுகின்றனவே...
தான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தது சிந்துபாதுக்கு நினைவுக்கு வர...
இது வைர வியாபாரிகள் வேலை. மாமிசத்துண்டங்களில் வைரங்கள் ஒட்டிக்கொள்ளும். கழுகுகள் இறைச்சியைக் கொத்திச் செல்லும். பறவைகளை விரட்டி விட்டு வைரங்களை எடுத்துக் கொள்வார்கள்.
சிந்துபாது ஒரு பெரிய மாமிசத் துண்டத்தைத் தன்மீது வைத்து, கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்...
வா கழுகே, வா! இந்த மாமிசத்தைக் கொத்திச் செல்!
சிந்துபாது எதிர்பார்த்தது நடந்தது...
பள்ளத்தாக்கிலிருந்து தப்பியாகி விட்டது... இனி இந்தப் பறவையிடமிருந்து தப்ப வேண்டும்!


அந்த மாபெரும் கழுகு, மலை முகட்டில் ஒரு பாறை மீது வந்தமர்ந்தது...
செத்தேன்! மாமிசத் தோடு சேர்த்து என்னையும் கொத்த ஆரம்பிக்கும்!
நல்ல வேளையாகக் கழுகைத் துரத்தி விட்டு வைரங்களை அடைய, வியாபாரிகள் ஓடி வந்தார்கள்....
ஷ்! ஷ்!
டம்! டம்!
பறவை பயந்து பறந்துவிட, சிந்துபாது தன் கதையைக் கூறினான்...
அட, பாம்புப் பள்ளத் தாக்கிலிருந்து தப்பி வந்த முதல் மனிதன் நீதான்!
இந்தாருங்கள், என்னைக் காப்பாற்றிய உங்களுக்குப் பரிசு!
முதிய சிந்து பாது தன் பயணக் கதையைக் கூறி முடித்தான்...
நண்பனே! அவர்கள் துணையுடன் துறைமுகத்தை அடைந்து கப்பலேறி, பாக்தாத் நகருக்குத் திரும்பினேன்.
ஆச்சரியமான அனுபவங்கள்தான்!
வைரங்களை விற்றுப் பெரும் பணக்கார ஆகியும் திருப்தி இல்லை. மீண்டும் ஆபத்தான பயணத்துக்கு ஆசைப் பட்டேன்...
இன்னொரு கதையா? நாளை வந்து கேட்கிறேன்...


மறுநாள் இளைய சிந்துபாதுக்கு மேலும் ஒரு கதை கூறினான் முதிய சிந்துபாது... ஒரு சமயம் சிந்துபாது பயணப்பட்ட கப்பல்...
கப்பல் தகர்ந்தது. சிந்துபாது ஒரு கட்டையைப் பிடித்துக்கொண்டு மிதந்தான்...
அல்லாதான் காப்பாற்ற வேண்டும்!
ஐயோ! கடும் புயலில் சிக்கினோம்! கடல் சமாதிதான் நமக்கு!
நாலு நாட்கள் பட்டினி கிடந்து, மிதந்த பிறகு, கரையில் ஒதுக்கப்பட்டான் சிந்துபாது...
பசி... மயக்கம்... எனக்கு உதவுவார் இல்லையா...?
சிந்துபாதின் முனகலைக் கேட்டு...
யாரப்பா நீ?
முதலில் இவன் பசி தாகத்தைத் தணிப்போம்... பிறகு இவன் கதையைக் கேட்போம்.
சிந்துபாதின் களைப்பு சற்று நீங்கியதும்...
உன்னை எங்கள் அரசரிடம் அழைத்துப் போகிறோம். உன் கதைகளைக் கேட்டு வியப்படைவார்!


சிந்துபாது அந்த நாட்டு அரசனின் நன் மதிப்பைப் பெற்றான்.
நீ ரொம்ப அனுபவசாலி. என்னுடனேயே இரு.
ஊரைச் சுற்றிப் பார்த்த சிந்துபாது..
இதென்ன சேணமில்லாமல் குதிரை ஏறிப்போகிறார்களே.. ..பலர் அடிக்கடி குதிரையிலிருந்து விழுந்து அடிபட்டுக் கொள்கிறார்கள்!..
சிந்துபாது ஒரு தச்சனையும் சக்கிலியையும் அழைத்து....
சேணம் தயாரிக்கத் தெரிந்து கொண்டீர்களா? இது கடிவாளம்... இது அங்குபடி....
அரசன் முன் சேணம் பூட்டிய குதிரையை நிறுத்தி..
அரசே! இப்போது குதிரைச் சவாரி செய்து பாருங்கள்!
மன்னனுக்கு ஒரே மகிழ்ச்சி...
அடாடா! எவ்வளவு சௌகரியமாய் இருக்கிறது! இனி எல்லாக் குதிரைகளுக்கும் சேணம் பூட்டப்படும்...


அவ்வாறு நடந்ததும் மன்னன் பூரிப்படைந்து....
இவ்வளவு கெட்டிக்காரனாகிய உன்னை என்னால் இழக்க முடியாது! சிந்துபாது! என் மந்திரி மகளைக் கலியாணம் செய்து கொண்டு இந் நாட்டிலேயே தங்கி விடு.
மந்திரி மகளுடன் ஓராண்டு ஆனந்தமாக இல்லறம் நடத்தினான் சிந்துபாது...
கண்ணே!
திடீரென்று சிந்துபாதின் அழகிய மனைவி நோய்வாய்ப்பட்டு, ஒருநாள் இறந்து போனாள்... துக்கம் விசாரிக்க வந்த மன்னன்...
சிந்துபாது, உன்னை இழக்கப் போகிறேனே என்று வருத்தமாய் இருக்கிறது.
திடுக்கிட்ட சிந்துபாது...
என்ன சொல்கிறீர்கள்?
எங்கள் நாட்டுப் பழக்கம், கணவன் இறந்தால் மனைவியையும் மனைவி இறந்தால் கணவனையும் சவக்குழியில் இறக்கி விட்டு விடுவோம். ஒருவரை ஒருவர் பிரிய விடமாட்டோம்!
சவக்குழி என்று அவர்கள் குறிப்பிட்டது ஒரு பள்ளத்தாக்கு அதற்குள் சிந்துபாதையும் இறந்து போன அவன் மனைவியையும் இறக்கினார்கள்.
நாலாபுறமும் சுவர் போன்று உயர்ந்த, செங்குத்தான மலைப் பாறை! இங்கிருந்து தப்பவே முடியாது!


மூன்று நாட்கள் சென்றன.
பசி மயக்கம் ஏற்படுகிறது. உயரே கழுகுகள் வட்டமிட ஆரம்பித்து விட்டன.
சிந்துபாது தானும் சாகத் தயாரானபோது...
ஆகா! அது என்ன? ஒரு நாய் போல இருக்கிறதே.. ..பிணம் தின்ன வருகிறதென்றால், இங்கிருந்து அது வெளியேறவும் ஒரு வழி இருக்கும்!
சவக்குழியில் உடல்களை இறக்கும் போது, அவர்களுடைய ஆபரணங்களைக் கழற்றாமல் அணிவிப்பது அந்நாட்டு வழக்கம்.
என் மனைவியின் நகைகள் தவிர வேறு பலரின் ஆபரணங்களும் இங்கு சிதறிக் கிடக்கின்றன...
நகைகளை முடிந்த மட்டில் திரட்டி, முடிந்து கொண்டு, ஓநாயை விரட்டினன் சிந்துபாது...
ஓநாய் ஒரு சிறிய குகைத் துவாரத்துக்குள் புகுந்து செல்ல...
இதன் வழியே நானும் தவழ்ந்து செல்ல வேண்டும்...


பொந்தின் வழியே சிரமப் பட்டு வெளியே வந்த சிந்துபாது...
ஆகா! கடற்கரை! நிச்சயம் ஏதாவது கப்பல் வரும்.
தேங்காய், பழங்களை உண்டான் சிந்துபாது... மேலும் இரு நாட்கள் செல்ல...
அதோ ஒரு கப்பல்! என்னை அவர்கள் பார்க்க வேண்டுமே...
கப்பலிலிருந்து ஒரு படகு இறக்கப் பட்டது...
கப்பல் உடைந்து கரை சேர்ந்தவன் போலும்...
அல்லாதான் என்னைக் காப்பாற்றினார்!
படகிலேறி கப்பலை அடைந்த சிந்துபாது...
என்னைப் பாக்தாத் அழைத்துச் செல்லுங்கள். பயணக் கட்டணமாக இதை வைத்துக் கொள்ளுங்கள்!
முதிய சிந்துபாது கதையை முடித்தான்.
ஏராள நகைகளோடு வந்து சேர்ந்த நான், அன்று முதல் சந்தோஷமாக வாழ்கிறேன்.
உங்கள் கதைகளைக் கேட்ட நான், இனி சோர்வு கொள்ளவே மாட்டேன்! வாழ்க்கையின் சவால்களைத் தைரியமாகச் சந்திப்பேன்!



எடுத்தவன் யார்?

''டேய், உங்க மூணு பேரிலே ஒருத்தன் தான் பணத்தை எடுத்திருக்கணும். பணத்தை மரியாதையாத் திரும்பக் கொடுத்திடுங்க. இல்லே, உங்க வாத்தியார்கிட்டே சொல்லிடுவேன்.''

சொக்கலிங்கம் நூறாவது தடவையாகச் சொன்னார்.

''அப்பா நான் எடுக்கலேப்பா.''

சொக்கலிங்கத்தின் மூன்று பையன்கள் முரளி, கண்ணன், வாசு ஒரே மாதிரி பதிலளித்தனர்.

''டேய், பொய் பேசாதீங்க. எடுத்திருந்தா, பரவாயில்லே. அதைத் திரும்ப வெச்சிடுங்க. அம்மா இல்லாத புள்ளைங்கன்னுதான் உங்களைச் செல்லமா வளர்க்கிறேன். சனிக்கிழமை காலையிலே ஊருக்குப் போனப்போ பையிலே சில்லறை இருந்ததை நான் கண்ணாலே பார்த்தேன். இப்ப வந்து பார்த்தா, உள்ளே இருந்த சில்லறையை எடுத்துக்கினு வெறும் பைக்கு முடிச்சுப் போட்டு வச்சிருக்கீங்க. உண்மையைச் சொல்லிடுங்க.''

''அப்பா நான் எடுக்கலப்பா'' சொக்கலிங்கத்தின் மூன்று பையன்களும் மீண்டும் அதே பதிலைக் கூறினர்.

சொக்கலிங்கத்துக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. மூன்று பையன்களில் ஒருவன்தான் செய்திருக்கிறான். ஆனால், எப்படிக் கண்டு பிடிப்பது?

சொக்கலிங்கத்துக்கு ஒரு யோசனை தோன்றியது.

''டேய், நம்ப எதிர் வீட்டிலே ஒரு வாத்தியார் குடியிருக்கிறாரே அவரு என்ன வாத்தியார்?''

''எங்களுக்கு கேம்ஸ், ஸ்கௌட் எல்லாம் சொல்லிக் கொடுக்கிற பி.டி. மாஸ்டர்.''

''டேய் முரளி, அவருகிட்டே போய் நான் கொஞ்சம் வரச் சொன்னேன்னு சொல்லு.''

முரளி வெளியே ஓடினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் பி.டி. மாஸ்டர் பெருமாள் உள்ளே நுழைந்தார்.

''சார், நீங்க எனக்கு ஒரு உதவி

செய்யணும். நான் சனிக்கிழமை காலையிலே ஊருக்குப் போறப்போ இந்தப் பையிலே பத்து ரூபா சில்லறையாப் போட்டு, கட்டி வச்சிட்டுப் போனேன். இப்ப வந்து பார்த்தா, வெறும் பைதான் இருக்கு! வெறும் பைக்கு சும்மா முடிச்சுப் போட்டு இருக்கு. இந்த மூணு பேரிலே ஒருத்தன்தான் எடுத்திருக்கணும். இந்தாங்க இந்தப் பையைப் பாருங்க.

சொக்கலிங்கம் வெறும் பையைப் பெருமாளிடம் கொடுத்தார்.

பெருமாள் பையைக் கூர்ந்து பார்த்தார். பிறகு நூல் முடிச்சை மெல்ல அவிழ்த்தார். உள்ளே கைவிட்டுப் பார்த்தார். பை காலியாக இருந்தது.

''யார் காசை எடுத்தது? உண்மையைச் சொல்லுங்க பார்க்கலாம்'' பெருமாள் மெல்லக் கேட்டார்.

''சார், நான் எடுக்கலே சார். நான் எடுக்கலே சார்'' மறுபடியும் அதே பதில்.

''முரளி, எச்.எம். இன்னைக்கு காலேலே பிரார்த்தனை மண்டபத்திலே மாணவர்கள் எப்படி இருக்கணும்னு சொன்னார்?''

''பொய் சொல்லக் கூடாது. திருடக் கூடாது. ஒழுக்கமா இருக்கணும்.''

''கண்ணன், அன்னைக்கு ஸ்கௌட் கிளாஸிலே மாணவர்கள் எப்படி இருக்கணும்னு நான் சொன்னேன்? சொல்லு பார்க்கலாம்.''

''மத்தவங்களுக்கு எப்பவும் உதவி செய்யணும். பொய் பேசக் கூடாது.''

''வாசு, இன்னைக்கு காலேல பர்ஸ்ட் பீரியடு உன் தமிழய்யா என்ன சொல்லிக் கொடுத்தார்?''

''தவறு எதுவும் செய்யக் கூடாது. தெரியாமல் செஞ்சிட்டா அதை ஒத்துக்கணும். மன்னிப்புக் கேட்டுக்கணும். மறுபடியும் அந்தத் தவறைச் செய்யவே கூடாது.''

''உங்க மூணு பேரிலே இதை யார் செஞ்சிங்கன்னு நான் கண்டுபிடிச்சிட்டேன். உண்மையை நீங்களே ஒத்துக்கங்க. இல்லே, நான் சொல்றேன், யார் எடுத்ததுன்னு'' பெருமாள் அழுத்தமான குரலில் கூறினார்.

மூன்று பையன்களும் அசையாமல் நின்றனர்.

சொக்கலிங்கம், பெருமாள் என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்க ஆவலாக நின்றார். மூன்று நிமிடங்கள் கரைந்தன.

''கண்ணன், நீதான் பணத்தை எடுத்திருக்கிறாய். பணத்தை உங்க அப்பா கிட்ட கொண்டு வந்து கொடுத்திடு. அவருகிட்ட மன்னிப்பு கேட்டுக்க. இனிமேல் இந்த மாதிரி வேலையெல்லாம் செய்யாதே'' — உறுதியான குரலில் சொன்னார் பெருமாள்.

கண்ணன் ஒரு கணம் பேயறைந்தது போல விழித்தான். பிறகு —

''அப்பா, நான் தெரியாமே செஞ்சிட்டேம்ப்பா. இனிமேல் செய்ய மாட்டேம்ப்பா. என்னை மன்னிச்சிடுங்க அப்பா'' என்று அழுதபடியே கூறிய கண்ணன், சமையலறைக்குள் நுழைந்து, மறைவாக இருந்த ஒரு டப்பாவில் கைவிட்டு, நிறையச் சில்லறை நாணயங்களை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

சொக்கலிங்கத்துக்கு ஆச்சரியமாக இருந்தது.

''சார், நீங்க எப்படி இவ்வளவு கரெக்டா கண்டு பிடிச்சிட்டீங்க?''

''நீங்க கொடுத்த காலிப் பையை அவிழ்த்தப்பவே, அது ஸ்கௌட்டில் சொல்லிக் கொடுக்கும் முடிச்சு என்பதைத் தெரிந்து கொண்டேன். உங்கள் மூணு பையன்களில் ஸ்கௌட்டில் இருப்பவன் கண்ணன் ஒருவன் தான். அதனால்தான் திருடியது அவன் தான் என்பதைச் சுலபமாகக் கண்டு பிடித்துவிட்டேன். அவனைத் திட்டாதீர்கள். தவறு எல்லோரும்தான் செய்கிறார்கள். அதை உணர்ந்து திருந்தியவர்களை நாம் மன்னிக்க வேண்டும். தண்டிக்கக் கூடாது.''

சொக்கலிங்கம் விசும்பிக் கொண்டிருந்த கண்ணனை மெதுவாக அணைத்துக் கொண்டு, அவன் கண்ணீரைத் துடைக்க ஆரம்பித்தார்.

இரா. வசந்தராசன்

வேலம்பட்டியில் வெள்ளைக்காரச் சிறுவர்கள்

பெரியசாமி செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருந்தார். அவரது கண்ணைக் கவர்ந்தது ஒரு விளம்பரம். கல்வி கலாசாரம் சுற்றுலாத் துறைகளின் சார்பாக அது கொடுக்கப்பட்டிருந்தது.

'பிரிட்டனிலிருந்து சிறுவர் குழு ஒன்று பாரதம் வர இருக்கிறது; தமிழ்நாட்டுக் கிராமங்களைப் பார்வையிட விரும்புகிறது. அச்சிறுவர் குழுவில் இருவரை பதினைந்து நாட்கள் தங்கள் விருந்தினராக வைத்துக் கொள்ள விரும்பும் கிராமவாசிகள், வட்டாட்சியர் வழியாக மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொள்க'—இதுவே விளம்பர வாசகம்.

பெரியசாமி பி.எஸ்ஸி வரை படித்தவர்; கிராமத்து வாழ்க்கையில் பழகிப் போனவர்; உயிர் கொடுக்கும் உழவுத் தொழிலை வேலம்பட்டியில் மிகச் சிறப்பாகச் செய்து வருபவர். அவருக்கு மூன்று குழந்தைகள்; வரது (வரதன் 14) ரேவு (ரேவதி 10); கடைசிப் பிள்ளை அம்பி (அம்பிகாபதி 9) இவர்கள் மூவரையும் அருகிலுள்ள நகரத்து ஆங்கில வழி கல்விக் கூடத்தில் சேர்த்திருந்தார். ஆயினும் தாய் மொழியான தமிழை அவர்கள் அலட்சியப்படுத்தவில்லை. தமிழிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.

மூவரும் பேருந்தில் பள்ளிக் கூடம் சென்று மாலையில் வேலம்பட்டிக்குத் திரும்புவர். தற்போது கோடை விடுமுறை; குழந்தைகளும் வேலம்பட்டியில்தானிருக்கின்றனர். 'வெள்ளைக்காரச் சிறுவர்களை நம் இல்லத்துக்கு வரவழைப்பது நல்லது. நம் குழந்தைகளுக்கும் பொழுது போகும். அக்குழந்தைகளுக்கு நம் நாட்டின் பெருமையை உயர்வை வாழ்க்கையை எடுத்துக் கூறலாம். அவர்களின் நல்ல பண்புகளை நம் குழந்தைகள் கற்றுக் கொள்ளக் கூடும்; நம் குழந்தைகளிடம், பரந்த நோக்கு, விரிந்த மனப்பான்மை போன்ற வித்துக்களும் ஊன்ற ஏதுவாகும்; எனவே இதில் ஈடுபட வேண்டும்' என்று தீர்மானம் செய்து கொண்டார்.

அன்றே அவர் செயலில் இறங்கினார். வட்டாட்சியர் வழியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பித்தார். பின்னர், தன் குழந்தைகளிடமும் அது பற்றிக் கூறினார். அவர்களும் மிகுந்த ஆர்வத்தோடு அப்பாவின் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர்.

அடுத்த வாரமே சுற்றுலாத் துறையிலிருந்து பெரியசாமிக்குக் கடிதம் வந்தது. அலுவலர் ஒருவர் நன்றி தெரிவித்து விரிவான கடிதம் எழுதியிருந்தார்.

குழந்தைகள் தங்கள் நண்பர்களிடம் இச்செய்தியைக் கூறினர். எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. அவர்களின் உள்ளங்கள் வெள்ளைக்காரச் சிறுவர்களான ஜேம்ஸ், ஜெஃபர்ஸன் இருவரையும் வரவேற்கத் தயாராயின.

நகரத்திலிருந்து வரும் முதல் பேருந்து அங்கு காலை ஒன்பது மணிக்கு வருகிறது. அதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பிருந்தே, வேலம்பட்டி பேருந்து நிறுத்தத்தில், ஒரு கூட்டம் அன்று நின்று கொண்டிருந்

லூர்து எஸ்.ராஜ்



தது. வரதுவின் தலைமையில் அவனது தம்பி தங்கை மற்றும் தோழர்களும் தோழிகளுமாகப் பத்து பேர்!

வேலம்பட்டி ஆற்றின் கரையில் இருக்கின்ற அழகிய சிறிய கிராமம்; ஊரைச் சுற்றியுள்ள வயல்வெளிகள், தோப்பு துரவு, ஊரின் நடுவில் எழுந்து நிற்கின்ற மாரியம்மன் திருக்கோயில், கிராமத்தை நெடுஞ்சாலையுடன் இணைக்கும் சுமார் ஒரு கி.மீ. நீளமான செம்மண் சாலை, அதன் இரு கரைகளிலும் வரிசையாக நிற்கின்ற ஆல், மற்றும் புளிய மரங்கள், இவைகளெல்லாம் அக்கிராமத்துக்கு அழகூட்டும் அம்சங்கள்.

அன்று பேருந்து தாமதமாகிவிட்டது. எனவே, சிறுவர்களின் எதிர்பார்ப்பு உச்சகட்டத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது; கடைசியில் 9.30 க்கு பேருந்து வந்தது. தூரத்தில் வரும்போதே நடத்துநரின் விசில் சத்தம் கேட்டது. வாண்டுகள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்.

பேருந்திலிருந்து இரு வெள்ளைச் சிறுவர்கள் இறங்கினர்; இரத்தச்சிவப் பேறிய முகம், செம்பட்டை மயிர், துருதுருவெனச் சுழலும் அழகிய நீல விழிகள்; ஒருவன் தோளில் ஒரு பெரிய பை தொங்கியது. மற்றவன் முதுகில் ஒரு சிறிய ஹோல்டால்.

இவர்களைக் கண்டதும் தேவலோகத் தூதர்களைக் கண்டது போல் வாண்டுகள் மகிழ்ந்து கூத்தாடினர். சிலர் 'வெல்கம் டு ஜேம்ஸ் அண்டு ஜெஃபர்ஸன்' (ஜேம்ஸுக்கும் ஜெஃபர்ஸனுக்கும் நல்வரவு) 'லாங் லிவ் ஜேம்ஸ் ஜெஃபர்ஸன்' (ஜேம்ஸ், ஜெஃபர்ஸன் நீடூழி வாழ்க!) என்று எழுதப்பட்ட அட்டைகளைத் தூக்கிப் பிடித்தனர். அனைவரும் கூட்டாக இவ்வாழ்த்தொலிகளை எழுப்பி ஆர்ப்பரித்தனர்.

வரதுவும் அம்பியும் கொண்டு வந்த மாலைகளை அவர்களுக்கு அணிவித்தனர்.

“ஐ ஆம் வரதன். கிளாட் டு மீட் யூ” (நான்தான் வரதன்; உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி) என்று கூறிய அவன், அவர்களின் கைகளைப் பிடித்துக் குலுக்கினான். அதன்பின் வெள்ளைச் சிறுவர்கள் கைகளைக் கூப்பி, “வணக்கம்” என்றனர். அவர்களின் வணக்கத்தைக் கேட்ட சிறுவர் பட்டாளம் சிரித்து மகிழ்ந்தது. பின்னர் வரது ஒவ்வொருவரையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்

தான். அனைவரும் கைகுலுக்கி மகிழ்ந்தனர்.

வரது மாடுகளை அவிழ்த்து வண்டியில் பூட்டினான். மற்றவர்கள் அவ்விருவரையும் அழைத்து வந்து வண்டியில் ஏற்றிவிட்டனர். அவ்விருவரும் வண்டியோட்டும் வரதுவுக்குப் பின் அமர்ந்து கொண்டனர். பின்னர் வாண்டுகள் அனைவரும் ஏறியமர்ந்து கொண்டனர். கூண்டு வண்டி புறப்படத் தயாரானது.

காளைகளின் கழுத்து மணிகள் குலுங்கி 'ஜல்ஜல்' என்ற இனிய ஒலி எழுப்ப அவ்வண்டி செம்மண் சாலையில் விரைந்தது. மாடுகளின் மணிகள் எழுப்பிய ஒலியும், மாட்டு வண்டிப் பயணமும் அவர்களுக்கு மிகவும் பிடித்துவிட்டன. ''ஹவ் பிளசன்ட்!'' (எத்தகைய இன்பம்!) என்று கூறி அவர்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

மேடான அந்தச் சாலையிலிருந்து பார்க்க வேலம்பட்டிக் கிராமம், பச்சைக் கம்பளத்தில் கிடந்து ஒளி வீசும் மாணிக்கப் பரல் போல் மிளிர்ந்தது. இக்காட்சிகளால் கவரப்பட்ட ஜெஃபர்ஸன் வண்டியை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டான். ஜேம்ஸ் அக்கிராமத்தைப் புகைப்படமாக்கிக் கொண்டான். பின்னர் அக்கூண்டு வண்டியையும் 'கிளிக்' செய்து கொண்டான். பின்னர் மீண்டும் வண்டிப் பயணம் தொடர்ந்தது.

''வி ஆர் நியரிங் அவர் வில்லேஜ் வேலம்பட்டி'' (எங்கள் கிராமமான வேலம்பட்டியை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.) என்றான் வரது.

விரைந்து வந்த வண்டி பெரியசாமியின் வீட்டின் முன் வந்து நின்றது. பெரியசாமியும் அவர் மனைவி திலகவதியும் வாசலில் வந்து நின்று அக்குழந்தைகளை வரவேற்றனர். ஆரத்தி சுற்றப்பட்டது.

வரதன் தன் பெற்றோர்க்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான். வெள்ளைக்காரச் சிறுவர்கள் அத்தம்பதிகளின் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர். 'வணக்கம்' கூறினர். கைகளைக்குலுக்கினர்.

பின்னர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் புரியுமாறு பெரியசாமி பதிலளித்தார். ஆரத்தி பற்றி அவர்கள் துளைத்து துளைத்துக் கேள்விகள் கேட்டனர். அவர்களுக்கு விளக்கமான பதிலளித்து எல்லா சந்தேகங்களையும் போக்கினார்.

ஜேம்ஸ், ஜெஃபர்ஸன் உட்பட எல்லாக் குழந்தைகளுக்கும் அங்கு விருந்து ஏற்பாடு செய்திருந்தனர். தமிழ் முறைப்படி விருந்து அளிக்கப்பட்டது.

தரையில் அமர்ந்து இலையில் உண்பதற்கு அச்சிறுவர்கள் சிரமப்பட்டனர். உண்ணும் முறை பற்றியும் பரிமாறப்பட்ட உணவு வகைகளைப் பற்றியும் அவர்கள் பல கேள்விகளைக் கேட்டு அறிந்து கொண்டனர்.

மறுநாள் காலை; பெரியசாமியின் குழந்தைகளைப் போலவே வெள்ளைக்காரச் சிறுவர்களும் எழுந்து நீராடித் தயாராயிருந்தனர்.

சுவை மிகுந்த கேசரி, நெய்யொழுகும் தோசை, வடை, சட்னி, சாம்பார் இவற்றை ருசித்து உண்டனர் அச்சிறுவர்கள். சாப்பிடும்போதே அவர்களுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. 'இந்தத் தோசைகள் எல்லாம் கோணல்மாணல் இல்லாத ஒரே வட்டமாக ஒரே அளவாக எவ்வாறு தயாரிக்

''மாமா! இன்னைக்கு நியூஸ் பேப்பர் கொஞ்சம் கொடுங்க...''

''படிக்கறதுக்கு உங்கப்பா கேட்டு வாங்கி வரச் சொன்னாரா?''

''இல்ல. நான்தான் கேக்கறேன். என் புது புஸ்தகங்களுக்கு அட்டை போட்டுக்க!''





கப்படுகின்றன?' என்ற சந்தேகமே அது.

காலை உணவு முடிந்தது. வெள்ளைக் காரச் சிறுவர்கள் அடுக்களையினுள் நுழைந்தனர். அங்கே திலகவதி தோசை வார்த்துக் கொண்டிருந்தாள். அதை ஆச்சரியமாகப் பார்த்தனர் அச்சிறுவர்கள்.

''ஆன்ட்டி, யு யூஸ் நோ காம்பஸ் ஆர் டிவைடர். பட், ஹவ் கான் யூ மேக் எ பர்பக்ட் சர்க்கிள்?'' என்று கேட்டான் ஜேம்ஸ். (மாமி, நீங்கள் காம்பஸ், டிவைட்ர் போன்ற எதையும் பயன்படுத்துவதில்லை. ஆனால், சரியான வட்டமாக எவ்வாறு தோசை வார்க்க முடிகிறது?)

இது பழக்கத்தினால் ஏற்பட்ட திறமை என்பதைத் திலகவதி விளக்கிக் கூறினாள்.

அன்று மாலை சிறுவர் கூட்டம் ஆற்றங்கரை ஓரமாக நடந்து போய்க் கொண்டிருந்தது. ஒரு வாழைத் தோட்டம் அருகிலிருந்தது. வெள்ளைக் காரப் பையன்களுக்கு வாழை மரம் மிகவும் விசேஷமாகத் தோன்றியது.

''இட் ஹேஸ் நோ பிராஞ்சஸ்'' என்றான் அம்பிகாபதி. (வாழை மரத்திற்குக் கிளைகள் இல்லை.)

வாழை மரம், பூ இவற்றைத் தனித் தனியாக அவர்கள் படம் எடுத்துக் கொண்டனர்.

அடுத்திருந்த சில நெல் வயல்களில் அறுவடை நடந்து கொண்டிருந்தது. அம்பி அவர்களை அங்கு கூட்டிச் சென்றான்.

ஆண்களும் பெண்களும் நெற்பயிரை விரைந்து அறுப்பதை அவர்கள் படமெடுத்துக் கொண்டனர். களத்துமேட்டில் நெல் அம்பாரமாய்க் குவிக்கப்பட்டிருந்தது. ஓர் உழவர் மரக் காலால் அதை அளந்து சாக்கு பையில் கொட்டிக் கொண்டிருந்தார். அதையும் அவர்கள் கிளிக் செய்து கொண்டனர்.


அந்த அளவையின் பெயரைக்

கேட்டுத் தெரிந்து கொண்ட ஜேம்ஸ், ''வாட் டஸ் மரக்கால் மீன்?'' (மரக்கால் என்றால் பொருள் என்ன?) என்று கேட்டான்.

''இட் மீன்ஸ் வுடன் லெக்'' (மரத்தால் செய்யப்பட்ட கால்) என்றாள் ரேவதி.

''பட் இட் இஸ் மேட் ஆஃப் அயர்ன்'' (ஆனால், இது இரும்பால் அல்லவா செய்யப்பட்டுள்ளது) என்றான் ஜெஃபர்ஸன்.

''ஹவ்வவர் இட் இஸ் நோன் ஆஸ் மரக்கால்'' (இருந்தபோதிலும் இது மரக்கால் என்றே சொல்லப்படுகிறது) என்றான் அம்பி.



''உங்க மகனைக் காணோம்னு தேடினீங்களே, கிடைத்தானா?''

''பையனைக் காணோம்னு போலீஸிலே ரிப்போர்ட் கொடுக்கப் போனேன். அங்கே என்னடான்னா, அப்பாவைக் காணோம்னு என் மகன் ரிப்போர்ட் கொடுத்திட்டிருக்கான்!''

— எஸ். பரமகுரு

அன்று மாரியம்மன் கோயிலில் காப்புக் கட்டு உற்சவம், மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வாண்டுகள் அச்சிறுவர்களைக் கோயிலுக்கு அழைத்து வந்தனர். இங்கிலாந்துச் சிறுவர்கள் கோயிலையும் தெய்வங்களையும் பலமுறை கிளிக் செய்து கொண்டனர். பல குறிப்புகளை எழுதிக் கொண்டனர்:

ஒருவர் பெரிய தடியங்காயைச் சுமந்து சென்றார். அது என்னவென்று ஜெஃபர்ஸன் கேட்டான். வரதன் ''தடியங்காய்'' என்று பதில் கூறினான். தடியங்காய் என்பது என்னவென்று கேட்டபோது, 'ஃபேட் வெஜிடபிள்' (பருமனான காய்) என்றாள் ரேவதி.

பின்னர் கிராமத்துச் சிறுவர்கள் மாரியம்மனைத் தரிசனம் செய்தனர். திருநீற்றை வாங்கி நெற்றியில் பூசிக் கொண்டனர். அதையெல்லாம் கவனமாய்ப் பார்த்துக்கொண்ட வெள்ளைக்காரப் பிள்ளைகள் குறிப்பெடுத்துக் கொண்டனர்.


வரதன் விபூதியைக்கொண்டுவந்து அவர்களிடம் கொடுத்தான். அவர்களுக்கு அதை என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லை. எனவே அவனே அதை அவர்கள் நெற்றியில் பூசி வைத்தான். வெள்ளைக்காரப் பையன்களுக்கோ அளவு கடந்த மகிழ்ச்சி!

இப்போது கிராமத்தின் எல்லாப் பகுதிகளும் அவர்களுக்கு அத்துப்படி. ஊரிலுள்ள எல்லாக் குழந்தைகளும் அவர்களின் நண்பர்களாகி விட்டனர். சுற்றுப்புறத்திலுள்ள சில கிராமங்களையும் அவர்கள் கண்டனர். வரது, ரேவு, அம்பி மூவரும் அவர்கள் மேல் பாசத்தைப் பொழிந்தனர்.

வெள்ளைக்காரப் பிள்ளைகள் புறப்படுவதற்கு முந்திய நாள். பெரியசாமியும் திலகவதியும் ஓய்வாக அமர்ந்திருந்தனர். ஜேம்ஸும், ஜெஃபர்ஸனும் தங்களது குறிப்புக்களை அவர்களிடம் கொடுத்தனர். பெரியசாமி அவைகளை உரக்கப் படித்தார். 'வுடன் லெக்', (மரத்தாலான கால்) ஃபேட் விஜிடபிள் (பருமனான காய்) இவை போன்ற பல குறிப்புக்களை அத்தம்பதியினர் வாசித்துச் சிரித்தனர். அவர்களைச் சுற்றி அமர்ந்திருந்த வெள்ளைக் குழந்தைகள் உட்பட அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

''இப்படி மொழிபெயர்ப்பதில் தவறு இருக்கிறது'' என்று கூறிய அவர், விரிவான விளக்கம் ஒன்றை அளித்தார். உடனே சிறுவர்கள் தங்கள் குறிப்புகளை அடித்துத் திருத்தி சில மாற்றங்களைச் செய்து கொண்டனர்.

வெள்ளைக்காரப் பிள்ளைகள் புறப்படும் நாள் வந்தது. அவர்களை வழியனுப்பி வைக்க வேண்டிய நேரம். பெரியசாமியின் வீட்டில் அந்தக் கிராமமே திரண்டு வந்து கூடியிருந்



"என்னய்யா அது? கப் ஐஸ் கேட்டா குச்சி ஐஸ் எடுத்து நீட்றே?"

"பேசாம இதைச் சாப்பிடுங்க..... கப் ஐஸ் உங்க உடம்பு தாங்காது!"

தது. ஆண்கள், பெண்கள் சிறுவர் சிறுமியர்களாகப் பெரிய கூட்டம். வீட்டின் முன் உள்ள பந்தலில் அனைவரும் கூடி இருந்தனர்.

கூடியிருந்த அனைவருக்கும் தேனில் ஊறிய பலாச்சுளைகள், வாழைப் பழம், மாம்பழத் துண்டுகள், கூல் டிரிங்ஸ் ஆகியவை வழங்கப்பட்டன.

பின்னர் ஜேம்ஸும் ஜெஃபர்ஸனும் பேசினர். பெரியசாமி அதைத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார். "பரந்து விரிந்த இப்பெரிய பாரத நாட்டின் கலாசாரமும் பண்பாடும் எங்களைப் புல்லரிக்கச் செய்கின்றன. உங்களின் விருந்தோம்பும் பண்பை வேறுஎந்தநாட்டிலும்காண இயலாது. அதற்கு இந்த உலகத்தையே கொடுத்தாலும் ஈடாகாது. இந்த நாட்டை எங்கள் மூதாதையர்கள் அடிமைப் படுத்தி வைத்திருந்தார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அது எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்போது உணர்கிறோம். உங்கள் அனைவருக்கும் எங்களின் நன்றி. சிறப்பாக பெரியசாமி அங்கிளுக்கும் ஆன்ட்டிக்கும் வரது, ரேவு, அம்பி அனைவருக்கும் நன்றி". இம்மொழி பெயர்ப்பைக்கேட்ட அனைவரும்மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

ஜேம்ஸ், ஜெஃபர்ஸன், வரதன் மூவரும்நினைவுப்பரிசுகளைப்பரிமாறிக் கொண்டனர். ஆட்டோகிராப் எழுதிக் கொண்டனர். மூவரது முகவரிகளும் தெளிவாக எழுதிக் கொள்ளப்பட்டன.

வேலம்பட்டியின் அனைத்து குழந்தைகளுடனும் வெள்ளைக்காரப் பிள்ளைகள் அமர்ந்திருப்பது போல் ஒரு படம் எடுக்கப்பட்டது, பின்னர் பெரியசாமி தம்பதிகளும் அவர்களின் குழந்தைகளும் வெள்ளைக்காரப் பிள்ளைகளுடன் இருப்பது போல் எடுக்கப்பட்டது.

வெள்ளைக்காரப் பிள்ளைகளுக்குப் பிடித்தமான அப்பளம், ஊறுகாய், சீடை, முறுக்கு, அல்வா, பலாச்சுளை ஆகியவை தனித்தனியாகக் கட்டப் பட்டன. அவர்களது பையும், ஹோல்டாலும் நிரப்பப்பட்டன.

ஜேம்ஸும் ஜெஃபர்சனும் பெரியசாமித் தம்பதிகளின் காலைத் தொட்டு வணங்கினர். அத்தம்பதியினர் சிறுவர்களின் நெற்றியில் முத்தமிட்டு வழியனுப்பினர். "தேங்க்யூ ஆன்ட்டி, தேங்க் யூ அங்கிள்" என்று கூறிய அச்சிறுவர்கள் வண்டியினுள் ஏறி அமர்ந்து கொண்டனர்.

வரதன் வண்டி ஓட்டினான். அது வேலம்பட்டி பேருந்து நிறுத்தத்தை அடைந்தது. அனைவரும் இறங்கினர். அவர்களது பொருட்களை மற்றவர்கள் இறக்கி வைத்தனர்.

நகரத்துக்குச் செல்லும் பேருந்து, அன்று குறிப்பிட்ட நேரத்துக்குச் சரியாக வந்து நின்றது. அவ்விருவரும் பேருந்தினுள் ஏறினர். அவர்களது பொருட்களும் ஏற்றி வைக்கப் பட்டன. 'டாடா,' 'குட்பை' போன்ற ஒலிகள் எங்கும் கேட்டன. பேருந்து விருட்டென விரைந்து பறந்தது.

பேருந்து மறைந்து சென்ற பின்னும் வரது, ரேவு, அம்பி, கிட்டு மற்றும் அங்கு வந்த சிறுவர் அனைவரும் சில நிமிடங்கள், பித்துப் பிடித்தாற்போல் நின்று கொண்டிருந்தனர். இனம், மொழி போன்ற வேறுபாடுகளுக்கு அங்கே இடமில்லை.

தங்கள் உறவினர் இருவர் தங்களை விட்டுப் பிரிந்து தொலைவிலுள்ள நாட்டுக்குச் செல்வதைப் போல் கிராமத்துச் சிறுவர்கள் உணர்ந்தனர். யாதும் ஊரே யாவரும் கேளிர்!



ஏஷியாட்டின் கதை

ஆசிய விளையாட்டுகள் பற்றி உங்களுக்குத் தெரியும் அல்லவா? அதன் வரலாறு என்ன? சொல்கிறேன்.

'ஏஷியாட்'டின் துவக்கம்

'ஏஷியாட்'டின் துவக்கம் 1951 இல் தான். என்றாலும், அதற்கு முன்பு நான்கு பெரிய ஆசிய நாடுகள் கூடிப் போட்டிகளை நடத்தின. அதற்கு 'மேற்காசிய விளையாட்டுகள்' என்று பெயர். முதலாவது 1934 இல் நடந்தது. இரண்டாவது 1938 இல் நடக்கவேண்டும். ஆனால், இரண்டாம் உலகப் போர் காரணமாக நடக்கவில்லை.

போருக்குப் பிறகு சில முயற்சிகள் நடந்தன. குருதத்த சோந்தி என்று ஒருவர். அவருடைய எண்ணம்தான் இன்று 'ஏஷியாட்'டாக உருப்பெற்றுள்ளது. அவருக்குத் துணையாக மூவர். யார் யார் தெரியுமா?

அந்தோணி டி மெல்லோ என்று ஒருவர். யாதவேந்திர சிங் என்று மற்றொருவர். இவர் பாடியாலா மன்னர். மூன்றாமவர் நம் நேருஜி!

1947 இல் தில்லியில் ஆசிய ஒத்துழைப்பு மாநாடு. அதில் 'ஏஷியாட்' துவக்குவது என முடிவு செய்தார்கள். 1948. லண்டன் ஒலிம்பிக் சமயம். அங்கு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் நாள் ஆறு ஆசிய நாடுகள் கூடிப் பேசின. அதன் பயனாக 'ஆசிய விளையாட்டுக் கழகம்' தோன்றியது. ஆண்டு 1949, பிப்ரவரி 23. விதிமுறைகள் வகுக்கப்பட்டன. அதை ஒன்பது நாடுகள் ஏற்

ஜானகி மணாளன்

றன. முதல் தலைவர் யார் தெரியுமா? பாடியாலா மகாராஜாதான். செயலாளர் — பொருளாளர் குருதத்த சோந்தி. இவர்தான் 'ஏஷியாட்'டின் தந்தை எனப்படுபவர்.

முதல்ஏஷியாட்டுக்குநாள் குறிக்கப்பட்டது. 1950 என்று முடிவாயிற்று. ஆனால், தள்ளிப் போயிற்று. ஏன் தெரியுமா? பணப் பிரச்னை! நமது இந்திய விளையாட்டுக் கழகம் ஒரு லட்சம் ரூபாயை அளித்தது. அடுத்த பிரச்னை, 'அதை யார் நடத்துவது?' நாடுகளுக்கு இடையே நீ—நான் என்ற போட்டி. கடைசியில் நமது பாரதத்திடம் அப்பொறுப்பை ஒப்படைக்க, எல்லா நாடுகளும் முடிவு செய்தன. அது முதல், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவையாகத் தொடர்ந்து நடந்து வருகிறது. எப்படித் தெரியுமா? ஒலிம்பிக் லீப் வருடங்களில் நடக்கும். அடுத்த இரண்டாம் ஆண்டு ஏஷியாட்! அதற்கு அடுத்த இரண்டாம் ஆண்டு மீண்டும் ஒலிம்பிக்! இப்படி இரண்டும் மாறி மாறி நடக்கும்.

அன்று முதல் இன்று வரையில், இந்த 'ஏஷியாட்'டில் நமது பாரதத்தின் சாதனை என்ன?

முதல் ஏஷியாட்

இது நமது பாரதத்தின் தலைநகரம் புதுதில்லியில் நடந்தது. ஆண்டு 1951 நவம்பர். இடம் நேஷனல் ஸ்டேடியம். அதற்கு நேரு ஸ்டேடியம் என்று பெயர் சூட்ட முடிவு செய்தனர். ஆனால், நேருஜி அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால், இப்போது அதற்கு 'நேரு ஸ்டேடியம்' என்று பெயர் சூட்டப்பட்டு விட்டது. 21 குண்டுகள் முழங்க, அப்போதைய ஜனாதிபதி பாபு ராஜேந்திரப் பிரஸாத் துவக்கி வைத்தார். பார்வையாளர்கள் 40 ஆயிரம் பேர். 11 நாடுகள் பங்கேற்றன. இந்த ஆசிய விளையாட்டுகள் துவக்கப்பட முன்நின்ற நாடு கொரியாதான். ஆனால், அந்தநாட்டில்போர். எனவே, இதில் அந்நாடு கலந்து கொள்ளவில்லை. மைதானத்தில் வரிசையாக 11 நாடுகளின் கொடிகள். நடுவில் 'ஏஷியாட்' கொடி. வெண்மை நிறம். அதில் 11 வளையங்கள். ஆப்கானிஸ்தான் தலைமையில் அணிவகுப்பு. பழைய தில்லி கோட்டையில், சூரிய வெப்பத்தைக் கொண்டு, 'ஏஷியாட் ஜோதி' ஏற்றப்பட்டது. பிரிகேடியர் திலீப்சிங் ஜோதியைத் தாங்கி ஓடிவந்தார். இவர் 1924 பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியா சார்பில் கலந்து கொண்டவர். ஆறு போட்டிகள் நடந்தன. முதல் இடம் ஜப்பானுக்கு. இரண்டாம் இடம் இந்தியா. நமக்கு 15 தங்கப் பதக்கங்கள், 16 வெள்ளி, 21 வெண்கலம். கால் பந்தாட்டத்தில் இந்தியா வெற்றி!

இரண்டாவது ஏஷியாட்

1954 இல் பிலிப்பைன்சின் தலை



நகர் மணிலாவில் நடந்தது. முதலிடம் ஜப்பான். நமது பாரதத்துக்கு வீழ்ச்சி. நான்காவது இடம்தான். ஐந்து தங்கம்தான் கிடைத்தன. தட்டு எறித லிலும் குண்டு எறிதலிலும் பிரத்யும்ந சிங். நூறு மீட்டர் ஓட்டத்தில் நைவன்சிங். உயரத் தாண்டுதலில் அஜித்சிங். இவர்கள் எல்லாரும் புதிய ரிக்கார்டுகள். முதன் முதல் இந்தியப் பெண் தங்கப்பதக்கம்பெற்றஏஷியாட் இது. இந்தத் தடவை கால் பந்தில் மூன்றும் இடம்கூடக் கிடைக்கவில்லை.

மூன்றுவது ஏஷியாட்

இடம் ஜப்பானின் தலைநகர் டோக்கியோ. ஆண்டு 1958. உத்தம்சிங்கும், மில்காசிங்கும் கலந்து கொண்ட முதல் பன்னாட்டு விளையாட்டு. 200 மீ. மற்றும் 400 மீட்டரில் தங்கம். அஞ்சல் ஓட்டத்தில் ஒன்று. பல்கார், பிரத்யும்ந சிங் தலா ஒரு தங்கம். முப்பாய்ச்சலில் முதல் இடம் மொஹிந்தர்சிங்.

நான்காவது ஏஷியாட்

இடம், இந்தோனேஷியாவின் தலை நகர் ஜகார்த்தா. ஆண்டு 1962. பாரதம் ஹாக்கியில் தங்கம் பெற முயன்றது. ஆனால், கிடைத்தது கால் பந்தில். சிறந்த குத்துச் சண்டைப் பதக்கம் பெற்றவர் பகாதுர்மல்., வாலிபாலில் இறுதி ஆட்டம் வரையில் வந்து தோல்வி. 400 மீட்டரில் வெற்றி மில்கா சிங். ஆனால், 200 மீட்டரில் அரையிறுதி யில் தோல்வி. 1500 மீட்டரில் வெற்றி மொஹிந்தர் சிங். டெகாத்லானில் குருபச்சன் சிங் தங்கம். 4 × 100 மீ அஞ்சலில் வெற்றி. முக்கியப் பங்கு மில்காசிங், திரிலோகசிங் ஒரு தங்கம், ஒரு வெள்ளி.

ஐந்தாவது ஏஷியர்ட்

ஆண்டு 1966. இடம் பாங்காக். தாய்லாந்தின் தலைநகர். முதன் முதல், விளையாட்டு வீரர் 'ஆணு, பெண்ணு என்று அறியப் 'பால் சோதனை' அறிமுகம். முதன் முதலாக ஹாக்கி யில் தங்கம். மூன்று பெண்கள் அணிக்கு வெண்கலம். உயரத் தாண்டு தலில் பீம்சிங் தங்கம். குண்டுஎறிதலில் பிரவீண் குமார் தங்கம் எதிர்பார்த் தார். ஆனால், கிடைத்தது தட்டு எறிதலில். ஜோகீந்தருக்கு 'ஷாட் புட்'டில் தங்கம். குத்துச் சண்டையில் நாமதேவ் மோரே வெள்ளி. ஹவா சிங் தங்கம். வாலிபாலில் துவக்க ஆட்டத்திலேயே அவுட்!

ஆறுவது ஏஷியாட்

ஆண்டு 1970. சியோலில் நடக்க வேண்டும். அங்கு பூகம்ப அச்சம். எனவே, மீண்டும் பாங்காக். 400 மீட்ட ரில் கடைசி நேரத்தில் கமல்ஜித் சிந்து வெற்றி. முதன் முதலில் இந்தியா 800 மீட்டரில் பங்கு பெற்றது. வீரர் ஸ்ரீராம் சிங். ஆனால் வெற்றி இல்லை. முப் பாய்ச்சலில் மொஹிந்தர்சிங் தங்கம். ஷாட்புட்டில் மீண்டும் ஜோகீந்தர் தங்கம். தட்டுஎறிதலில் ப்ரவீண் குமார் தங்கம். ஹவாசிங்கிற்கு மீண்டும் தங்கம். கால் பந்தில் மீண்டும் தங்கம். ஹாக்கியில் பாகிஸ்தானிடம் தோல்வி.

ஏழாவது ஏஷியாட்

ஆண்டு 1974. இடம் ஈரானின் தலைநகர் டெஹ்ரான். முதன் முதல் 'சின்தடிக் ட்ராக்' அமைக்கப்பட்டது. நமக்கு 4 தங்கம். சிவநாத் 2. நீளம் தாண்டுதலில் டி. சி. யோகானந்தத் துக்குத் தங்கம்.

எட்டாவது ஏஷியாட்

இடம் பாங்காக். ஆண்டு 1978. அங்கு இது மூன்றுவது தடவை. 200 மீட்டரில் குணசேகரனுக்குத் தங்கம். 400 இல் உதய்பிரபு. முரளிகுட்டன் வெண்கலம். 800 மீட்டரில் ஸ்ரீராம் சிங் தங்கம். சுரேஷ்பாபு நீளம் தாண் டுதலில் தங்கம். ஷாட்புட்டில் தங்கம் பகாதுர்சிங்கிற்கு. 800 மீட்டரில் தங்கம் கீதாஜூத்ஹிக்கு. 1500 இல் இரண்டாம் இடம். ஏஞ்சல் மேரி ஜோசப் 2 வெள்ளி. துப்பாக்கி சுடுவ தில் ரண்தீர்சிங் தங்கம். ஹாக்கியில் மீண்டும் பாகிஸ்தானிடம் தோல்வி.



ஒன்பதாவது ஏஷியாட்

1982இல் புதுதில்லியில். இதுஇங்கு இரண்டாம் தடவை. ஜெய்ப்பூர் வரையில் பல மைதானங்கள். முதன்முதல் நடைப்போட்டி சேர்க்கப்பட்டது. தட்டு எறிதலில் தங்கம் பகாதூர்சிங். 400 மீட்டரில் வலசம்மா. கல்ஃப் மற்றும் குதிரை ஓட்டம் சேர்க்கப்பட்டன. இரண்டிலும் இந்தியா தங்கம். பெண்கள் ஹாக்கி தங்கம். ஆண்கள் அணிக்கு வெள்ளி. இந்தியாவுக்கு 13 தங்கம், 19 வெள்ளி, 25 வெண்கலம். ஆக 57 பதக்கங்கள். 1951, முதல் ஒலிம்பிக்கில் 52 தான். எனினும் முதல் மூன்றிடம் நமக்கு இல்லை.

பத்தாவது ஏஷியாட்

1986 செப்டம்பர் 20 முதல் அக்டோபர் 5 வரையில் 15 நாட்கள். இடம் தென்கொரியத் தலைநகர் சியோல். கலந்து கொண்ட நாடுகள் 27. வீரர்கள் கிட்டத்தட்ட 5000 பேர். 25 விளையாட்டுகள், 269 போட்டிகள். இதற்கு மற்றொரு சிறப்பு உண்டு. என்ன தெரியுமா? அடுத்த ஆண்டு வரப் போகும் 24 வது ஒலிம்பிக்கும் இங்குதான். எனவே சியோல் ஏஷியாட், '1988 — சியோல் ஒலிம்பிக்' கின் முன்னோடி!

சியோலில் நமது பாரதத்தின் சாதனை என்ன தெரியுமா? 5 தங்கம், 9 வெள்ளி, 23 வெண்கலம். இதில் பி. டி. உஷா மட்டும் 4 தங்கம், 1 வெள்ளி. அவை, 200 மீ, 400 மீ, 400 மீ தடை ஓட்டம் மற்றும் 4 × 400 மீ அஞ்சல் ஓட்டத்தில். ஒருவரே 4 தங்கமும் 1 வெள்ளியும் பெற்றவர்கள் இருவர். அதில் ஒருவர் நம் உஷா! மொத்தத்தில் இந்தியாவுக்கு ஐந்தாவது இடம். 800 மீ. ஓட்டத்தில் முதலிடம் ஷைனி ஆபிரகாம். ஆனால் 100 மீட்டருக்குள் 'ட்ராக்' மாறியதால் பதக்கம் திரும்பப் பெறப்பட்டு விட்டது. அவருக்கு 400 மீட்டரில் வெள்ளி, தங்கம் உஷாவுக்கு. ஒரே ஓட்டத்தில் இருவர் பதக்கம் பெறுவது பாரதத்துக்கு இதுவே முதல் தடவை. 4 × 400 மீ. அஞ்சலில் தங்கம் இந்தியாவுக்கு. ஓடியவர்கள் ஷைனி, உஷா, வந்தனா ராவ் மற்றும் வலசம்மா. இந்த ஏஷியாட்டில் ஏராளமான புதிய ஆசிய ரிக்கார்டுகள். ஆனால் உலக ரிக்கார்டு ஒன்று கூட இல்லை. மக்களின் கவனத்தை ஈர்த்தவர் நால்வர். அதில் ஒருவர் நம் பி. டி. உஷா!

11 வது ஏஷியாட்

குழந்தைகளே!—அடுத்த—அதாவது 11 வது ஏஷியாட் எங்கு தெரியுமா? சீனாவின் தலைநகரம் 'பீகிங்'கில். ஆண்டு 1990. அப்போது, இமயமலையில் ஜோதி ஏற்றப்பட்டு, அங்கிருந்து முதல் ஏஷியாட் நடந்த புதுதில்லிக்கு எடுத்து வரப்படும். பிறகு வரிசையாக, இதுவரை ஏஷியாட் நடந்த நகரங்களுக்குச் செல்லும். இறுதியாக 11 வது ஏஷியாட் நடக்கும் 'பீகிங்'கிற்குச் சென்றடையும். அந்த நன்னாளை ஆவலோடு எதிர்பார்ப்போம்!

பலராமன் விற்ற தின்பண்டம்

த.கி. இராமசாமி



தினமும் காலை எட்டரை மணிக்கெல்லாம் அந்தப் பலகார வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்துவிடுவான் பலராமன்.

அந்த வண்டியின் மீது கொடுக்காய்ப்புளி, மாங்காய், நெல்லிக்காய் எப்பொழுதோ வாங்கிவைத்திருக்கும் தேங்காய் மிட்டாய்; இன்னும் என்னவெல்லாமோ இருக்கும்.

குவியல் குவியலாகக் 'காணப்படும் அந்தப் பொருள்கள் சுத்தமாகவே இருக்காது. ஈ மொய்த்துக் கொண்டிருக்கும்.

சாலையில் வண்டியைக் கொண்டு போவதாலும், அந்தப் பொருள்களைக் கண்ணாடி ஜாடியாலோ வேறு எந்தப் பொருளாலோ மூடாததாலும் தெருப் புழுதி கூட அந்த உணவுப் பொருளின் மீது ஒட்டியிருக்கும்.

பெயருக்கு ஈயை விரட்ட ஓரே ஒரு சின்னக் குச்சியை வைத்துக் கொண்டு விரட்டிக்கொண்டே வருவான் பலராமன்.

அவனுக்கென்று கார்ப்பரேஷன் பள்ளிக்குப் பக்கத்தில் ஒரு மரத்தடியில் ஓர் இடம் இருக்கும்.

அந்த இடத்தில் காலையில் எட்டரை மணிக்கெல்லாம் தினமும் பலராமனைப் பார்க்கலாம்.

அவன் வந்தவுடன், அந்தப் பள்ளியில் படிக்கும் சிறுவர் சிறுமியரெல்லாம் ஓடோடி வருவார்கள்.

மாங்காய் சீசனில் நல்ல வியாபாரம்.

மாங்காயை நீளவாட்டில் பெரியதாக வெட்டி அதைச் சின்னச் சின்னதாகக் கூறு போட்டு அதில் மிளகாயும் உப்பும் கலந்த பொடியைத் தூவிக் கொடுப்பான்.

அந்த ருசிக்காக, போட்டி போட்டுக் கொண்டு மாணவ மாணவிகள் அவனிடம் வருவார்கள்.

மாங்காயைப் போல் அந்தந்த சீசனுக்கு ஏற்றாற்போல் பொருள்கள் பலராமன் வண்டியில் இருக்கும்.

காலையில் ஆரம்பித்த இந்த வியாபாரம் சாயங்காலம் நாலரை மணிக்கெல்லாம் முடிந்துவிடும்.

அந்த மாணவ மாணவிகள் மூலம் தினமும் பலராமனுக்கு நல்ல வியா

பாரம். நிறைய லாபம்.

ஈ மொய்த்த பண்டங்களை வாங்கக் கூடாது — என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் — எந்த மாணவ மாணவியரும் கேட்கவே இல்லை.

அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஒருநாள் பலராமனிடம் நேரில் வந்தார்.

“நீ பொருள்களைச் சுத்தமாக வைத்திருக்கவில்லை. நீ கொடுத்த ஈ மொய்த்த பண்டங்களைச் சாப்பிட்டு நேற்றைய தினம் ஐந்து பிள்ளைகளுக்குக் காலரா நோய் வந்துவிட்டது. அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். நீ உடனே இடத்தைக் காலி பண்ணிவிடு” என்றார் கோபத்தோடு.

பலராமன், அந்தத் தலைமை ஆசிரியர் சொன்னதைப் பொருட்படுத்தவே இல்லை. தலைமை ஆசிரியருக்குப் பலராமனது அலட்சியம் ஆத்திரத்தைத் தந்தது. உடனே, சுகாதார அதிகாரிக்குக் கடிதம் எழுதிப் போட்டார்.

கடிதம் கிடைத்ததும் சுகாதார அதிகாரி அங்கு வந்தார். பலராமனையும் அவன் விற்கும் உணவுப் பொருள்களையும் சட்டப்படி பிடுங்கிக் கொண்டு சென்றார்.

தலைமை ஆசிரியருக்கு இப்பொழுது தான் மனம் திருப்தியாக இருந்தது.

மறுநாள் காலையில் பள்ளிக்கு வந்த தலைமை ஆசிரியருக்கு ஒரே ஆச்சரியம்! பலராமன் அதே இடத்தில், அதே ஈ மொய்க்கும் பண்டங்களை வைத்துக் கொண்டு நின்றிருக்க —

அவனைச் சுற்றி மாணவ மாணவிகள் போட்டி போட்டுக் கொண்டு, தின்பண்டங்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

தலைமை ஆசிரியருக்குப் பெரும் கவலை வந்துவிட்டது.

பலராமன் எப்படி வந்தான்? இந்த மாணவ — மாணவிகளுக்கும் புத்தி இல்லையே என்று யோசிக்கும்போது, பலராமனே, தலைமை ஆசிரியருக்குக் ‘குட்மார்னிங்’ போட்டான்.

“நாளையிலிருந்து இந்த இடத்திலே நிரந்தரமாகக் கடை போடப் போறேன். அரசாங்கத்திலே, ஆளைப் பிடிச்சுட்டேனே...” என்று கிண்டல் பண்ணினான்.

‘ஆண்டவா, நீதான் இந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும்’ என்று மனத்திற்குள் பிரார்த்தித்துக் கொண்டு,

பலராமனிடம் ஏதும் பேசாமல் அங்கிருந்து நகர்ந்தார்.

அந்த கார்ப்பரேஷன் பள்ளிக்குப் பக்கத்திலேயே, பலராமன் ஒரு கடைக்கான கட்டடத்தைக் கட்டினான்.

விதவிதமான தின்பண்டங்கள், பலவிதமான பட்டங்கள், மாஞ்சா கயிறுகள், பம்பரங்கள், கோலிகள் எல்லாம் வைத்தான்.

ஆனால் —

குழந்தைகளின் படிப்புக்குத் தேவையான பாடப் புத்தகங்களோ நோட்டுப் புத்தகங்களோ சிலேட்டோ குச்சியோ பென்சிலோ, ஜாமெட்ரி பாக்ஸோ பேனாவோ, மை பாட்டிலோ, ரப்பரோ கிடையாது.

குழந்தைகளின் மனத்தைக் கெடுக்கக் கூடியதும், வயிற்றைக் கெடுக்கக் கூடியதுமான பொருள்களையே விற்பனைக்கு வைத்த பலராமன், அதில் கணிசமான லாபத்தைத் தினமும் அடைந்து கொண்டிருந்தான்.

பலராமனின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகமாயிற்று. பணமும் நிறையச் சேர்ந்தது. காசு இல்லாத குழந்தைகளுக்குக் கடன் கொடுக்க



சித்திரப் புதிர்-21

விடை:

1. சீனா
2. ஆஸ்கார் பரிசு
3. தங்கம்
4. ஆஸ்திரேலியா
5. மோகினி ஆட்டம்



ஆரம்பித்தான். தின்பண்டத்திற்கு ஆசைப் பட்டுக் கடன்பட்ட குழந்தைகள், கடனை அடைக்கத் திண்டாடினார்கள்.

சில குழந்தைகளுக்கு, அப்பா மணி பர்ஸைத் திருடவும் புத்தி பிறந்தது.

சில குழந்தைகள் பலராமனுக்குக் கடன் கொடுக்க முடியாமல் பயந்து பள்ளிக்கும் வருவதில்லை; வீட்டிலேயும் இருப்பதில்லை.

சிலசமயம், பலராமனே, அந்தக் குழந்தைகளின் பெற்றோர் வீட்டிற்குச் சென்று, சண்டை போட்டு, குழந்தைகளுக்குக் கொடுத்த கடனை வாங்கிக் கொண்டு வந்திடுவான். பலராமன் சென்ற பிறகு, அந்தக் குழந்தைகளை அவர்களது பெற்றோர்கள் நையப் புடைப்பார்கள்.

'இப்படியெல்லாம் நடக்கின்ற அநியாயத்திற்கு ஒரு முடிவு இல்லையா?' என்று தினமும் ஆண்டவனிடம் கண்ணீர் விடுவார் அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர்.

அவரது வேண்டுகோளும் வீணாகப் போகவில்லை.

பணம் அதிகமாகச் சேரச் சேர பலராமனின் கெட்ட புத்தி நாளுக்கு நாள் அதிகமாயிற்று. குறைந்த விலையில், கள்ளத்தனமாக விற்கும் கலப்படப் பொருள்களை விலைக்கு வாங்கினான். அதைக் கொண்டு, தானே ஆட்களை வைத்துத் தின்பண்டங்களைத் தயாரித்து விற்றுக் கொண்டிருந்தான். இதனால், அவனுக்கு மேலும் வியாபாரத்தில் கொள்ளை லாபம் ஏற்பட்டது.

அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு வீட்டை விலைக்கு வாங்கினான். பணக்கார இடத்தில் பெண் எடுத்து, கல்யாணமும் செய்து கொண்டான்.

விரைவிலேயே பலராமனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

ஒருநாள் —

பலராமன் விற்ற தேங்காய் மிட்டாயை வாங்கிச் சாப்பிட்ட சில குழந்தைகள் திடீரென்று பள்ளியிலேயே மயக்கம் போட்டு விழ, அவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சேர்த்த தலைமை ஆசிரியர், உடனே போலீஸ் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்

தார்.

போலீஸ் அதிகாரிகள், பலராமன் கடையைச் சோதனை போட்டனர். நிறையக் கலப்படப் பொருள்களைத் தயாரித்து விற்றதாகப் பலராமனைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அப்பொழுதுதான், அவன் குழந்தையும் அதே தேங்காய் மிட்டாயைத் தின்று மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. துடிதுடித்துப் போனான் பலராமன்.

பலராமனுக்கு இப்பொழுதுதான் தான் செய்த தவறு நினைவுக்கு வந்தது. சொத்து பறிபோய், குழந்தைக்கும் ஆபத்து ஏற்பட்டு, தானும் போலீசாரால் கைது செய்யப்பட்டு, அவமானப் பட்டதும், கலப்படப் பொருளைச் சாப்பிட்ட குழந்தைகள் ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதும், —

தான், பள்ளிக் குழந்தைகளை ஏமாற்றியதுதான் காரணம்! அவர்களுக்கு ஈ மொய்த்த பண்டங்களை விற்றுப் பணமாக்கியதுதான் காரணம்.


அவர்களுக்குக் கடன் கொடுத்து, அவர்கள் படிப்பைக் கெடுத்து, அவர்கள் பெற்றோரை இம்சித்து, பணம் வாங்கியதுதான் காரணம்.

தன் பணத்தாசைக்குப் பள்ளிமாணவர்களைப் பலியாக்கியது இவை எல்லாவற்றுக்கும் மூல காரணம் என்று உணர்ந்த பலராமன் 'ஓ'வென்று அழுதான். ஆண்டவனிடம் முறையிட்டான். கதறினான். வேண்டினான். துடியாய்த் துடித்தான்.

மூன்று மாதம் கழித்து சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டான்.

இப்பொழுது பலராமன் ஈ மொய்த்த பண்டங்களையோ, கலப்படப் பொருள்களையோ விற்பதே இல்லை!

ஓவியராகலாம்



துடைப்பம் ஒரு தொண்டன்

—குற. சிவராசன்—



தூசி போக்கித் தூய்மை செய்யும்
　துடைப்பம் என்னும் தொண்டனே!
மாசி லாத உந்தன் மாண்பை
　மனத்தில் எண்ணிப் போற்றுவேன்!

கூட்டிப் பெருக்கிக் குப்பை கழித்துக்
　கொஞ்சும் அழகை வருக்கும்நீ
ஏட்டைப் புரட்டி எண்கள் அறியா
　இனிய கணித மேதைதான்!

இளப்ப மாகஎண்ணி உன்னை
　இகழு பவர்கள் அறிவிலார்;
வளப்ப மான மனைநீ இன்றேல்
　வளப்பி ழந்து போகுமே!

கட்டுத் தேகத் தோடு வந்து
　கட்டை யாகத் தேய்கிறாய்;
பட்டுக் குஞ்சம் உனக்கென் றாலோ
　பரிக சித்துப் பேசுவார்!

உருகி யழியும் மெழுகின் தியாகம்
　உயர்த்திப் பேசும் உலகினர்
குறுகித் தேயும் உன்றன் பெருமை
　கொஞ்சம் எண்ணிப் பார்க்கட்டும்!



கடவுளைக் கண்டவர்கள்



நள்ளிரவில் வந்தவர்

— தேவி நாச்சியப்பன்

'சோ' வென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது. இடி அதற்குப் பக்க வாத்தியம் போல் முழங்கியது. இந் நிகழ்ச்சியை ஒளிப்படம் எடுப்பது போல் மின்னல் கீற்றுத் தோன்றியது. அந்த மழையிலே ஓர் உருவம் நடக்க முடியாமல் தட்டுத் தடுமாறி அருகில் இருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் ஒதுங்கியது.

அந்த வீட்டினுள் இருந்து வந்த சிறிய அகல்விளக்கின் ஒளியே அந்த உருவம் ஒரு சிவனடியார் என்பதைக் காட்டிற்று. அந்த வீடு ஏழை மாறனாருக்கு உரியது.

மழைக்குஒதுங்கியசிவனடியாரைக் கண்ட மாறனார் ஆர்வத்துடன் வெளியிலே ஓடிவந்து இன்முகம் காட்டி வரவேற்றார். அவர் பெரும் செல்வந்தராக இருந்த காலம் முதல் இன்று வரை சிவனடியார்களைப் போற்றி உபசரிக்கும் சிவபக்தராக விளங்கினார்.

ஒரு காலத்தில் பெரும் செல்வத்துடன் விளங்கிய மாறனாரின் குடும்பமோ இப்போது வறுமையில் வாடிக் கிடந்தது. வந்தவிருந்தினரை உபசரிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தும் வழிதான் தெரியவில்லை. வீட்டில் ஒரு மணித்துளி அரிசிகூட இல்லை. என்ன செய்வது என்று மாறனாரும், அவர் மனைவியும் கலங்கினர். பகல் பொழுதானாலும் அருகில் யாரிடமாவது கடன் கேட்கலாம். ஆனால், நடுச்சாமத்தில் என்ன செய்ய முடியும்? மாறனாரின் மனைவிக்கு ஒரு யோசனை தோன்றியது. அன்று பகற்பொழுதில் அவர்கள் வயலில் விதைத்த நெல் மணிகளை அரித்து எடுத்து வருமாறு கணவரிடம் கூறினார்.

மாறனார் சிவனடியாரை நோக்கி, ''மிகவும் களைப்புடன் இருக்கிறீர்கள். இதோ, இன்னும் சிறிது நேரத்தில் சமையல் தயாராகி விடும். தாங்கள் கொஞ்சநேரம்படுத்திருங்கள்'' என்று

கூறிவிட்டு, அந்த நள்ளிரவில் ஒரு கூடையை எடுத்துக் கொண்டு வயலுக்கு ஓடினார். அங்கு வெள்ளத்தில் மிதந்த முளை நெல்லைக் கைகளால் தடவித் தடவி எடுத்துக் கூடையில் போட்டார். பிறகு, கூடையைத் தூக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார். உடனே, அவர் மனைவி அவற்றை நீரில் கழுவினார். பிறகு உரலில் இட்டுக் குத்தினார். அரிசி தயாராகிவிட்டது.

அடுப்பெரிக்க விறகு வேண்டுமே. வறுமையில் வாடிய மாறனார் வீட்டு அடுப்பில் சிலந்தி வலை பின்னியிருந்தது. அந்நிலையில் அவர்களிடம் விறகும் இல்லை. வெளியில் மழை கொட்டுகிறது. தெருவில் இருக்கும் மரத்துண்டுகளும் குச்சிகளும் ஈரமாக இருக்கும். அவற்றை விறகாகப் பயன்படுத்த முடியாது. மாறனார் கணப்பொழுதில் கோடரி எடுத்துத் தன் வீட்டுக் கூரையின் ஒரு பகுதியை வெட்டினார். அதிலிருந்த மரச் சட்டங்களைக் கொண்டு அடுப்பெரிக்கச் சொன்னார். அவர் மனைவியும் அவ்வாறே செய்தார். சோறு தயாரானது. அச்சோற்றுக்கு கறிகாய் வேண்டுமே! மாறனார் தோட்டத்திற்குச் சென்றார். அங்கிருந்த கீரைகளைப் பறித்துக் கொண்டு வந்தார்.


மாறனாரின் மனைவி கீரையின் இலைகளைப் பொரியலாகவும், தண்டினைக் கூட்டாகவும் செய்து இருவிதக் கறிகளுடன் இனிய விருந்தைத் தயார் செய்து விட்டார்.

விருந்தினராக வந்த சிவனடியார் அலுப்பு மிகுதியால் உறங்கிவிட்டார். மாறனாரும் அவர் மனைவியும் அருகில் சென்று பணிவுடன் எழுப்பினர். விழித்து எழுந்த சிவனடியார் சோதிப் பிழம்பாக—சிவபெருமானாகக் காட்சி அளித்தார். ஆனந்தப் பரவசத்தில் மாறனாரும் அவர் மனைவியும் சிவபெருமானை விழுந்து வணங்கினர்.

மாறனார் பெரும் செல்வந்தராக வாழ்ந்தவர். சிவனடியார்களை உபசரித்து உணவளித்து மகிழ்ந்து வந்தவர். அப்படி இருக்கையில் அவரது செல்வம் சிறிது சிறிதாகக் கரையத் தொடங்கியது. அவர் வறுமையில் வாடிய போதும் சிவனடியார்களை உபசரிப்பதில் குறை வைக்கவில்லை. அதை நேரில் காணச் சிவபெருமானே சிவனடியார் வேடத்தில் வந்தார். மாறனாரின் பண்பைக் கண்டு அவருக்குக் காட்சி தந்து அருளினார்.

இந்த மாறனார்தான் சேக்கிழார் பாடிய இளையான்குடி மாறநாயனார். இவர் இளையான்குடி என்ற ஊரில் பிறந்ததால் இப்பெயர் பெற்றார்.

திருடனைக் கண்டுபிடித்தார்!



அப்போது நான் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். என் வகுப்பில் அடிக்கடி பேனா, பென்சில், புத்தகம் போன்றவை திருடு போகும். எந்த ஆசிரியராலும் திருடனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால், எங்கள் தமிழாசிரியர் திருடனைக் கண்டு பிடிக்க ஒரு யுக்தி செய்தார்.

ஒவ்வொரு மாணவனையும் அழைத்து அவன் நெஞ்சின் மீது கை வைத்துப் பார்த்தார். திருட்டு எண்ணம் இல்லாதவர்களின் இதயம் எப்போதும்போல் சாதாரணமாக அடித்துக் கொண்டது. ஆனால் ஒரே ஒருவனின் நெஞ்சு மட்டும் 'திக்.... திக்' என்று மிகவேகமாக அடித்துக்கொண்டது. ஆசிரியர் அவனை அதட்டிக் கேட்டதில், அவனே எல்லாவற்றையும் திருடியதாக ஒப்புக் கொண்டான்.

— கே. நரசிம்மன் (7378),
ஓசூர்

கவிதை பிறந்த கதை:



கவலைப்படாதே காக்கையக்கா!

கவிஞர் ரா. பொன்ராசன்

''எனக்கொரு பேத்தி. அழகான மாநிறம். மைனாக் கறுப்பு. அவளை அவள் தோழிகள் 'காக்காயி, மூக்காயி, கருவாட்டுக் கறுப்பாயி' என்று கேலி பண்ணுவார்கள். உடனே என் பேத்திக்குக் கோபம் வரும். அவள் சிணுங்கிக் கொண்டே என்னிடம் ஓடிவருவாள்...'' என்று கூறும் கவிஞர் ரா. பொன்ராசன் அவர்கள், சிணுங்கிக் கொண்டே வந்த பேத்தியிடம் என்ன கூறியிருப்பார்?

''காரம் ஒரு சுவை. கோபம் ஒரு குணம். அதுபோலக் கறுப்பும் ஓர் அழகு'' என்று பேத்தியிடம் சமாதானம் சொல்லிப் பார்த்தார். ஆனால் அவளோ அழுகையை நிறுத்தவில்லை. உடனே பாட்டனார் அதாவது கவிஞர், ''கண்ணின் மணி கறுப்பு, கடல் கறுப்பு, வானம் கறுப்பு, தூரத்தில் தெரியும் மலையும் கறுப்பு. இப்படிச் சிறப்பானவை எல்லாம் கறுப்பானவையாக இருக்கும்போது, கறுப்பு என்பதற்காக நீ ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்று அன்புடன் அவளைத் தேற்றினார். அப்போது தான் கவிஞரின் பேத்தி சற்று சமாதானமடைந்து, கண்ணீரைத் துடைத்துக்கொண்டுபுன்னகைபுரிந்தாளாம்.

இந்த நிகழ்ச்சி கற்பனையாக மாறி, கவிதையாக வெளிவரத் தூண்டுதலாக அமைந்தது. பாடலைப் பார்ப்போம்:

காக்கையக்கா காக்கையக்கா
கவலைப்படாதே — நிறம்
கறுத்திருக்கே என்று நீயும்
கலங்கி விடாதே!

பார்க்கையிலே கறுப்பினுக்கே
பாதிச் சிறப்பு — நம்மைப்
படைத்தவனே படைத்திருக்கான்
மறந்து விடாதே!



வான நிறம் என்னநிறம்?
வந்து பாருநீ — உலகை
வளைத்தகடல் என்னநிறம்
பார்த்துக் கூறு நீ?

காணும் மலை என்ன நிறம்
கண்டு சொல்லு நீ — இவற்றைக்
கண்டு தேர்ந்து தெளிந்திடவே
கவலைவிடு நீ!

பாடலை மீண்டும் மீண்டும் பாடத் தோன்றுகிறதல்லவா?

காரைக்குடி என்றதும், 'கம்பன் அடிப்பொடி' எனவழங்கும்மாமேதை சா. கணேசன் அவர்களின் நினைவு வராமல் போகாது. ஒருநாள் அவர் இவ்வுலகைவிட்டு மறைந்த போது, தமிழ் இலக்கிய உலகம் கண்ணீர் விட்டு அழுதது. அவர் மறைந்த போது நடந்த இரங்கல் கூட்டத்தில் பேசும் வாய்ப்பு கவிஞருக்குக் கிடைத்தது.

''உலகில் எத்தனையோ பேர் பிறக்கிறார்கள்; இருக்கிறார்கள். பின் இறக்கவும் செய்கிறார்கள். இதில் எத்தனை பேர் இறந்தபின் மற்றவர் நெஞ்சில் நிலைக்கிறார்கள்?

''நம் இரத்த பந்த சொந்தமுடைய தாத்தாவுக்குத் தாத்தாவின் பெயரே நமக்கு நினைவில்லை. அதே சமயம், எத்தனையோ தலைமுறைக்கு முன்னால் வாழ்ந்த திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர் போன்றவர்களை நாம் மறக்கவில்லை!

''சான்றோர்களின் பூதஉடல்வேண்டுமானால் மறையலாம். புகழ் உடல் நின்று நிலைத்திருக்கும்; அது காலம் வென்று வாழும்.''

இப்படிக் கண்ணீர் மல்க கவிஞர், மறைந்த தமிழறிஞருக்கு அஞ்சலி செலுத்தினார். இந்தக் கருத்து கால ஓட்டத்தில் கவிதை வடிவமாக வெளிவரக் காரணமாக இருந்தது; இரங்கல் கூட்டத்தில் பேசிய பேச்சு இனிய கவிதையாக உருமாறி வந்தது, 'அனைத்துலக அதிசயம்!' என்ற தலைப்பில்!



அதிசயமாம் அதிசயம்
அனைத்துலக அதிசயம்
நினைத்துப் பார்க்கும் போதெல்லாம்
நெஞ்சினிக்கும் அதிசயம்!


ஆறுதலை முறைக்கும் முன்னே
வாழ்ந்த நமது தாத்தாபேர்
அம்மா, அப்பா, அண்ணா, அக்கா
யாருக்குமே நினைவில்லை!

நூறு தலைமுறைக்கும் முன்னே
வாழ்ந்த தெய்வப் புலவரை
பாலர் வகுப்புப் படிக்கும் எங்கள்
பாப்பாகூட மறக்கலை!

இரத்த பந்த சொந்தத்தையே
எளிதில் மறந்து போகும்நாம்,
எந்தச் சொந்தம் இல்லாமலும்
என்றும் சிலரை நினைப்பதேன்?

அதிசயமாம் அதிசயம்
அனைத்துலக அதிசயம்...


பேட்டி: பி. வி. கிரி



உண்மை நண்பர்கள்

படக்கதை :- S.K.ராமானுஜம் (ராஜு÷)




புதரில் விழுந்த கிளி பறக்கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தது.
பாபு, இன்னும் கிளியைக்காணவில்லையே என்று தேடத்தொடங்கினான்.
தன் கிளியை, ஒருவன் புதரிலிருந்து எடுப்பதைப் பாபு கண்டான்.
பாபு அந்த ஆசாமியிடம் தன்.... கிளியைக் கொடுத்து விடும்படி மன்றாடினான்.
ஐந்து ரூபாய் கொடுத்தால் தான் உன் கிளியைக் கொடுப்பேன்.
பாபு எவ்வளவு மன்றாடியும் பணம் கொடுக்காமல் கிளியைத்தர முடியாது என்று அவன் கூறிவிட்டான்
பாபு, பலமாதங்களாக உண்டியில் சேர்த்த பணத்தை உடைத்து எடுத்தான்
ஏழை பாபு சேர்த்த பணத்தை அவனிடம் கொடுத்தான்.
அதைக்கண்ட கிளி.... மிகவும் கோபங்கொண்டு அந்த மனிதனைக்கொத்தி கொதறியது. அதனால்
அவன் பயந்து பணம் கூட வாங்காமல்.... ஓடி விட்டான்!
அன்று முதல்... கிளியும், பாபுவும் நண்பர்களாக வாழ்ந்தனர்.



இவரல்லவா அரசர்!

ரஞ்சித் சிங் என்பவர் பஞ்சாப் அரசராவார். அரசர்களிலே அன்புடைமை மிக்கவர் என்று போற்றப்பட்டவர். ஒரு முறை அவர் தம் பரிவாரங்களுடன் புறப்பட்டு ஒரு வீதி வழியே சென்று கொண்டிருந்த போது எங்கிருந்தோ வந்த ஒரு கல் அரசரின் நெற்றியைப் புடைக்கச் செய்து விட்டது.

அரசரின் நிலையைக் கண்ட மெய்க் காப்பாளர்கள் கல் வந்து விழுந்ததற்கான தடயத்தைத் தேடிச் சென்று ஒரு கிழவியை இழுத்துக் கொண்டு வந்து அரசர் முன் நிறுத்தி,

"அரசே! இந்தக் கிழவிதான் கல்லை விட்டெறிந்திருக்கிறாள். தங்கள் நெற்றி காயப்பட்டதற்கு இக்கிழவிதான் காரணம்" என்று கூறினர்.

அச்சமும் பீதியுமுற்ற கிழவி அரசரிடம் "அரசரே! என் மகன் சாப்பிட்டு மூன்று நாட்களாகின்றன. அவன் சாப்பிடுவதற்காகப் பழங்களைப் பறிக்கக் கல்லை விட்டெறிந்தேன். அது தவறி, தங்கள் மீது பட்டு விட்டது" என்று விளக்கினாள்.

இதைக் கேட்ட அரசர், தம் மந்திரியை நோக்கி, இந்தக் கிழவிக்கு ஆயிரம் ரூபாயும் சாப்பாட்டுக்கு உணவும் கொடுத்தனுப்புங்கள்" என்று கூறவே மந்திரி ஆச்சரியமுற்று —

"என்ன அரசே! தண்டனை கொடுக்க வேண்டிய கிழவிக்குப் பரிவு காட்டிப் பணம் வேறு கொடுக்கச் சொல்கிறீர்களே? என்று கேட்க அதற்கு அரசர்,

"உணர்ச்சியே இல்லாத மரம் தன் மீது கல்லை விட்டெறிந்ததற்குப் புசிக்கப் பழங்களைத்தரும்போது, ஆறறிவுபடைத்த — அதுவும் மன்னனான நான் தண்டனையா, கொடுப்பது?" என்று கேட்டார்.

அரசரின் இக்கூற்று மந்திரியையும் கிழவியையும் வியப்புக் கடலில் மூழ்க வைத்தது. அரசரென்றால் இவரல்லவா, அரசர்!

— எஸ். கோபாலகிருஷ்ணன்
(10,546), சின்ன காஞ்சிபுரம்.

இரு மொழிகளில் பழமொழிகள்

PARALLEL PROVERBS

நல்ல ஆரம்பமே நல்ல முடிவாம்
A good begining makes a good ending

காணாமற் போன முயல் பெரிய முயல்
A thing when lost is valued most

நுனி நாக்கிலே அமிர்தம் அடி நாக்கிலே நஞ்சு
A honeyed tongue and a heart of gall

கதைக்குக் காலில்லை.
A lie has no legs



ஒரு காசு பேணின் இரு காசு தேறும்
A Penny saved is a Penny gained

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு
A hasty man never wants woe

அழுகிற பிள்ளை பால் குடிக்கும்
A crying child will get milk

வெளுத்ததெல்லாம் பாலாகுமா?
All are not saints that go to church

துணை போனாலும் பிணை போகாதே
Be security for none

கணக்கமது கைவிடேல்
Care and diligence bring luck

ஏழைகளின் செல்வம் பிள்ளைகளே
Children are poor men's riches

யானை வரும் பின்னே; மணி ஓசை வரும் முன்னே
Coming events cast their shadows before

ஆறிலும் சாவு, நூறிலும் சாவு
Death meets us every where

இறைக்கிற கிணறு சுரக்கும்
Drawn wells are seldom dry

யானைக்கும் அடிசறுக்கும்
Every man hath his weak side

தொகுப்பு: எ. ரசீத் (13402),
கோத்தகிரி

பூங்காவனக் கதையரங்கம்



உள்ளதும் போச்சு!

எஸ். கோகுலகிருஷ்ணன்

இயற்கை வளம் பூத்துக் குலுங்கும் அழகான கிராமம்; அந்த அழகைப் பறைசாற்றும் வகையில் சலசலத்து ஓடும் நதி; அதன் கரையோரத்தில் உயரமாக வளர்ந்திருந்த தென்னை மரங்கள்.

அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில், இதமான தென்றல் காற்று மெல்லத் தவழ்ந்து கொண்டிருந்தது. மொத்தத்தில் அந்த இடம் கவிஞர்களுக்கும், ஓவியர்களுக்கும் உகந்த இடம்.

அங்கு ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்தின் அடியில் கந்தன் என்பவன் சிகை அலங்காரத் தொழில் புரிந்து வந்தான்.

அந்த ரம்மியமான சூழ்நிலையில் அமர்ந்து முடிதிருத்திக் கொள்ள எவர்தான் விரும்ப மாட்டார்? எனவே, அந்த இடம் கந்தனுக்கு நல்ல வருமானத்தை அளித்தது.

கந்தனுக்கும், அவனது மனைவிக்கும் ராமு என்ற மகன் இருந்தான். கந்தனுக்கு ஒருநாளைக்குக் கிடைக்கும் வருமானம் அவனது குடும்பத்திற்குப் போதுமானதாக இருந்தது.

இப்படியிருக்கையில் ஒருநாள் கந்தனின் மனத்தில் ஒரு தகுதியற்ற ஆசை உதித்தது. மற்றவர்களைப் போல் தானும் பெரிய பணக்காரன் ஆக வேண்டும் என்பதே அந்த விபரீத ஆசை. ஆசை யாரைத்தான் விட்டது? கந்தன் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன?

மறுநாள் தனது ஆசையை ஈடேற்றும் வகையில் தனது மகன் ராமுவை அழைத்து அவனிடம் ஒரு ரூபாய் கொடுத்து, ஒரு பரிசுச் சீட்டு வாங்கி வரச் செய்தான். (அதிர்ஷ்டம் என்ற பெயரில் குறுக்கு வழியில் பணக்காரன் ஆவதற்கு ஒரே வழி இது தானே?)

மறுதினம் கந்தன் ஒருவருக்கு 'கிராப்' வெட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது தான் நேற்று வாங்கிய பரிசுச்சீட்டின் நினைவு வந்தது. ராமுவை அழைத்து, அவனிடம் சீட்டைக் கொடுக்காமல், அதன் நம்பரை மட்டும் ஒரு பேப்பரில் குறித்துக் கொடுத்தனுப்பினான்.

அதை எடுத்துச் சென்ற ராமு அருகிலிருந்த டீக்கடையில் பேப்பர் வாங்கிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! பேப்பரில் முதல் பரிசு ரூ. ஒரு லட்சம் பெற்ற எண் கந்தனின் பரிசுச் சீட்டுக்கு உரியதாய் இருந்தது.

உடனே ஓடிவந்து அப்பாவிடம் சொன்னான் ராமு. அதைக் கேட்டதும் கிராப் வெட்டிக் கொள்ள வந்தவரை அப்படியே அரைகுறையாக

விட்டுவிட்டு எழுந்தான் கந்தன். தன் கையிலிருந்த சீப்பு, கத்திரிக்கோல், கத்தி ஆகிய அனைத்தையும் ஆற்றில் தூக்கி எறிந்தான். மற்றும் தன் தொழிலுக்கு உதவும் பெட்டியையும் தூக்கி ஆற்றில் வீசினான்.

"அதிர்ஷ்ட தேவதை கண் திறந்து விட்டாள். இனிமேல் எனக்கு எதற்கு இந்தக் கேவலமான தொழில்!" என்று ஆனந்தக் கூத்து ஆடினான்.

அப்பொழுதுதான், தான் அவசரப் பட்டது அவனுக்குப்புரிந்தது. இவ்வளவுக்கும் காரணமான அந்தப் பரிசுச் சீட்டைப் பெட்டியுடன் தூக்கி ஆற்றில் வீசியது அவன் நினைவுக்கு வந்தது. உடனே ஆற்றிலே குதித்தான். மிகுந்த சிரமப்பட்டுப் பெட்டியைத் தேடிப் பிடித்தான். ஆனால், திறந்து கிடந்த பெட்டிக்குள் பரிசுச் சீட்டு இல்லை.,

ஆற்று வெள்ளம் அதை அடித்துச் சென்று விட்டது. வெகுதூரம் நீந்திச் சென்றும் கந்தன் கண்ணிலே அது தென்படவில்லை.

அதிர்ச்சி என்ற பேரிடி தலையில் விழ அப்படியே ஆற்றங்கரையில் சரிந்தான்.

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. பேராசை கூடாது. எப்பொழுதும் உள்ளதைக் கொண்டு திருப்தி கொள்ள வேண்டும்," என்ற எண்ணங்கள் இப்பொழுதுதான் கந்தனின் மூளையில் பளிச்சிட்டன. இனி என்ன பயன்? கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா?"


"என்னய்யா, இப்படிக்காசைவாங்கிக் கொண்டு அரைகுறையாக நிறுத்தி விட்டாயே! ஒழுங்காய் முடி வெட்டு!" என்று வந்தவர் வேறு திட்டினார்.

பாவம் கந்தன்!

அவனது பேராசையும், அவசர புத்தியும் அவனை, "அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட" நிலைக்கு ஆளாக்கி விட்டது!

மஞ்சள் குருவி

எஸ்.வி.லாவண்யா தேவி (4725)



மஞ்சள் குருவி ஒன்று ஒரு மரத்தின் பெரிய கிளையில் அமர்ந்திருந்தது. அது மிகவும் அழகானது. உடல் மஞ்சள் நிறம். அதில் பழுப்பு நிறக் கோடுகள். மிக அழகான மூக்கு. அதனால், அதற்குத் திமிர் கொஞ்சம் அதிகம். அதன் அருகே இலையால் அமைந்த தொன்னையில் சிறிது வறுத்த தானியம். அதை வைத்துக் கொண்டு, 'இன்று பறவைகளை ஏமாற்றி மகிழலாமா?' என்று சிந்தித்தது.

மனத்தில் ஒரு திட்டம் தீட்டிக் கொண்டது. பிறகு,

'விச்சுக்,' 'விச்சுக்' என்று கூவ ஆரம்பித்தது. அங்கு கொட்டை கொறித்துக் கொண்டு அமர்ந்திருந்த அணில்,

"என்ன குருவியக்கா! கூப்பிட்டாயா?" என்று அருகில் வந்து கேட்டது.

"இல்லையே. நான் எதுக்கு உன்னைக் கூப்பிடணும்? நான் வறுத்த தானியம் வைச்சிருக்கிறதுனாலே நீயே வந்து கேக்கறே! நான் தரமாட்டேன் போ!" என்று ஒன்றும் தெரியாதது போலச் சிடுசிடுத்தது.

உடனே பயந்து போன அணில், அடுத்த கிளைக்குப் போய் விட்டது.

தன்னுடைய வெள்ளைச் சிறகை அசைத்தவாறு அமர்ந்திருந்த புறாவைப் பார்த்து,

'குக்கூ...' 'குக்'... என்றது மஞ்சள் குருவி. உடனே புறா பறந்து வந்து,

"என்ன குருவி, கூப்பிட்டாயா?" என்று கேட்டது.

உடனே குருவி, ''ம்க்கும். நான் எதுக்கு உன்னைக் கூப்பிடணும். நான் வைச்சிருக்கிற வறுத்த தானிய வாசனையிலே ஓடியாந்திட்டியா?'' என்று அழகு காட்டியது.

புரு, கோபத்தை அடக்கிக் கொண்டு திரும்பி விட்டது.

அடுத்து அதன் கண்ணில் பட்டது சிட்டுக்குருவி.

அதையும் திட்டி அனுப்பியது. அது கோபப் பார்வையுடன் சென்று விட்டது.

அடுத்து, கிளியையும் பார்த்து அதன் குரலில் அழைப்பது போல அழைத்து அதைத் திட்டி, மிரட்டி அனுப்பியது.

இதையெல்லாம் ஒரு காக்கை பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தது. காக்கையைப் பார்த்த குருவிக்கு அதையும் ஏமாற்ற எண்ணம் பிறந்தது.

உடனே தன் குரலில் 'கா — கா' என்றது. உடனே, விரைவாகப் பறந்து வந்தது காகம்.

''ஏய் குருவி, என்னை எதுக்காகக் கூப்பிட்டே?'' என்று அதிகாரக் குரலில் கேட்டது காக்கை.

உடனே, மஞ்சள் குருவி பயந்துவிட்டது. ''நான்... நான் உன்னைக் கூப்பிடலையே!''.

''ஏ, குருவி, யாரை ஏமாத்தறே? எனக்குக் கோவம் வந்துடும்!'' என்று பலமாக மிரட்டியது.

''நான் கொஞ்சம் வறுத்த கடலை வைச்சிருக்கேன்'' என்றது குருவி.

''ஓகோ! எடு அதை'' என்றது வீரமாகக் காக்கை.

இதோ என்று தொன்னையைத் தயங்கியபடி நீட்டியது.

உடனே, காகம் ஏமாந்து அமர்ந்திருக்கும் மற்ற பறவைகளான கிளி, புரு, அணில், சிட்டுக்குருவி அனைத்தையும் அழைத்து,

''இதோ பாரு மஞ்சள் குருவி, உனக்குத் தானியம் கிடையாது. என்ன காரணம்னா, நீ திமிர்ப் பிடிச்ச குருவியாயிட்டே. எல்லாரையும் ஏமாத்துற குறும்புக்காரக் குருவியாயிட்டே, நீ செய்து வருவது யாருக்கும் பிடிக்கல்லே. அதனாலே நீ நல்ல குருவியா மாறினா, நாங்க உன்னை எங்க நண்பனா ஏத்துக்குவோம். என்ன, அப்படித்தானே?'' என்று மற்ற பறவைகளைப் பார்த்துக் கேட்டது.


அவைகளும் ''ஆமாம், ஆமாம்'' என்று தலையாட்டின.

உடனே, குருவி அவர்களின் பெருந்தன்மையை உணர்ந்து தலைகுனிந்தது.

''எல்லோரும் என்னை மன்னிச்சிடுங்க'' என்று அழுவது போல மஞ்சள் குருவி விம்மியது. பிறகு, தானே சமாளித்துக் கொண்டு, ''காக்கையாரே, நீங்களே தானியத்தைப் பகிர்ந்து எல்லோருக்கும் கொடுங்க. ஆனா, எனக்கு மட்டும் வேண்டாம்'' என்று கூறியது.

ஆனால், காகம் மஞ்சள் குருவிக்கும் ஒரு பங்கு வைத்துக் கொடுத்தது. மஞ்சள் குருவி மனம் மகிழ்ந்தது.

மஞ்சள் குருவி அன்றிலிருந்து நல்ல குருவியாகி விட்டது!



புதையல் வீடு



டாக்டர் பூவண்ணன்

10. சிற்பி செய்த உதவி

சுமதி ஓடுகிறாள். எவ்வளவு வேகமாக ஓட முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடுகிறாள். பின்னே திரும்பிப் பார்க்கப் பயந்து ஓடுகிறாள். மேலும் ஓட முடியாமல் அருகே தெரிந்த புதரின் மறைவில் மறைந்து கொள்கிறாள். சில நொடிகளில் யாரோ அந்தப் புதரின் செடிகளை ஒரு கையால் விலக்குகிறார்கள். யார் அவர்? சோமு தாத்தாதான்! தாத்தாவின் இடக்கை செடிகளை விலக்குகிறது. வலக்கையில் ஓர் அரிவாள். ''உட்கோயில்ரகசியத்தைத்தெரிஞ்சுக்கிட்ட உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்''. என்று கூறியபடி தாத்தா அரிவாளை உயர்த்தி, சுமதியின் கழுத்தை வெட்டுகிறார். அவள் 'ஐயோ!' என்று அலறுகிறாள்.

படுக்கையிலிருந்த சுமதி திடுக்கிட்டு விழித்து எழுந்தாள். அவள் முன்னே தாத்தா இல்லை. அவள் தன் கழுத்தைத் தொட்டுப் பார்த்தாள். அங்கே ரத்தம் சொட்டவில்லை. அவள் இருக்கும் இடம் புதரல்ல; சித்தி வீடுதான்.

''பயங்கரமான கனவு'' என்று சுமதி முணுமுணுக்கும்போது அவள் உடல் லேசாக நடுங்கியது.

இப்போது அவள் கண்ட கனவு எத்தனையாவது? பத்தாவதா? பன்னிரண்டாவதா? தெரியவில்லை. இரவு முழுவதும் சோமு தாத்தா தன்னை விதம் விதமாகக் கொலை செய்வதாகக் கனவு கண்டு கொண்டிருந்தாள். ''கனவிலே கண்டபடி நனவிலே நடந்து விடுமோ? சோமு தாத்தா என்னைக் கொலை செய்து விடுவாரா?''

சுமதி நினைத்துக் கொண்டிருக்கும் போதே, அவள் அறைக்குள் யாரோ வருவது தெரிந்தது. சுமதி விழிகளைத் திருப்பிப் பார்த்தாள். சித்தி பத்மா அறைக்குள் வந்தாள். ''சுமதி, உன்னைப் பார்க்க யார் வந்திருக்கா, பாரும்மா,'' என்று கூறினாள். பத்மாவின் பின்னேயிருந்து முன்னே வந்தவர் சோமு தாத்தாதான். தன்னைக் கொலை செய்யத் தன் வீட்டுக்குள்ளேயே வந்துவிட்டார் என்று நினைத்தபோது அவள் மேலும் நடுங்கினாள்.

''பார்த்தீங்களா தாத்தா! நேத்து விளக்கு வைக்கிற நேரத்திலே, வீட்டுக்கு வந்ததிலிருந்து இப்படித்தான் பேய் பிசாசைக் கண்ட மாதிரி நடுங்கறா. இவங்க சித்தப்பாவும் ஊரிலே இல்லே. எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலே. ராத்திரியெல்லாம் தூங்கலே. ஏதோ கெட்ட கனவு கண்ட மாதிரி வீல்னு கத்திக்கிட்டு அடிக்கடி எழுந்திட்டா. காலையிலே

டாக்டரிடம் அழைச்சுட்டுப் போலாம்னு இருந்தப்போ, கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி, நீங்க வந்திட்டீங்க. என் மகளுக்கு என்னன்னு பாருங்க.''

''பார்க்கிறேம்மா. உம் மகள் எனக்குப் பேத்தி மாதிரி. அவளை என் குடும்பத்திலே ஒருத்தியா ஏத்துக்கிட்டேன். எனக்குத் தெரிஞ்ச ரகசியம் அத்தனையும் தெரிஞ்சுக்கிற உரிமை அவளுக்கு இருக்கு. அவளுக்கு ஒரு குறையும் ஏற்படாதபடி பெருமாள் காப்பாத்துவார்'' என்று கூறியபடி தாத்தா, சுமதியிருந்த கட்டில் அருகே சென்றார்.

தாத்தா சொன்ன சொற்கள் சுமதிக்குப் புரிந்தன. பத்மாவுக்குப் புரியவில்லை.

தாத்தா சுமதியின் கட்டிலில் உட்கார்ந்தார். ''ஏன், தாயே, உடம்புக்குச் சுகமில்லையா?'' என்று கேட்டபடி, அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். அதற்குள் பத்மா தாத்தாவுக்குக் காப்பி கொண்டுவர வெளியே போனாள். அதைப் பார்த்த தாத்தா மெல்லிய குரலில் பேசினார்.

''தாயே! பெருமாள் கோயிலே சினிமாக்காரங்க வேஷத்திலே வந்தவங்களிடமிருந்து காப்பாத்தினவ நீ. அதனாலே உனக்குத்தான் எல்லா ரகசியங்களையும் தெரிஞ்சுக்கிற உரிமையிருக்குன்னு செங்கோடன் வாதாடினான். ராத்திரியெல்லாம் யோசித்துப் பார்த்து, காலையிலே பெருமாள் சன்னதியிலே திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்தேன். ஒரு சீட்டிலே 'கொல்வது சரி'ன்னு எழுதினேன். இன்னொரு சீட்டிலே 'சொல்வது சரி'ன்னு எழுதினேன். இரண்டையும் பெருமாள் முன் போட்டு, செங்கோடனை எடுக்கச் சொன்னேன். சுமதி தாயே! பெருமாள் என்னைக் கொலைகாரனாக்கவில்லை. செங்கோடன் எடுத்த சீட்டிலே 'சொல்வது சரி'ன்னு வந்தது. அதனாலே உட்கோயில் பத்தின மீதி ரகசியத்தை உனக்கும் செங்கோடனுக்கும் சொல்லணும். வர்றியா, தாயே.''

தாத்தா சொன்னதும், சுமதி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவள், ''வர்றேன், தாத்தா!'' என்று மலர்ந்த முகத்தோடு சொன்னாள்.

பத்மா காப்பி தம்ளருடன் வந்தாள். காப்பியைத் தாத்தாவிடம் கொடுத்துவிட்டு, ''தாத்தா! சுமதியை இங்கிலீஷ் டாக்டரிடம் அழைச்சிட்டுப் போகட்டுமா? இல்லே, நீங்களே ஏதாவது மருந்து கொடுக்கிறீங்களா?'' என்று கேட்டாள்.

சோமு தாத்தாவுக்குச் சித்த மருத்துவம் தெரியும். அதனால் பத்மா அவரிடம் யோசனை கேட்டாள்.

''அதெல்லாம் வேண்டாம் தாயே. சுமதிக்கு ஒண்ணும் இல்லே. இன்னைக்குப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டாம். ஓய்வு எடுத்துக்கட்டும். எல்லாம் சரியாயிடும். சுமதி பகலுக்குள்ளே பழைய சுமதியாய் விடுவா.''

சோமு தாத்தா சொல்லிவிட்டுக் காப்பி குடித்துவிட்டுப் புறப்பட்டார்.

கண்ணதாசனின் ஞாபக சக்தி

கவியரசர் கண்ணதாசன் குழந்தை உள்ளம் கொண்டவர் என்பது பலரும் அறிந்த ஒன்று.

ஒரு சமயம், கவியரசர் தம்முடைய எட்டு வயதுப் பையனைப் பக்கத்தில் கூப்பிட்டு வைத்துக்கொண்டு, அவனுடைய நாலாம் வகுப்புப் பாடப் புத்தகங்களை எடுத்துப் பிரித்து வைத்துக் கொள்ளச் சொன்னார்.

''நல்வழி, கொன்றை வேந்தன், ஆத்தி சூடி எல்லாம் ஒப்பிக்கிறேன். சரியா இருக்கான்னு பாரு'' என்றார்.

ஒரு வரி விடாமல் அப்படியே சரியாய்ச் சொன்னார். இந்த நிகழ்ச்சியில் கவிஞரின் குழந்தை உள்ளம் மட்டும் பளிச்சிடவில்லை; அவருடைய அபார நினைவாற்றலும் வெளிப்பட்டது.

— வானதி ஏ. திருநாவுக்கரசு



புறப்படும்போது, ''சுமதி, பத்து மணிக்குக் கோயிலுக்கு வந்து பெருமாளைத் தரிசிச்சிட்டுப் போம்மா'' என்றார்.

''சரி தாத்தா'' என்று சம்மதித்தாள் சுமதி.

பத்து மணிக்கு முன்பே சுமதி பெருமாள் கோயிலை அடைந்தாள். கோயிலின் வாசற்படி மீதே சோமு தாத்தாவும் செங்கோடனும் உட்கார்ந்திருந்தார்கள். சுமதி அவர்கள் அருகே உட்கார்ந்தாள்.


''நேத்து அனுமார் கோயில் படியிலே உட்கார்ந்து செங்கோடனுக்கு ரகசியத்தைச் சொன்னேன். அதனாலே பின்னாலே நீ மறைஞ்சிருந்து கேட்டதைப் பார்க்க முடியலே. இன்னைக்கு வாசப்படியிலேயே உக்காந்துட்டேன். யாராச்சும் வந்தா பார்க்கலாம், இல்லையா?'' என்று கேட்டார் தாத்தா.

''மன்னிச்சுடுங்க தாத்தா. செங்கோடனைத் தேடிக் கோயிலுக்குள்ளே வந்தப்போ நீங்க மகமத்கானைப் பத்திச் சொல்லிக்கிட்டிருந்தீங்க. நான் அதை என்னையறியாமலே ஒட்டுக் கேட்டுட்டேன். இனிமே, அப்படிப்பட்ட தப்பை எப்பவும் செய்ய மாட்டேன்'' என்றாள் சுமதி. அதைத் தொடர்ந்து ''ஏன் தாத்தா, உட்கோயில் இங்கே இருக்கிறப்போ ஊர்த் தலைவர் முதலிய பெரியவங்க 'உட்கோயில் இங்கே இல்லை'ன்னு பொய் சொன்னது தப்பில்லையா? உட்கோயிலை அவங்களே மறைச்சிருப்பாங்கன்னு நினைக்கறேன். அதைப் பெருமாள் மறைச்சிட்டார்னு பொய் சொன்னது தப்பில்லையா?'' என்று கேட்டாள்.

''தாயே! அவங்க பொய் சொல்லலே. உண்மையைத்தான் சொன்னாங்க. நான் இன்னைக்குச் சொல்லப் போற விஷயம் அதை நிரூபிக்கும். சுமதி, செங்கோடா, ரெண்டு பேரும் கேளுங்க.''

சோமு தாத்தா தொடர்ந்து உட்கோயில் மறைந்த மாயத்தைக் கூறினார்:

''இனிப் பெருமாளே தன் சொத்



தைக் காப்பாற்றிக் கொள்ளட்டும் என்று ஊர்ப் பெரியவர்கள் முடிவு செய்த போது, கோயிலுக்குள் எண் பது வயதான ஒருவர் வந்தார். அவர் விஜயமங்கலத்துச் சிற்பி. அந்தச் சிற்பி யின் பெயர் நல்ல பெருமாள். சிற்பி நல்லபெருமாள் ஊர்ப் பெரியவர்களை அடைந்தபோது, அனைவரும் பெரு மாளின் சன்னதியில் இருந்தார்கள். அவர், ''இன்னும் உட்கோயிலை மறைக்கவில்லையா?'' என்று கேட் டார்.

''உட்கோயில் சிலைகளை மறைப் பதைத்தானே சொல்கிறீர்கள். சிலை களை எப்படி மறைப்பது, எங்கே வைப் பது? என்று புரியவில்லை. அதனால், பெருமாளே அவற்றைக் காப்பாற்றிக் கொள்ளட்டும் என்று விட்டு விட் டோம்,'' என்றார் ஊர்த் தலைவர்.

நல்லபெருமாள் வியப்படைந்தார். ''ஐயா, இந்தக் கோயிலின் ரகசியம் சிற்பி குடும்பத்துக்கும் ஊர்த் தலைவர் குடும்பத்துக்கும் மட்டும் தெரியும். அது எப்படியோ உங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. உங்கள் தந்தையார் இறக்கும் போது நீங்கள் அருகில் இல் லையா?'' என்று கேட்டார்.

''வயல்வெளிக்குப் போன என் தந்தையைப் பாம்பு கடித்து விட்டது. செய்தி எனக்குத் தெரிந்து நான் போவ தற்குள் அவர் இறந்து விட்டார்'' என் றார் ஊர்த் தலைவர்.


''அப்படியா? உங்கள் தந்தையார் ரகசியத்தை உங்களுக்குச் சொல்வ தற்கு முன் இறந்து போய்விட்டார். பாதகமில்லை. என் தந்தையார் என்னி டம் கோயில் ரகசியத்தைக் கூறியிருக் கிறார். உட்கோயிலை நான் மறைத்துக் காட்டுகிறேன். கோயில் கதவுகளை மூடி விட்டு வாருங்கள்'' என்றார் சிற்பி.

கோயில் கதவுகள் மூடப்பட்டன.

ஊர்த் தலைவர், கோயில் தர்ம கர்த்தா, கோயில் காவலர், அர்ச்சகர் ஆகிய நால்வருடன் சிற்பி அனுமார் கோயிலுக்குச் சென்றார்.

''பெரியவர்களே, நம் நாட்டுச் சிற்பிகள் மகாமேதைகள். அவர்களில் ஒருவர்தான் இந்த உட்கோயிலை உரு





கோடையிலே சிறுமி விரும்பும் பழம்!

கோடை காலம் வந்துவிட்டால் தெருவுக்குத் தெரு வண்டிகளில் தர்புசணி விற்றுக்கொண்டிருப்பதைக் காணலாம். இந்தத் தர்புசணி விதைக்கும் பருவம் ஜனவரி, பிப்ரவரி மாதங்களாகும். இந்தத் தர்புசணி பயிருக்கு வடிகால் வசதி, அங்ககச் சத்து நிறைந்த மணல் சார்ந்த நிலம், வெப்பமான சூழல் தேவையாகும். பீர்க்கன், பாகல் போன்று தர்புசணியைப் பாதுகாக்க வேண்டும். 120 நாட்களில் நல்ல மகசூல் கிடைக்கும். தர்புசணியை 90 நாட்கள் கழித்து அறுவடை செய்யக் காத்திருக்கும்போது தட்டிப் பார்த்தால்தெளிவான ஓசை கேட்கும். நிலத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் தர்புசணி காய்ப் பகுதி வெள்ளையிலிருந்து மஞ்சளாக மாறும். பழத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் கொடியும் உலரத் தொடங்கும். இவைதான் தர்புசணி பழுத்திருப்பதன் அடையாளங்கள்.

நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்தே தர்புசணி பயிரிடப்பட்டு வந்ததாக சம்ஸ்கிருத இலக்கியங்களும் எகிப்தியக் கலை நூல்களும் தெரிவிக்கின்றன. தர்புசணிப் பழத்தில் வைட்டமின் 'ஏ' வைட்டமின் 'சி' அடங்கியுள்ளன. குளிர்ச்சியளிக்கும் இந்தப் பழத்தின் எடை 1 கிலோ கிராமிலிருந்து 2 கிலோ கிராம் வரை இருக்கும். ஒரு தர்புசணிச் செடியில் இரண்டிலிருந்து 16 பழங்கள் பழுப்பதைக் காணலாம. சிறியவர்களிலிருந்து பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடும் பழம் தர்புசணி. அட்டைப் படத்தில் தர்புசணியைச் சாப்பிடும் சிறுமி சுமங்கலா.

அட்டை வண்ணப்படம்: யோகா

வாக்கியவர். எப்போதேனும் உட்கோயிலுக்கு ஆபத்து வந்தால் அதிலிருந்து உட்கோயிலை மறைக்க ஒரு வழி செய்தார். இதோ இந்த அனுமார் கோயிலின் முன்னே உள்ள ஐந்து படிகள், தனிப்படிகள் அல்ல. தரைப் பாறையின் ஒரு மேடு. அதைப் படிகளாகச் செதுக்கியுள்ளனர். அதற்குப் பின்னே இருக்கும் அனுமார் கோயில் பூமியோடு ஒட்டாமல் தனியே இருப்பது. இந்தக் கோயில் முழுதும் இருக்கும் இடமே பாறைதான். இந்த இடம் வாயில் பகுதியில் மேடாகவும், மறுபுறம் தாழ்வாகவும் சரிந்து உள்ளது. கோயிலின் நீளத்தால் சரிவு அவ்வளவாகத் தெரியவில்லை. இப்போது அனுமார் கோயிலின் படிகளை மட்டும் உடைத்தெறிந்தால், அனுமார் கோயில் முன்னோக்கிச் சென்று, உட்கோயில் வழியில் உட்கார்ந்து, அதை மறைத்துக் கொள்ளும். அந்த அளவு சரிவு உள்ளது. அந்தச் சரிவில் இறங்கும் படி கோயிலின் அடிப் பாகத்தில் இரண்டு பெரிய உருளைகளை இணைத்து வைத்திருக்கிறார்கள். அவை நம் பார்வைக்குத் தெரியாதவாறு அமைக்கப்பட்டுள்ளன.''

சிற்பி சொல்வதைப் பெரியவர்கள் கேட்டு வியந்தார்கள்.

''எனக்குத் தெரிந்த ரகசியத்தை என் மகனுக்குச் சொல்லும் உரிமை இருக்கிறது. அவனை வரவழையுங்கள். அவனும் நானும் சேர்ந்து இந்த உட்கோயிலை மறைத்துக் காட்டுகிறோம்.''

சிற்பி நல்லபெருமாள் சொன்னபடி அவர் மகன் கேசவன் வரவழைக்கப்பட்டான்.

இருள் மெல்லப் பரவும் நேரத்தில் நல்லபெருமாள் தம் வேலையைத் தொடங்கினார். தொடங்கும்முன் அனைவரும் உட்கோயில் விக்கிரகங்களை வழிபட்டார்கள். இனிப் பல மாதங்கள்—பல ஆண்டுகள் உட்கோயிலுக்கு வர முடியாமல் போகும் என்பதை உணர்ந்து அதற்கேற்ப, பொருள்களை ஒழுங்கு செய்துவிட்டு வந்தனர்.

நல்லபெருமாளும் கேசவனும் தீப் பந்தங்களின் ஒளியில் அனுமார் கோயில் முன்னிருந்த ஐந்து படிகளை

உடைத்தார்கள். உடைக்கப்பட்ட பாறைகளை உடனுக்குடன் அப்புறப் படுத்தினார்கள். படிகள் முற்றிலும் உடைக்கப்பட்டன. படிகள் மறைந்ததும், முற்பகுதியில் அடிப் பாகத்தில் உருளை தெரிந்தது. மற்றோர் உருளை அதன் பின்னே இருக்கும் என்று நல்லபெருமாள் கூறினார். தெரிந்த உருளையின் அடிப்பாகத்தில் சிக்கிய கல்லையும் மண்ணையும் அப் புறப்படுத்தியதும் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது.

அனுமார் கோயில் மெல்ல அசைந் தது. மலைப்பாம்பு ஊர்வது போல் மெதுவாக முன்னேக்கிச் சென்றது. சில நொடிகளில் அதன் வேகம் அதி கரித்தது. கடகடவென்னும் இடி யோசையுடன் அனுமார் கோயில் இரண்டே நிமிடங்களில் முன்னேக் கிச் சென்று, உட்கோயிலின் சதுர வழியில், இறங்கி நின்றது. சாடியின் மூடியைப் போல, உட்கோயிலின் வழியை அனுமார் கோயில் அடைத் துக் கொண்டது. அனைவரும், "பெரு மாளே! கோபாலா! கோவிந்தா!" என்று தலைமேல் கைகுவித்துக் கூவி னர்; கொண்டாடினர்; கூத்தாடினர்.

சிற்பி நல்லபெருமாள் பேசினார்:

"அனுமார் கோயில் உயரத்தில் கால் பகுதி உட்கோயில் வழியில் இறங்கி உட்கார்ந்துவிட்டது. இனிமேல் இதை யாரும் அசைக்க முடியாது. உட்கோயில் செல்வத்துக்கு ஆபத்தில்லை."

"ஆமாம் ஐயா! பெருமாள் தன் சொத்தைக் காத்துக் கொள்ளட்டும் என்று சொன்னோம். ஸ்ரீமந் நாரா யணப் பெருமாளுக்குப் 'பதில் சிற்பி நல்ல பெருமாளாகிய நீங்கள் காப் பாற்றி விட்டீர்கள். நீங்கள் இனிமேல் எங்களுக்கு மற்றொரு பெருமாள்" என்று கூறி ஊர்த் தலைவர் சிற்பியை வணங்கினார். மற்றமூவரும் அவ்வாறே வணங்கினர்.

— சோமு தாத்தா சொல்வதை ஒரு நிமிடம் நிறுத்தினார். பிறகு, "குழந்தைகளே! உட்கோயிலை பெருமாள் மறைத்துவிட்டார் என்று ஊர்த் தலைவர் சொன்னது உண்மை தானே?" என்று கேட்டார்.

செங்கோடனும் சுமதியும் "உண்மைதான்" என்று ஒப்புக் கொண்டனர். தொடர்ந்து, "தாத்தா, உட்கோயில் இங்கே இருக்கிறதாகச் சொல்றீங்க. ஆனால் ஊர்த் தலைவர் இங்கே, இப்போது உட்கோயில் கிடையாது என்று சொன்னாரே, அது பொய்தானே?" என்று கேட்டான் செங்கோடன்.

"அதுவும் உண்மை. உட்கோயில் அனுமார் கோயிலுக்கு முன்னே இல்லை. உட்கோயில் வழியில் உள்ள படி அனுமார் கோயிலை நோக்கிச் செல்லும். உட்கோயில் அனுமார் கோயிலிலிருந்து பெருமாள் கோயி லின் வெளி வாயில் வரை பரவியுள் ளது. மகமத்கான் வந்தபோது அனு மார் கோயில் உட்கோயிலின் வழி யின் மேலே இருந்தது. அதனால் உட் கோயில் அனுமார் கோயிலுக்குப் பின்னே இருந்ததே தவிர முன்னே யில்லை. ஊர்த் தலைவர் அனுமார் கோயிலுக்கு முன்னே நின்று, 'இங்கே இப்போது உட்கோயில் இல்லை' என்று கூறியது உண்மை! சத்தியம்!" என் றார் தாத்தா.

சுமதியும் செங்கோடனும் அதை மறுக்க முடியுமா? ஊர்த் தலைவர் சொன்ன ஒவ்வொரு சொல்லும் உண்மை! வாய்மை! சத்தியம்!"

சிறிது நேர அமைதிக்குப் பிறகு, "தாத்தா! உட்கோயில் இருக்கிறது. ஆனால், அங்கே போக வழியில்லை. இது உட்கோயில் இருந்தும் இல் லாதது போல் இருக்கிறது" என்று வருத்தத்துடன் கூறினாள், சுமதி.

அப்போது தாத்தா, "சிற்பி நல்ல பெருமாள் சொன்னபடி, நம் நாட்டுச் சிற்பிகள் மகா மேதைகள். உட் கோயிலை அமைத்த சிற்பி, மற்றோர் இரகசிய வழியையும் அமைத்திருக் கிறார்" என்றார்.

அதைக் கேட்டதும், சுமதியும் செங் கோடனும் ஆவலுடன், "தாத்தா, அந்த வழி எங்கே?" என்று கேட்ட னர்.

(தொடரும்)

கேளுங்கள்

* முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்று மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்ததாகப் படித்திருக்கிறேன். ஆனால் நாலாவது தமிழ்ச் சங்கம் என்ற ஒன்று மதுரையில் இருப்பதாகக் கூறுகிறார்களே, உண்மையா?

— கே. தருமராசன், விழுப்புரம்

உண்மைதான். பாண்டித் துரைத் தேவரால் 1901—ஆம் ஆண்டு நிறுவப் பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தையே நான்காவது தமிழ்ச் சங்கம் என்று அழைக்கிறார்கள்.

*** வானத்தில் 'சப்தரிஷி மண்டலம்' என்று ஒன்று தெரியுமாமே, அதைப் பற்றிக் கூறுங்களேன்....**

— கோ. இராஜலட்சுமி, திருச்சி—14.

ஒரு பெரிய கலப்பை வடிவத்தில் அமைந்திருக்கும் ஏழு நட்சத்திரங்களையே 'சப்தரிஷி மண்டலம்' என்கிறார்கள். இது ஆகாயத்தின் வடபாகத்தில் தெரியும். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் இந்த நட்சத்திரங்கள் பனிச்சென்று தெரியும். ஆங்கிலத்தில் இந்த மண்டலத்தை கலப்பை (**The Plough**) என்றும், பெரிய கரடி (**The Great Bear**) என்றும் அழைக்கிறார்கள்.

* நாம், நம் தமிழ் எழுத்துக்களை இடமிருந்து வலமாக எழுதுகிறோம். ஆனால், உருது எழுத்துக்களை வலமிருந்து இடமாக எழுதுவார்களாமே!

— ர. மணவாளன், கருங்குழி

உருது எழுத்துக்களை மட்டுமல்ல, அராபிய எழுத்துக்களையும்கூட வலமிருந்து இடமாகத்தான் எழுதுகிறார்கள். சீன மொழி, ஜப்பான் மொழி எழுத்துக்களை எப்படி எழுதுகிறார்கள் தெரியுமா? மேலிருந்து கீழாக!

*** நம் இந்தியாவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரான சுனில் காவஸ்கரின் முகவரியைத் தயவு செய்து கூறுங்கள்:**


— சா. ஆனந்த்குமார், பு. க. பாளையம்.



Mr. Sunil Gavaskar,
Test Crickeeter,
C/o. Bombay Cricket Association,
Wankade Stadium,
Bombay.

*** இரவிலே லைட்டும் இல்லாமல், பெல்லும் இல்லாமல் சைக்கிளில் வந்த ஒருத்தர், என் முழங்காலில் இடித்துவிட்டுப் போய் விட்டார். குணமாக ஒரு வாரம் ஆயிற்று. இரவிலே லைட்டு இல்லாமல், பெல்லும் அடிக்காமல் சைக்கிள் விடலாமா? இது குற்றமில்லையா?**

— டி. சடகோபன், சென்னை — 40.



குற்றம்தான். பெரிய விபத்துக்கள் இல்லையானாலும் இப்படிப் பல சிறுசிறு விபத்துக்கள் அடிக்கடி நேருகின்றன. இதைத் தவிர்க்க வேண்டியது போலீஸாரின் கடமைதான். ஏனோ, அவர்கள் இதில் தீவிரமாக இல்லை.

* செயற்கைக் கிரகத்தை முதல் முதலாகச் செலுத்தியவர்கள் அமெரிக்கரா, ரஷ்யரா?

— சே. பானு, கும்மிடிப்பூண்டி

ரஷ்யர்தான். 1957 அக்டோபரில் 'ஸ்புட்னிக்—1' என்ற செயற்கைக் கிரகத்தை ரஷ்யர்கள் செலுத்தினர். பிறகு, அதே ஆண்டில் நவம்பர் மாதத்தில் 'ஸ்புட்னிக்—2' என்ற செயற்கைக் கிரகத்துடன் 'லைக்கா' என்ற நாயையும் ரஷ்யர்கள் அனுப்பினர்.

அதன்பிறகு 1958 ஜனவரியில் 'எக்ஸ்பிளோரர்' என்ற செயற்கைக் கிரகத்தை அமெரிக்கர் செலுத்தினர்.

*** ரஷ்யாவில் ஒவ்வொரு பள்ளியிலும் நூல் நிலையம் இருக்கும் என்கிறார்களே, உண்மையாகவா?**

— என். சாரதா, திருச்சி — 2.

சொல்லுகிறேன்

ஆம்; சோவியத் நாட்டில் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு நூலகம் இருக்கிறது. இருப்பதோடல்ல; மாணவர்கள் அங்கு சென்று ஆர்வமுடன் புத்தகங்களைப் படித்துப் பயன் பெறுகின்றனர்.

பள்ளிகளைத் தவிர, இளம் முன்னோடிகளின் மாளிகைகளிலும், குழந்தைகள் சங்கங்களிலும், குடியிருப்புக்களை ஒட்டியிருக்கும் அலுவலகங்களிலும் குழந்தை நூலகங்கள் இருக்கின்றன.

மேலும் ஒவ்வொரு பொது நூலகத்திலும் குழந்தைகளுக்கெனத் தனிப் பிரிவும் உள்ளது.


*** வினோபாஜியின் இயற்பெயர் என்ன?**
— வெ. குருசாமி, சிவகங்கை.

அவருடைய பெற்றோர் வைத்த பெயர் விநாயக். ஆனாலும், அவருடைய அம்மா அவரைச் செல்லமாக 'வின்யா' என்றே அழைப்பார். அவரைக் காந்திஜி சந்தித்த பிறகு அவரது சிறப்பை உணர்ந்து காந்திஜி அவருக்குச் சூட்டிய பெயர்தான் வினோபா.

*** நாம் பூமியில் வாழ்வது போலச் சந்திர மண்டலத்திலும் வாழ முடியுமா?**
— எஸ். பாலமுருகன், விருதுநகர்.

முடியாது. அங்கு தண்ணீர் என்பது துளிக் கூட இல்லை. ஈரப்பசையும் கிடையாது. சரி, காற்றாவது உண்டா? அதுவும் இல்லை. பூமியைச் சுற்றி இருப்பது போல் காற்று மண்டலம் என்பதே இல்லை. இந்த நிலையில், பூமியில் உள்ள உயிரினங்கள் அங்கே வாழ்வது என்பது சாத்தியமன்று.

*** ஒரு யானை எத்தனை வருஷங்கள் உயிரோடிருக்கும்?**
— சி. மஞ்சுளா, திருவொற்றியூர்



அடர்ந்த காடுகளில் சுதந்திரமாகத் திரியும் யானைகள் 120 ஆண்டுகள் கூட வாழுமாம். கோயிலிலே வைத்திருக்கும் யானைகள் 80 ஆண்டுகள் வாழலாம். அதிகமாக வேலை செய்யும் யானைகள் 60, 70 ஆண்டுகள் வாழ்வதே சந்தேகம்.

*** நீங்கள் அறிஞர் அண்ணாவைச் சந்தித்துப் பேசியது உண்டா? எத்தனை முறை?**
— ஆர். சந்திரசேகர், காடாம்பாடி.



சந்தித்துப் பேசியதில்லை. மேடையில் அவர் பேச்சைக் கேட்டிருக்கிறேன், பல முறை.


*** எங்கள் சங்கத்தில் உங்கள் புகைப்படம் வைக்க வேண்டும். தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம், தருவீர்களா?**
— என். மாதேஸ்வரன், தலைவர், தாமரை மலர், சிறுவர் சங்கம், தேர்ப்பேட்டை, ஒசூர்.

உங்கள் சங்கத்தில் என் புகைப்படம் வைக்கும் அளவிற்கு நான் இன்னும் உயர்வு பெற்று விடவில்லையே தம்பி. மகாத்மா காந்தி போன்ற தேசத் தலைவர்கள், மகாகவி பாரதியார் போன்ற கவிஞர்களின் படங்களை முதலில் வையுங்கள். அவர்கள் படங்களைப் பார்க்கும் போதெல்லாம், உங்கள் உள்ளத்தில் நல்ல உணர்ச்சிகள் தோன்றும். நல்ல செயல்களைச் செய்யத் தூண்டும்.

*** பாரதியார் பாடல் வரிகளில் தங்களுக்குப் பிடித்தமான வரிகள்?**
— எஸ். லதா, நாட்டரசன்கோட்டை.

கோகுலத்தின் முதல் பக்கத்தைப் பார்த்தாலே தெரிந்து விடுமே!

பிருந்தாவனம்



யார் அவர்?

இவர்களில் ஒருவரை மற்றவர்களுடன் சேர்க்க முடியாது. யார் அவர்?

டாக்டர்
இன்ஜினியர்
குமாஸ்தா
கூலி
பிச்சைக்காரன்
ஆசிரியர்
வக்கீல்

விடை: பிச்சைக்காரன். அவன் தானே ஒரு தொழிலும் செய்யாமல் இருப்பவன்?

— ஏ. ஆர். ஆனந்த் (421),
காரைக்குடி.

மூன்று மலைகள்

ஒசூரில் ஒரே உயரமுள்ள மூன்று மலைகள் வரிசையாக உள்ளன. நடுவில் உள்ள மலைக்கோவிலில் சிவலிங்கமும், வலப்புறம் உள்ள மலைக்கோவிலில் விஷ்ணுவையும், காணலாம். இடப்புறம் உள்ள மலையில் பிரம்மாவின் உருவம் இல்லாத போனாலும், அதை பிரம்மா மலை என்று அழைக்கிறார்கள். நடுவில் உள்ள மலையில் நின்று பார்த்தால், ஒசூர் நன்கு தெரியும்.



— என். மாதேஸ்வரன் (12,950),
ஒசூர்.

சிங்கங்கள்

கீழ்க்கண்ட தலைவர்களின் அஞ்சா நெஞ்சத்தைப் பாராட்டி மக்கள் அவர்களுக்குச் சிங்கங்கள் என்று பெயர் சூட்டினர்.



லாலா லஜபதிராய் — பாஞ்சால சிங்கம்

ஷேக் அப்துல்லா — காஷ்மீர் சிங்கம்.

டி. பிரகாசம் — ஆந்திரகேசரி (சிங்கம்)

— ர. பெருமாள் (12072),
சேலம்—30.

கரடித் தொல்லை

கனடா ஜாஸ்பர் என்னும் உல்லாச மலைநகரத்தில் வசிப்பவர்




களுக்கு கரடிகளின் தொல்லை அதிகம். பக்கத்துக் காடுகளிலிருந்து இரவு நேரத்தில் வந்து இவை குப்பைத் தொட்டிகளைக் கிளறி ஏதாவது தின்னக் கிடைக்குமா என்று பார்க்கின்றன. பிறகு, உணவு வாசனை ஒரு வீட்டிலிருந்து வெளி வருவது தெரிந்தால், உடனே அந்த வீட்டுக் கதவைத் தகர்த்தெறிந்து உள்ளே நுழைந்து விடுகின்றன. இங்கே உல்லாசப் பயணம் வரும் எவரும் சமைக்கக் கூடாது, இனிப்புப் பண்டங்களைக் கொண்டு வரக் கூடாது என்பது விதி. காரணம், கரடிக்கு இனிப்பு என்றால் உயிர்!

— இரா. சுபாஸ் (4235),
எம். களத்தூர்

மற்றொரு பெயர் என்ன?

1. கதிரவனின் மற்றொரு பெயர்: ப — — வ —
2. மேகத்தின் மற்றொரு பெயர்: மு — ல்
3. கடிதத்தின் மற்றொரு பெயர்: மு — — க —



4. குதிரையின் மற்றொரு பெயர்: — சு — ம்

விடை: 1. பகலவன்; 2. முகில்; 3. முடங்கல்; 4. அசுவம்.

— கே. வெங்கடேசன் (4145),
குறிச்சி.

சுலப வழி



"டேய் ராமு, உங்க வீட்டிலே டைப்ரைட்டர் இருக்கா?"

"இருக்குடா. எதுக்குக் கேட்கிறாய்?"

"டீச்சர் கொடுத்த வீட்டுப் பாடத்தை டைப் பண்ணித் தர்றியா?"

— மா. தா. ஸ்ரீதர் (13601),
சென்னை — 106.

பிரதமராயிருந்தவர்கள்

நம் பாரதப் பிரதமர்களாக இருந்தவர்களும் தற்போது இருப்பவரும்:

ஜவாஹர்லால் நேரு
லால்பகதூர் சாஸ்திரி
இந்திரா காந்தி
மொரார்ஜி தேசாய்
சரண்சிங்



மீண்டும் இந்திரா காந்தி
ராஜீவ் காந்தி

— இரா. குரு (16333),
செருவாமணி

விடுகதைகள் பல; விடை ஒன்றே

* அடித்தால் அழுவான்; பிட்டால் சிரிப்பான்.

* உச்சியில் குடுமி உண்டு; மனிதர் அல்ல. உடம்பெல்லாம் உரோமம் உண்டு; குரங்கும் அல்ல; உருண்டை விழி மூன்று உண்டு; சிவனும் அல்ல.

* குடிக்கத் தண்ணீர் உண்டு; குளிக்கத் தண்ணீர் இல்லை.



* குயவர் பண்ணாத பாண்டம். வண்ணார் வெளுக்காத வெள்ளை. மழை பெய்யாத தண்ணீர்

* தாடிக்காரன், மீசைக்காரன் கோவிலுக்குப் போனால் வெள்ளைக்காரன்.

— எஸ். சேகர் (16934), பரனூர்


தெரியுமா?

1. ஒரு நாட்டின் தலைநகர்ப் பெயரும் நாணயத்தின் பெயரும் (கரன்ஸி) ஒன்றே. அது எந்த நாடு? தலைநகரின் பெயர் என்ன?

2. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறந்த நாள் கொண்டாடும் முன்னாள் பிரதமர் பெயர் தெரியுமா?

3. சென்னைத் தொலைக்காட்சியின் வயது என்ன?

4. உலகிலேயே அதிகமாகத் தலைவர்கள் பெயர் கொண்ட மாநிலம் எது?



விடை: 1. பங்களாதேஷ், டாக்கா, 2. மொரார்ஜி தேசாய்; 3. 11; 4. தமிழ்நாடு

— ஆர். ஜெயகௌரி (15013),
சென்னை — 53.

'மை'யால் வருவது?

கல்லாமையால் அறியாமை ஏற்படுகிறது
அறியாமையால் வேற்றுமை ஏற்படுகிறது
வேற்றுமையால் பொறாமை ஏற்படுகிறது




பொறாமையால் பகைமை ஏற்படுகிறது
பகைமையால் ஒற்றுமை குலைகிறது.

— ஆர். மோகன்ஜி (10487),
தஞ்சை — 9.

தாடி மீசைக்காரர்

புதுவையில் பாரதியார் இருந்த போது ஒருநாள் தம் குழந்தைகளை அழைத்துக்கொண்டு கடலை நோக்கிச் சென்றார். அவர்களைக் கடலில் குளிப்பாட்டினார். அலைகள் சீறி எழுந்து வருவதைக் கண்ட குழந்தைகள், பயந்து கரையை நோக்கி ஓடினார்கள். பாரதியார் விடவில்லை. துரத்திப் பிடித்து, கடலுக்குள் கொண்டு வந்தார். தாடி மீசையுடன் இருந்த பாரதியார் இப்படிச் செய்வதைக் கண்ட




ஒருவன், எவனோ ஓர் ஆள் குழந்தைகளைப் பிடித்துக் கடலில் அமுத்திக் கொல்லப் பார்க்கிறான் என்று நினைத்து, சிறிது தூரத்திலிருந்த போலீஸ்காரரிடம் சென்று சொன்னான். போலீஸ்காரர் உடனே அங்கு வந்தார். நெருங்கி வந்ததும் அந்தத் தாடி மீசைக்காரர் யார் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது. மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போய்விட்டார்.

— ஆர்.எம். பெரியாள் (17850),
ஈரோடு

திரையில் முடிவன

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு திரையில் முடியும் சொற்களைக் கண்டுபிடியுங்களேன்.

1. தமிழ் மாதங்களில் ஒன்று
2. உறக்கத்திற்கு மறு பெயர்
3. மருத்துவர் நோய் தீரக் கொடுப்பது
4. பயணத்திற்கு இன்னொரு பெயர்.



5. தபால் தலை மேல் குத்துவது

விடை: 1. சித்திரை; 2. நித்திரை; 3. மாத்திரை; 4. யாத்திரை; 5. முத்திரை.

— க. ஸ்ரீராம் (8477),
நெய்வேலி—1.

சீனர்கள்

சீனர்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பட்டுப் பூச்சிகளை வளர்த்து, அவற்றிலிருந்து நூல் எடுத்து, பட்டுத்துணி நெய்திருக்கிறார்கள்.

காகிதத்தை, முதல் முதலாகத் தயாரித்தவர்களும் சீனர்கள்தான்.

அச்சடிக்க வழி கண்டு பிடித்தவர்களும் சீனர்களே.



வெள்ளைக் களிமண்ணால் கோப்பைகளையும், அலங்காரப் பொருள்களையும் செய்து மண்பாண்டக் கலையிலும் உலகப் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

— ஆர். ராஜா (1006),
சென்னை—17.



சுமதிக்கு ஆபத்தா!

* என் பெயர் கின்னஸ் புத்தகத்தில் வருமா சார்? நான்தான் நடுவே உள்ள 16 பக்க வண்ணப் படக்கதையை 16 முறை படித்து விட்டேனே!

—ச. யோகீந்திரன், குமாரபாளையம்.

* என் நண்பன் எவ்வளவு சொல்லியும் 'பிட்' கேட்கும் பழக்கத்தை விடாதிருந்தான். 'தண்டனையும் மன்னிப்பும்' கதையைப் படித்து இப்போது திருந்தி விட்டான்.

— ஜி. ரவிசங்கர் (10,092), சேலம் — 1.

* என் வகுப்பு மாணவர்களுக்குப் பெரிய புராணம் (அப்பூதி அடிகளார் சரித்திரம்) நடத்தும்போது, கோகுலம் ஜூன் இதழில் வந்த வண்ணக் கதையைக் காட்டி நடத்தினேன்.

— இரா. ச. கோமதிநாயகம், இராஜபாளையம்.

* தங்கள் தலையங்கம் எங்கள் நீண்ட நாளைய ஏக்கங்களை நீக்குமென நம்புகிறோம். நன்றி.

— என். சந்திரசேகரன் (16,108), கோட்டாத்தூர்.

* 'அருமைச் சிறுவர் சிறுமியரே' தலையங்கம் வருங்கால இளைய தலைமுறையினரின் நன்மைக்கும், அதன் மூலம் நல்ல சமுதாயம் அமைவதற்கான வாய்ப்புக்கும் வழிகாட்டியுள்ளது.

— இடவை. செம்பியன், சீர்காழி.

* கடந்த இதழ் தலையங்கம் கண்டு மகிழ்ந்தேன். குழந்தைகளின் நலனில் இவ்வளவு அக்கறை உள்ள கோகுலத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

— பேராவி விஜி, கொச்சி — 4.

* குழந்தைகளுக்காகவே அரிய திட்டங்களைக் கொண்டு வரும் கோகுலத்தை எங்கள் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

— சி. எல். சரவணன் (706), மதுரை — 1.

* தெலுங்குச் சிறுவர்கட்கு ஆந்திர மாநில அகாடமி ஆற்றும் பணிபோல், அளிக்கும் உதவி போல், நம் முதல்வரும் விரைவில் ஏற்பாடு செய்து கொடுத்தால் மிகமிக நலமாக அமையும்.

— ஏ. நாராயணன், கற்பூரம் பதிப்பகம், சேலம் — 3.

* 'வாய்ப்புண் வராமல் தடுப்பது எப்படி?' கட்டுரை மிக்க பயனளிக்கக் கூடியதாய் அமைந்தது. இதழ் வாங்கியவுடன் எங்கள் வீட்டில் அனைவரும் அதைத்தான் படித்தனர். டாக்டர் கு. கணேசன் அவர்களுக்கு மிக்க நன்றி.

— எஸ். கே. கோகிலாமணி (10,122), திருமங்கலம் — 626 709.

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' இப்பகுதி தான் எனக்கு மிகவும் பிடிக்கிறது.

— ராஜேந்திரபிரியன், உறையூர்.

* பழமொழிப் புதிர் மூளைக்கு வேலை தருகிறது. சிறப்பான அம்சம்.

— எஸ். ரவீந்திரன், சென்னை — 4.

* தங்களது எஜமானிக்காகத் தங்களது உயிரையே விட்ட 'டாடா டூடீ'க்கு என் கண்ணீரால் அஞ்சலி செலுத்தினேன்.

— கே.ச. பக்தவத்சலம் (6426), விருத்தாசலம் — 2.

* இரு மொழிகளில் பழமொழிகள் பயனுள்ள பகுதி. அவற்றை நான் படிப்பதோடு மட்டுமல்லாமல், வழக்கில் அவ்வப்போது பயன்படுத்தியும் வருகிறேன்.

— கவிநிலா, கோட்டாத்தூர்.

* பெருமாளின் திருவிளையாடல் மெய் சிலிர்க்க வைத்த நேரத்தில் நிலைகுலையச் செய்தது இந்த அத்தியாயத்தில் காணப்படும் முடிவு. சுமதிக்கு ஆபத்தா? உடனே காப்பாற்றுங்கள்.

— ஜெ. முத்துக்குமார் (16,379), கோவில் பட்டி.

* ஈசாப்பைப் பற்றிய மூன்று மின்மினிக் கதைகளும் முக்கனிகள்.

— வெ. தமிழ்ச்செல்வன் (14,391), நன்செய்புகழூர்.

* சிவனடியார்களை விளக்கும் கதைகள் மிகவும் அற்புதம்!

—எம். ஏ. சுப்ரமணியன், முருகன்புதூர்.

* 'பொங்கல் வாழ்த்து' கதை என் உள்ளத்தைத் தொட்டது. சென்ற பொங்கல் சமயத்தில் நான் என் நண்பர்களுக்கு அனுப்பிய வாழ்த்துக்கள் அனைத்தும் நான் வரைந்து அனுப்பியவையே!

— எஸ். கனகராஜ் (1174), கவற்குளம் தேரிவிளை.

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரிவட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473389.

... ரூ. 100/—; ... ரூ. 250/—.

Registered as a Newspaper in Sri Lanka



வி.கோ. சூரியநாராயண

சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்)

தோற்றம்: 6.7.1870

மறைவு: 2.11.1903